www.padippakam.com

# ஈழத்து வாழ்வும் வளமும்

ஈழத்து வாழ்வையும் வளத்தையும் சொந்த நாட்டவர்க்கு உணர்த்துவதோடு பிற நாட்டவர்க்கும் எடுத்துக்காட்டும் சிறந்த நூல்

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்து வாழ்வும் வளமும்

இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கழகத்தின் ஆதரவுடன் பதிக்கப் பெற்றது.

## கலாநிதி. க. கணபதிப்பிள்ளை

பேராதனைப் பல்கலைக் கழக முன்னாள்
தமிழ்த் துறைப் பேராசிரியர்

விற்பனை உரிமை:

பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை 600108

படிப்பகம்

www.padippakam.com

ஈழத்து வாழ்வும் வளமும்
முதற்பதிப்பு: 1962
குமரன் இரண்டாவது பதிப்பு: பிப்ரவரி 1996
(C) திருமதி ம. கணபதிப்பிள்ளை

விலை ரூ. 28-00

| | | |
|---|---|---|
| Title | : | EELATHU VALVUM VALAMUM |
| Author | : | Dr. K. Kanapathi Pillai |
| No. of Pages | : | 158 |
| Paper | : | 10.5 Kg. Creamwove |
| Types | : | 10 Point |
| Price | : | Rs. 28-00 |
| Publishers | : | KUMARAN PUBLISHERS,<br>79, 1st Street, Kumaran Colony,<br>Vadapalani, Madras-26. |
| Printers | : | Chitra Printo Graphy<br>Madras-14. |

படிப்பகம்

www.padippakam.com

## மீள் பதிப்பின்

# பதிப்புரை

முப்பத்து நாலு ஆண்டுகளின் பின்னர் இரண்டாவது பதிப்பாக இவ்வரிய நூல் வெளிவருகிறது.

கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராக இருந்தவர். அதே பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் கீழைத்தேயக் கல்விப் போதனா பீடத்தலைவராகவும் கடமையாற்றியவர். இலங்கையில் ஒரு புதிய தமிழ் அறிஞர் பரம்பரையைச் சிருட்டித்துவிட்டு 1968ல் மறைந்து விட்டார்.

இந்நூலின் மீள்பதிப்புக்கு அனுமதியளித்த திருமதி. ம. கணபதிப்பிள்ளை அவர்கட்கு எங்கள் நன்றி.

மேலும், இந்நூலினைப் பதிப்பிக்க ஆதரவு நல்கிய இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கழகத்திற்கும் அதன் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்களுக்கும் எங்கள் அன்பு. நூலின் முதற் பிரதியை கொழும்புத் தமிழ் சங்க செயலாளர் திரு. கந்தசாமி அவர்கள் தந்துதவினார்கள்.

இந்நூலுக்கு முன்னுரை அளித்த பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களின் மாணவரான பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கட்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

சென்னை
20-2-96

**குமரன் பதிப்பகம்**

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

இலக்கியம், இயக்கங்களின் முன்னோடி என்பர். ஒரு நாட்டில் ஏற்படும் இலக்கிய விழிப்புணர்ச்சியும் தேசிய எழுச்சியும் ஒன்றுக்கொன்று காரணமாய் அமைவதுமுண்டு. ஈழத்தில் இன்று ஏற்பட்டு வரும் இலக்கிய விழிப்புணர்ச்சிக்கு வித்திட்டவர்களுள் பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை அவர்கள் முதன்மையானவர். ஆராய்ச்சிப் பேரறிஞராகவும், ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும் திகழும் இப்பேராசிரியரே முதன்முதலில் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் நாடகம் எழுதி வெற்றி பெற்றவராவர். அவர்தம் மொழியியற் புலமை தமிழுலகறிந்ததே.

தமிழையே தாய் மொழியாகக் கொண்ட மக்களிடையே யும் ஈழ நாட்டவர்க்கே உரிய சிறப்பான பண்புகள் பல உள. ஈழத் தமிழரிடையேயும் பிரதேசத்திற்குப் பிரதேசம் வாழ்க்கை முறைகளிலும் பழக்க வழக்கங்களிலும் வேறுபாடு களைக் காணலாம். இவற்றையெல்லாம் ஆய்ந்து கூறும் நூல்கள் தமிழில் இல்லையென்றே கூறலாம். இந்நூலிலுள்ள பேராசிரியரது சில கட்டுரைகள் இத்துறையில் முதற்கல்லாக விளங்குகின்றன.

தமிழ் மொழியையும் தமிழர் பண்பாட்டையும் ஆராய்ந்து கற்ற பேராசிரியர் தனது பிறந்தகமான யாழ்ப்பாணத்தின் வாழ்வில் ஊறித் திளைத்தவர். ஈழத்து வாழ்வின் பேரிரசிக னாகவும், சிறப்பாக யாழ்ப்பாண வாழ்வு முறையின் தலைசிறந்த அபிமானியாகவும் விளங்கும் பேராசிரியரது பண்புகளை இந்நூலிலுள்ள பல கட்டுரைகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஈழத்து வாழ்வையும் வளத்தையும் சொந்த நாட்ட வர்க்கு உணர்த்துவதோடு பிற நாட்டவர்க்கும் எடுத்துக் காட்டும் வகையில் இந்நூலிலுள்ள கட்டுரைகள் அமைந் துள்ளன. எனவே இந்நூல் தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதினதும் நன் மதிப்பைப் பெறும் என்று நம்புகிறோம்.

கொழும்பு
18—4—'62

**பாரதி புத்தகசாலையினர்**

www.padippakam.com

ஈழத்து வாழ்வும் வளமும்

மீள் பதிப்புக்கான

# முன்னுரை

இந்தச் சிறு நூல், முதற்பதிப்பு வெளிவந்து முப்பத்து நான்கு வருடங்களின் பின்னர் இப்பொழுது (1996) மீள் பதிப்புக்காண்கின்றது. பேராசிரியர் கணபதிப்பிள்ளை (1903-1968) மறைந்த இருபத்தெட்டு ஆண்டுகளின் பின்னர் அவரைப்பற்றியும், அவரது ஆக்கங்களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கான ஒரு புலமை அவா இன்று காணப் படுகிறது.

இந்த மீள் பதிப்பில் மகிழ்ச்சிகரமான ஒரு மீள் வருகை யும் காணப்படுகிறது. 1961, 62 இல் இத்தொகுதியினைத் தொகுத்தவரும், அதனை அச்சிற்பதிப்பித்தவருமாகிய அதே இருவரும், இந்த மீள் பதிப்பிலும் ஆபந்தப்படுகிறோம். நண்பர் செ. கணேசலிங்கன் தான் இதனை 1962 இல் சென்னையிற் பதிப்பித்தவர். நூலுக்கான கட்டுரைகளைத் தொகுக்கும் பொறுப்பு என்னுடையதாக இருந்தது. அப்பொழுதுநான் சாஹிறாக் கல்லூரி ஆசிரியப் பதவியினின் றும் நீங்கிப் பாராளுமன்றத்திற் சமநேர மொழிபெயர்ப்பாள ராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

இந்த நூல் வெளிவந்த அதே வேளையிலேதான் பேராசிரியரின் கவிதைத் தொகுதியும் வெளிவந்தது.

படிப்பகம்

www.padippakam.com



''தூவுதும் மலரே'' என்ற பெயரின் கீழ் அந்தத் தொகுப்பி னைச் செய்தவர் கைலாசபதி. ''அம்பலத்தான்'' என்பது கைலாசபதியின் புனைபெயர். அதற்குக் கைலாசபதி அம்பலத்தான் என்ற புனை பெயரில் ஒரு தொகுப்புரை வழங்கியுள்ளார். அந்நூல் அக்காலத்தில் யாழ்ப்பாணம், கண்டியிற் பிரசித்தி பெற்று விளங்கிய பிரசுரகர்த்தர்களாகிய ''கலைவாணி'' அச்சகத்தினராலே பதிப்பிக்கப் பெற்றது. (1962) ''ஈழத்து வாழ்வும் வளமும்'' என்ற தொகுப்புக் கான கட்டுரைகளைத் தொகுத்து அதற்கான பதிப்புரையை நான் எழுதியிருந்தேன். ''பாரதி புத்தக சாலை'' என்பது நண்பர் கணேசலிங்கன் அப்பொழுது நடத்திய நிறுவனம்.

முப்பத்து நான்கு வருடங்களின் பின்னர் அப்பதிப் புரையை இன்று மீள நோக்கும்பொழுது, அதனையே அது உள்ளவாறே, நூலின் 'முன்' உரையாக விடலாம் போலத் தோன்றுகின்றது. ஆனால் முப்பத்து நான்கு வருடம் கால வளர்ச்சிப் போக்குகளின் பின்னணியிலே நோக்குகின்ற பொழுது, இன்றைய நிலையில், சில விடயங்களைத் தெளிவு படுத்தவேண்டிய தேவையொன்று இருப்பதை உணர் கின்றோம்.

முப்பத்து நான்கு வருடக்கட்குப் பின்னரும், இந்நூலைப் போல ஈழத்தின் தமிழ்ப்பண்பாட்டைத் தொகுத்துத்தருகின்ற நூல் வேறெதுவும் இல்லையென்றே கூறல் வேண்டும். இக்காலப் பகுதியிலே, பிரதேசங்கள் பற்றிய சிறப்பாய்வுகள் பல வந்துளவெனினும் இந்நூலைப் போன்று ஈழத்துத் தமிழரின் பண்பாட்டின் சகல அம்சங்களையும் இணைத்துத் தருகின்ற ஒரு தொகுதி வேறு இல்லை என்றே கூறல் வேண்டும்.

இந்த உண்மை 1980ல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தில் இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் பற்றிய கருத் தரங்கு நடைபெற்றபொழுதும் (அக்கருத்தரங்கு பேராசிரியர்

www.padippakam.com



கணபதிப்பிள்ளை நினைவுக் கருத்தரங்கு என்ற பெயரிலேயே நடத்தப் பெற்றது) பின்னர் 1993 இல் இந்துக் கலாசார அமைச்சு நடத்திய நாட்டார் வழக்கியற் கருத்தரங்கிலும். வலியுறுத்தப்பட்டது.

மானிடரியல், வரலாறு, சமூகவியற் கண்ணோட்டங் களை உள்ளடக்கி நாட்டார் வழக்குகளைத் தொகுக்கும் ஒரு வழக்கு யாழ்ப்பாணம்; மட்டக்களப்பு, வன்னிப் பிரதேசத் துக்கு இன்னும் பூரணமாகச் செய்யப்படவில்லை. மலையகப் பண்பாட்டு நிவரணத்துக்கான ஒரு முன் மாதிரியாக இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும் தொகுதி 1 கொழும்பு உதயம் நிறுவனத்தினால் 1993 இல் வெளியிடப் பெற்றுள்ளது.

ஈழத் தமிழர் என்று குறிப்பிடப் பெறும் இலங்கையின் பாரம்பரியத் தமிழர் பற்றிய ஒரு பூரணமான பண்பாட்டு வரலாறு இன்னும் வெளிவரவில்லை. அத்தகைய ஒரு நிலையிலேதான் இக்கட்டுரைத் தொகுப்பு ஒரு முக்கியத் துவத்தைப் பெறுகின்றது. ,

இக்கட்டுரைத் தொகுதியில் வரலாறு, இலக்கிய வரலாறு, உயர்பண்பாட்டிற் பேசப் பெறும் கலைக் கூறுகள், ஈழத்து இலக்கிய வளர்ச்சி (அதில் முக்கிய இடம் பெறுவோர்), ஈழத்துத் தமிழர் நாட்டார் வழக்காறுகள் பற்றிய கட்டுரைகள் இடம் பெறுகின்றன. இந்த நூலின் பலமும், இதன் அசாதாரணத் தன்மையும் இது பண்பாட்டின் உயர் நிலைக் கூறுகளையும் அடிநிலைக் கூறுகளையும் ஒரே நேரத்தில் ஒரே ஆய்வுமைய்த்துள் வைத்துக் கூறும் திறனாகும். யாழ்ப்பாணத்தின் பண்பாடு என்று பேசும்பொழுது ஆறுமுக நாவலரையும், சி.வை. தாமோதரம்பிள்ளையையும் எத்தகைய பெருமித உணர்வுடன் குறிப்பிடுகின்றாரோ அத்தகைய பெருமித உணர்வுடன் அடுப்பு நாச்சி வழி பாட்டையும் கொத்தி வழிபாட்டையும் குறிப்பிடுவார்.

www.padippakam.com



ஆகம வணக்க முறைகள் பற்றிப் பேசும். அதே வேளையில் நாட்டார் நிலை வழிபாடுகள் பற்றியும் விரிவாகப் பேசுவர், சைவப் பாரம்பரியத்தின் உயர்ச்சியை எடுத்துக் கூறும் அதே வேளையில் கிறித்தவத்தின் வழியாக வந்த இலக்கிய, சிந்தனை ஊட்டங்களையும் மிக நிதானமாகப் பதிவு செய்துள்ளார். யாழ்ப்பாணத்தின் வரலாறு, வழக்காறு களைப் பற்றிப் பேசும்பொழுது, மட்டக்களப்பு வரலாறு வழக் காறுகளுடன் ஒப்பு நோக்கியும், வன்னிநடை முறைகள்பற்றி விவரித்தும் செல்கின்ற ஒரு பண்பினை அவதானிக்கலாம்.

இலங்கைத் தமிழர் பண்பாட்டை இவ்வாறு கேசாதிபாத மாகப் பார்த்து, இப்பண்பாட்டின் சிகரங்களையும், வேர் களையும் எடுத்துக் கூறி, இந்தப் பண்பாட்டின் கோல முழுமையையும் ஒருசேர வைத்து நோக்கிய மனப்பாங்கு பேராசிரியர் கணபதிப்பிள்ளையிடத்தேயே முதன் முதலில் தெரிய வருகின்றது. இந்த ஒரு நோக்குச் செம்மைக்காக இவர் எமது புலமைப் பாரம்பரியத்தில் மிக முக்கியமான ஒருவராக மேற் கிளம்பி நிற்கின்றார்.

அவர் வாழ்ந்த காலத்தில் உணரப்படாத இவ்வுண்மை இன்று அவர் மறைந்து இருபத்தெட்டு வருடங்கள் கடந்த நிலையில் நன்கு புலனாகின்றது.

எனவே ஈழத்தின் வாழ்வும் வளமும் என்ற இந்நூலின் மீள் பதிப்பு மகிழ்ச்சி தரும் ஒரு சம்பவமாக அமைகின்றது. இதன் வெளியீட்டிலும் மீள் பதிப்பிலும் சம்பந்தப்படுதல் ஆத்ம நிறைவையும் புலமைத் திருப்தியையும் தருகின்றது.

பேராசிரியர் கந்தசாமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை (1903—1968)யின் வாழ்க்கை வரலாற்றினைத் தரும் நூல், விரிவான நூல் எதுவும் இல்லையெனலாம். அவரது மாணவர்களில் ஒருவராகிய த. சண்முகசுந்தரம் எழுதிய ''கலையருவி கணபதிப்பிள்ளை'' என்ற ஒரு சிறு நூல் மாத்திரம் உளது. (1974-68 பக்கங்கள்)

படிப்பகம்

www.padippakam.com



இவர் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலும் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் கடமையாற்றியவர். இந்தோ ஆரிய மொழிகளிற் சிறப்புப்பயிற்சி பெற்ற இவர் முதற்பட்டத்தின் பின்னர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டமும் (1931-32), இலண்டன் பல்கலைக் கழகக் கீழைத்தேய, ஆபிரிக்க ஆய்வுப் பள்ளியில் கலாநிதிப்பட்டமும் (1933-1935) பெற்றவர்.

இவரது பல்கலைக்கழக முன் கல்வியும் பல்கலைக்கழக ஆய்வுப் பயிற்சியும் அக்காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த பாரம்பரிய ஈழத்தமிழறிஞர். (முத்துக்குமார சுவாமிக் குருக்கள்) பாளி, சமஸ்கிருத அறிஞர் (ஜி.பி. மலலசேகர, நம்புக்வெல்ல சித்தார்த்தா), தமிழறிஞர்கள் (சுவாமி புலானந்தர், சோமுவந்தான் விகந்தசாமிப்பிள்ளை, ரா. பி. சேதுப்பிள்ளை) கீழைத்தேய ஆய்வியல் வல்லுநர்கள் (றால்ஃப் ரேணர், எல்.டி. பாணெற்) பலரது கண்காணிப் பின் கீழ் வளர்ந்தனவாகும். கணபதிப்பிள்ளை இந்த இரு பெரும் ஆய்வு மரபுகளின் இணை நிலை வடிவமாக விளங்கினார். இந்தப் பெரும்பாக்கியம் எல்லோர்க்கும் கிடைக்க கூடியது அன்று.

இம்முன்னுரை அவர் பற்றிய முழுத் தகவலையும் வெளிக் கொணர்வதற்கான சாதனமாக அமைதல் முடியாது. ஆனால் அவரது ஆய்வு ஈடுபாடுகளையும் படைப்புத் திறனையும் சுட்டிக் காட்டாமல் விடவும் கூடாது. ஆய்வியல் துறையில் இவர் ஈடுபட்டிருந்த விசயங்கள் பின்வருமாறு.

I. தமிழிற் கல்வெட்டாராய்ச்சி.
   இத்துறையின் முன்னோடி ஆய்வாளர்களுள் இவர் ஒருவர்.

II. இலங்கைத் தமிழ்க் கல்வெட்டாராய்ச்சி
   இத்துறையின் பிதாமகர், பின்வந்த இத்துறை ஆய்வாளர்களின் ஆசிரியர்.

www.padippakam.com



III. மொழி ஆய்விற் குறிப்பாக ஒலியியல் பற்றிய ஆய்வு (Phonology)

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கின்
ஒலியமைப்புப் பற்றிய ஆய்வு

IV. ஈழத்துத் தமிழர் வாழ்வியல்
ஈழத்துவாழ்வு பற்றிய பண்பாட்டு
மானிடவியற் குறிப்புக்கள்

V. ஈழத்துத் தமிழர் வரலாறு

VI. ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு.

ஆய்வுத் துறையைவிட, படைப்புத் துறையில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது.

படைப்புத் துறையில் நாடகமே இவரது பிரதான ஆக்கத்துறை எனலாம். இலங்கைத் தமிழ் நாடக வரலாற்றில் இவரது படைப்புக்கள் ஒரு முக்கிய மைல் கல் எனலாம். நானாடகம் (1940) இரு நாடகம் (1952) எனும் நாடகத் தொகுதிகளும் சங்கிலி (1956) எனும் வரலாற்று நாடகமும், பிரசுரிக்கப்பட்டுள்ளன. பிரசுரிக்கப்படாத சுந்தரம் எங்கே (1955), துரோகிகள் (1956) என்பன மிக முக்கியமானவையாகும். இவருடைய நாடக ஆக்கங்களை, இன்று, பின்னோக்கிப் பார்க்கும் பொழுது, இவர், இலங்கையின் அரசியல் நாடக ஆசிரியராக மேற் கிளம்புவதை அவதானிக்கலாம். அரங்கத்தேவைகளை மனக்கொண்டு எழுதப்பட்டனவாகையால், இவரது நாடகங்கள் ''வாசிப்பதற்குரிய'' வகையினன்று, அரங்க ஆற்றுகையிலேயே கலை முழுமையைப் பெறும் வகையில் அமைந்தனவாகும்.

இவரது கவிதைப் பயில்வு மரபுப்புலமையின் செய்யுளியற்றற் பாரம்பரியத்தில் வருவது எனலாம். யாப்புக்

www.padippakam.com



கையாளுகையைப் புலமைச் சவாலாக ஏற்றுக் கொண்டு கவிபாடிய இவர் (இவரது ''மாணிக்க மயில்ச்'' செய்யுள்களை நோக்குக) யாழ்ப்பாணத்து வாழ்க்கை மரபினையும் செய்யுள் வடிவில் தந்துள்ளார் (தீவட்டிக் கள்ளர், சீதனக் காதை), ''காதலி யாற்றுப்படை'' எனும் செய்யுள் நூல் இந்நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலிருந்த யாழ்ப்பாணம் பற்றிய விவரணச் சித்திரம் எனலாம். பூஞ்சோலை என்னும் நாவலில் வரும் அவரது கவிதைகள் நெஞ்சைத் தொடுவன.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை ''வாழ்க்கையின் வினோதங்கள்'' (1954) 'பூஞ்சோலை' (1953) என்னும் இரு நாவல்களை எழுதியுள்ளார். முதலாவது பிரஞ்சு நாவல் ஒன்றினதும், இரண்டாவது ஜேர்மன் நாவல் ஒன்றினதும் வழி வந்தவையாகும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் மிகப் பெரிய சாதனை, அவர் தோற்றுவித்த புலமைப் பாரம்பரியமே. ஈழத்தில் கல்வெட்டாய்வியல்; நாடகம், ஈழத்துத் தமிழியலாய்வு என்னும் துறையில் இன்று முன்னணியில் நிற்கும், ஆய்வாளர்கள் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் மாணவர்களே.

இவரது மாணவ பாரம்பரியத்தை நோக்கும் பொழுது ஒவ்வொரு துறையிலும் இவர் கொண்டிருந்த கண்ணோட்டங்களை மேற் கொள்பவர்களாகவும், அக்கண்ணோட்டத்தின் தருக்க ரீதியான அடுத்தபடிக்குச் சென்றவர்களாகவும் இவரது மாணவர்கள் விளங்கி வந்துள்ளமை குறிப்பிடப்பட வேண்டியது. பேராசிரியர்கள் வித்தியானந்தன், கைலாசபதி, சிவத்தம்பி, வேலுப்பிள்ளை, பூலோகசிங்கம், தில்லைநாதன், சண்முகதாஸ் ஆகியோரும் திரு. ச. தனஞ்சயராசசிங்கமும். இவரின் மாணவர்கள்.

www.padippakam.com



கீழைத்தேய, மேலைத்தேயப் பாரம்பரியங்களின் மிகச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாக விளக்கியவர்களிடம் புலமைப் பயிற்சி பெற்ற இவர், மாற்றத்தை வரவேற்றவர். புதுமையை வழி நடத்தியவர். விமர்சன பூர்வமான அறிவே முழுமையானது என்ற நோக்கினை வளர்த்தவர். இந்தப் பண்பு அவர் அமைத்த பாடவிதானத்தில் நன்கு புலனாயிற்று,

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் தமிழ், சமூகம் பற்றிய இந்நோக்குக்கள் அக்காலத்து இலங்கைத் தமிழ் முன்னணி புலமையாளர் பலரால் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. செம்மை சான்ற உயர்நிலை மரபே மரபு மற்றைய வற்றை மரபாகக் கொள்ளவே கூடாது என்று கொண்டவர் களிடையே பேராசிரியர் கணபதிப்பிள்ளை சனரஞ்சகமும் சமூக ஆதிக்கமும் பெற்ற தமிழறிஞராகப் போற்றப்பட வில்லை. இவருடைய குண இயல்புகளும் இவரை இந்த உயர்நிலைவாதிகளுடன் இணையவிடவில்லை. தன்னுடன் பழகியவர்களை ஆழ நேசித்தவர். சமூக அதிகார வரன் முறைகளைத் துச்சமாகக் கருதியவர். அதே வேளையில் தமது புலமை நெறியில் அசையாத நம்பிக்கை வைத் திருந்தவர்.

இன்று பின்னோக்கிப் பார்க்கும்பொழுது, இலங்கைத் தமிழறிஞர்கள் பலரின் பன்முகப்பட்ட ஆய்வு முயற்சிகளுக்கு அவரே காலாக அமைந்தமை தெரியவரும். ஆறுமுக நாவலரின் சமூக முக்கியத்துவத்தையும் கிறித்தவம் வழிவந்த தமிழ் முன்னேற்றத்தையும், இலங்கை, தமிழ் நாட்டில் இஸ்லாம் கொண்டுள்ள தமிழ் வேர்களையும் கண்டறியும்

படிப்பகம்

www.padippakam.com



இன்றைய இலங்கைப் புலமைப் போக்குகள் கணபதிப் பிள்ளை என்ற ஆய்வுத் தடாகத்திற் கிளம்பிய மலர்களே. அவர் தன்னை முதன்மைப்படுத்தாது வாழ்ந்த தன்மை காரணமாக இந்த உண்மைகள் வற்புறுத்தப் படவேண்டிய அளவுக்கு வற்புறுத்தப்படாது போய்விட்டன. இன்றோ அந்த உண்மை வரலாற்றுப் பொருளாக மேற்கிளம்பி யுள்ளது.

இந்த நூலின் மீள் பதிப்பு அதற்கான சான்றாகும்.

**கார்த்திகேசு சிவத்தம்பி**

கொழும்பு
5-1-1996

முதுதமிழ்ப் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இலங்கையில் சிற்பக்கலை | ... | 17 |
| 2. | யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் | ... | 22 |
| 3. | நாகர்கோயில் | ... | 37 |
| 4. | யாழோசை | ... | 46 |
| 5. | ஈழத்துத் தமிழர் கிராமியத் தெய்வ வழிபாடு | ... | 53 |
| 6. | தாமோதரம் பிள்ளை | ... | 67 |
| 7. | ஈழநாட்டில் தமிழ் வளர்ச்சி | ... | 78 |
| 8. | நாட்டுக் கூத்து | ... | 89 |
| 9. | வடபகுதித் துறைமுகங்கள் | ... | 97 |
| 10. | ஈழத்து ஊர்ப்பேர்கள் | ... | 104 |
| 11. | விஞ்ஞானமும் அகராதியும் | ... | 115 |
| 12. | வன்னி நாட்டை அரசு புரிந்த வனிதையர் | ... | 126 |
| 13. | கற்பகதரு | ... | 134 |
| 14. | ஈழத்தமிழர் உணவு | ... | 146 |
| 15. | யாழ்ப்பாணத்துப் பழக்க வழக்கங்கள் | ... | 151 |


படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையில் சிற்பக் கலை

பண்டைக் காலந்தொடக்கம் பாரத நாடு கலை வளர்ச்சியில் முனைந்து நிற்கின்றது. அக்காலத்திலே நடனம், சிற்பம், ஓவியம் முதலிய நுண் கலைகள் யாவற்றை யும் படித்தறிந்து அவற்றை எவரும் அறிந்துகொள்வதற்குப் பல நூல்கள் யாத்துள்ளனர். அவற்றுள் காலவயத்தால் எத்தனையோ நூல்கள் அழிந்துவிட்டன. பின்னர் நாடு அடிமைத்தளையுற்றதும் கலைகளும் கலைப் பொருள்களும் படிப்படியாய் மறையத் தொடங்கின.

இந்தியக் கலைக் கருவூலங்கள் பல பிற நாட்டார் கையிலகப்பட்டு நாட்டை விட்டுத் தேசாந்தரம் போயின. 1864-ம் ஆண்டு இந்தியா வந்த புதை பொருட்கலைப் பேராசிரியர் ஒருவர், ''இந்தியப் புதை பொருள்களையும், நுண் கலைப் பொருள்களையும் படிப்பதில் ஒரு வகையான பயனுமில்லை; இங்கு உண்மையான உயர்தரக் கலைப் பொருள் எதுவும் இல்லை'' என்று கூறியுள்ளார். அரசியல் ஆதிக்கத்தோடு அந்நாட்களில் கலாசார ஆதிக்கமும் ஆங்கிலரிடம் நிலவி வந்தது என்பதை இது தெற்றெனக் காட்டுவதாகும்.

எனினும் ஆநந்தக் குமாரசாமி, 'வின்சென்ற் சிமித்', 'ஹவல்', ஸ்ற்றெலாகிறாம்றிச்' முதலிய அறிஞர்கள் இத் துறையில் முனைந்து நின்று ஆராய்ச்சி செய்தனர். அதனோடு 1924-ம் ஆண்டு சிந்துவெளிப் பள்ளத்தாக்கு

ஈ—2

www.padippakam.com



நாகரிகமும் வெளியாயிற்று. ஆராய்ச்சிக்குமேல் ஆராய்ச்சி நடந்தது. அதன் பயனாய் ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும், செருமானிய மொழியிலும் பலப்பல நூல்கள் இந்தியக் கலைகளைப்பற்றி எழுந்தன. இன்றுதான் தெரிகின்றது இந்தியக் கலையென்றால் ஒரு பெருங்கடல் என்று.

## சிற்பக்கலை வளர்ச்சி

இலங்கையின் புராதனசிற்ப வளர்ச்சிக் காலத்தை இரண்டு பெரும் பிரிவுகளாக நுண்கலை ஆராய்ச்சியாளர் பிரிப்பர். அவை: அநுராதபுரக் காலமும், பொலனறுவைக் காலமுமாம். அநுராதபுரக்காலம் புத்த சமயம் இலங்கைக்கு வந்த காலந்தொடக்கம் கி. பி. 8-ம் நூற்றாண்டுவரைக்கும் உள்ள காலம். இக்காலத்திலேயே இலங்கையில் மௌரிய, காந்தார, குப்த, ஆந்திரச் சிற்ப முறைகள் கொண்டு வரப்பெற்று வளர்ச்சியுற்றன. இங்கு வளர்ந்தது பெரும்பாலும் புத்த சமயத்தைப் பற்றிய நுண்கலைகளாகும். இக்காலத்திலேயே தாது கோபங்களும் அழகிய பெரிய புத்த உருவங்களும் நாட்டில் எழத் தொடங்கின; ஈற்றில் பல்லவச் சிற்ப முறையும் வரத் தொடங்கியது. அநுராதபுரத்துக்கு அண்மையிலிருக்கும் ஈசுரமுனிய விகாரையிலும் பல சிற்ப உருவங்கள் இதற்குச் சான்று பகரும். பல்லவச் சிற்ப முறை வரத் தொடங்கிய சில காலத்துள் சிங்கள இராசதானி அநுராததிலிருந்து பொலனறுவைக்கு மாற்றப்பட்டது. பொலனறுவைக்கு இராசதானி மாறவே கலைவாழ்வும் அநுராதபுரத்தைக் கைவிட்டது.

கலைப்புலவர் நவரத்தினம் தனது நூலில் ஈசுரமுனியாவில் இருக்கும் சிற்பத்தில் சிறப்பாய் அமைந்த உருவமாய ''குதிரையும் மனிதனும்'' என்னும் சிற்ப வடிவத்தைக் காட்டியிருக்கிறார். அவ்வுருவங்கள் அநுராதபுரத்தில் காணப்படும் ஏனைய சிற்ப உருவங்களைப்போலப் புத்த சமயத் தொடர்பு உடையன அல்ல. அந்தச் சிற்பத்தில் அமைந்திருக்கும் மனிதன் கபில முனிவர். அவர் நரக லோகத்துப்

www.padippakam.com



புற்றரை ஒன்றில் இருந்துகொண்டு அசுவமேத யாகத்தில் பலியிடப்பட இருக்கும் (பக்கத்தில் நிற்கும்) குதிரையைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறார். மாமல்லபுரத்திலே காணப்படும் உருவ முறைகளையே இவ்வுருவங்களும் பின் பற்றுகின்றன.

அதனோடு அநுராதபுரத்திலே துட்ட கைமுனுவினாற் கட்டப்பட்ட ''லோகபாசத'' என்னும் பித்தளை மண்டபத் தைப்பற்றிச் சிறிது கூறல் நலம். இது ஒன்பது அடுக்கு மாளிகைகளை யுடைத்தாயிருந்தது. இப்பொழுது அடித்தள மும் ஆயிரத்து நூறு கற்றூண்களும் மட்டுமே உள்ளன. இதன் பரப்பு நிலத்தை 250 சதுர அடி எனக் கணக்கிட்டிருக்கின் றனர். இது புத்த சந்நியாசிகளின் உறைவிடமாயிருந்தது. ஞான ஒளி படிப்படியாகக் கூடக்கூடப் புத்த குருவும் அடுக்கு மாளிகையில் படிப்படியாக ஏற்றிவைக்கப்பட்டார். இவ் வடுக்கு மாளிகையின் மேற்கட்டிடம் மரத்தினால் கட்டி, மாணிக்கம், யானைத் தந்தம் முதலியவற்றால் அலங்கரிக்கப் பட்டு பித்தளையினால் வேயப்பட்டிருந்தது. ஆனால் கி.பி. 4-ம் நூற்றாண்டில் தீக்கிரையானது. இதனால் ஐந்தடுக்கு மாளிகையாகத் திரும்பவும் கட்டப்பட்டது. மாமல்லபுரத்தில் பல்லவர் கட்டியெழுப்பிய தர்மராஜ ரதத்தின் கட்டிட முறை யோடு ஒத்திருந்தது என ஆராய்ச்சியாளர் கூறுவர்.

அநுராதபுரக் காலத்திலுள்ள சிங்களச் சிற்ப முறை அமராவதியிற் காணப்படும் ஆந்திரச் சிற்ப முறையோடு தொடர்புடையது. கி. பி. 2-வது 3-வது நூற்றாண்டுகளில் எழுந்த சிற்பங்கள் இதனை வலியுறுத்தும். இவை சிங்களவ ரால் செய்யப்பட்டு உறுவான்வலி தாது கோபத்துக்கு அடி வட்டத்தில் வைக்கப்பட்ட புத்த உருவங்கள். இவ்வுருவங்கள் அமராவதியிலுள்ள புத்த உருவங்களைப் பின்பற்றி அமைக் கப்பட்டவை. ஆனால், இவ்வுருவங்கள் ஆந்திர உருவங் களிலும் பார்க்கப் பெரியனவாயும் அழகாயும் இருக்கின்றன. அவற்றைப் பார்க்குமிடத்து வட மதுரையிலே குசான அரசுக் காலத்தில் ஆக்கப்பட்ட புத்த உருவங்களை நினைவுறுத்தும்.

www.padippakam.com



இவ்வுருவங்களில் புத்தரின் உடை சிறுச்சிறு சுருக்குகளோடு அழகாய் அமைந்துள்ளன. இவ்வகையான உடையோடு, புத்த சிலை அமைத்தோர் ஆந்திர நாட்டு சிற்பிகளே. இவ்வுருவங்களின் காலடியில் இருக்கும் கொய்யக மடிப்பு ஆந்திர நாட்டு மக்கள் உடை முறையைப் பின்பற்றியன. எனவே இப்புத்த உருவங்கள் ஆந்திரச் சிற்ப முறையைப் பின்பற்றியனவே.

இலங்கையில் பண்டைக்காலம் தொடக்கம் உருவங்களை உலோகங்களிலிருந்து அமைத்து வந்தனர் எனத் தெரிகிறது. சிறிது காலத்தாற் பிந்தியது பிரித்தானிய நூதன சாலையிலிருக்கும் பத்தினி தெய்வத்தின் சிலை. இது இலங்கையில் ஆக்கப்பட்ட ஒரு அருமையான உருநாடு. இது திருக்கோணமலைக்கணித்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அரைக்குமேல் உடையில்லை. இதுவே அக்காலத்தில் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் வழக்கிலிருந்த பெண்கள் உடைமுறை போலும். அரைக்குக் கீழே சேலை உடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவ்வுருவத்தின் உடலமைப்பை நன்கு கண்டு கொள்ளலாம். இவ்வுருவத்தினைப்போல் அழகிய உடலமைப்புள்ள உரு இதுகாறும் இலங்கையில் எங்காவது கண்டு பிடிக்கப்படவில்லை. அன்றியும் சேலையுடையில் சிறுச் சிறு மடிப்புக்களையும், வளைவுகளையும் சிற்பி அழகாகக் காட்டியிருக்கின்றான். இவ்வாறு சேலையுடையின் அமைப்பைக் காட்டுதல் குப்தச் சிற்ப முறையை நினைவூட்டும். கி. பி. ஆறாவது நூற்றாண்டுக்கும் எட்டாவது நூற்றாண்டுக்கு மிடையில் இது தோன்றியிருக்கலாம் என்பர்.

இதுகாறும் நாம் ஆராய்ந்ததினின்றும், ஒருவேளை இந்தியாவினின்றே இச்சிற்ப வேலையாளர் வந்து இச்சிற்பங்களை ஆக்கித் தந்து போயினர் என எண்ணுதல் கூடும். அப்படியும் இருக்கலாம். ஆனால், இலங்கையிலும் சிற்ப முறையிற் கைவல்லார் பலர் இருந்தனர் என்று தாம் அறியக் கிடக்கின்றது. இலங்கையில் வாழ்ந்த சிற்ப நுண்கலைஞர் இந்தியாவிலே காலத்துக்குக் காலம் தோன்றிய சிற்ப முறைகளை

www.padippakam.com



அங்கு சென்று அம்முறைகளைக் கற்று இங்கு வந்து அவற்றை வளர்த்திருக்கலாம். அன்றியும் இங்கு ஆக்கப் பட்ட சிற்ப உருவங்கள் கி. பி. முதலாம் நூற்றாண்டுகளில் மிகத் திறமை வாய்ந்தன என்பது உலகப் பிரசித்தமாயிருந் தது. அதனாலே இலங்கையிலிருந்து சீன தேசத்திற்கு கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில் புத்த உருவங்கள் அனுப்பப் பட்டன என அறிகிறோம். புத்த தந்தம் வைக்கப்பட்ட கோயிலினின்று ஒரு புத்த சிலையைக் கி. பி. 428-ம் ஆண்டு இலங்கையரசன் சீனாவிற்கு அனுப்பினான். இவ்வாறு இலங்கையில் அநுராதபுர, பொலனறுவைக் காலங்களில் நடன சிற்பக்கலை, கட்டிடக்கலை மிகவுன்னதமாய் வளர்ந் தன என்று அறிகின்றோம்.

பிற்காலக் கலை வளர்ச்சியைப்பற்றிச் சிலது சொல்ல விரும்புகிறேன். யாழ்ப்பாணத்திலுள்ள கந்தவனக் கடவை யில் ஓரழகிய ஆறுமுகசாமி உருவம் இருக்கின்றது. அதனைக் கோயிலுக்கருகாமையில் சிறு ஆலயம் அமைத்து அதனுள் வைத்திருக்கின்றனர். பழங்காலத்தில் அவ்விக்கிரகந்தான் மூலத்தான மூர்த்தியாக இருந்ததாகக் கேள்வி. அதன் கையில் ஒன்று ஊறு பட்டதனால் வெளியில் எடுத்து வைத் திருக்கின்றனர். அதனுருவம் வியக்கத்தக்கதாய் அமைந் துள்ளது. அதனழகு எவர் மனதையும் இழுக்கும். இது இங்கு வருமுன் முள்ளியவளையில் குமாரபுரத்து மூல மூர்த்தி யாக இருந்ததாம். வன்னியர் காலத்தில் குமாரபுரம் மிகச் சிறப்போடு இருந்தது. அதற்குமுன் இவ்விக்கிரகம் அநுராத புரத்துக்கு அணித்துள்ள ஒரு முருகன் கோயிலில் மூல மூர்த்தி யாக இருந்ததாகப் பெரியோர் சொல்லுவர். எட்டிகுடி, பழனி முதலிய முருகன் கோயில்களுக்கு விக்கிரகங்கள் செய்த அதே சிற்பியே இச்சிலையைச் செய்தானெனப் பெரியோர் கூறக் கேட்டிருக்கிறேன். அன்றியும் மாவிட்டபுரத்து மூல மூர்த்தியாயுள்ள விக்கிரகமும் மிகப் பழையது எனக் கேள்வி. முருகன், வள்ளி, தெய்வானை, மயில் ஆகிய நாலும் ஒரே கல்லில் வெட்டப்பட்டிருக்கின்றதாம்.

படிப்பகம்

www.padippakam.com

# யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர்

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அரசாண்ட காலத்திலே யாழ்ப்பாணப் பட்டினத்தில் ஒரு பெரிய கோட்டை கட்டி இருந்தனர். இக்கோட்டையிலிருந்தே உப தேசாதிபதி அரசு செலுத்தினார். அன்றியும், இக்கோட்டையைவிட நாட்டின் பல்வேறு இடங்களிலும் சிறுச்சிறு கோட்டைகள் அமைத்து நாட்டைப் பாதுகாத்து வந்தனர். இச்சிறு கோட்டைகள் யாவும் யாழ்ப்பாண நாட்டுக்குப்பிற இடங்களினின்று யாழ்ப்பாணத்துக்குள் வரும் வழியிலே கட்டப்பட்டிருந்தன. இவைக்கூடாகப் பண்டங்கள் அனுமதிச் சீட்டின்றி எடுத்து வரவோ அன்றி எடுத்துப் போகவோ முடியாது; அன்றி ஆட்களும் நுழைவுச்சீட்டின்றிப் போகவோ உள்வரவோ முடியாது.

இவ்வாறான சிறுகோட்டைகள் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, கொழும்புத்துறை, கச்சாய், பூநகரி, ஆனையிறவு, அரிப்பு, இலுப்பைக்கடவை முதலிய இடங்களில் இருந்தன. ஊர்காவற்றுறை பருத்தித்துறை ஆகிய இரண்டு இடங்களிலும் கப்பல் மூலம் போவோர் வருவோருக்கு நுழைவுச் சீட்டுக் கொடுக்கப்பட்டன. ஆனால், தரைவழியாய்ப் பயணம் செய்வோருக்கு ஓலையிலே தமிழில் எழுதிய இணக்க உத்தரவுச்சீட்டு அளிக்கப்பட்டது. அச்சீட்டின் பெயர் கையொப்பம்; இக்கையொப்பச் சீட்டில் திசாவையினதும், உபதேசாதிபதியினதும் கைச்சாத்துக்கள் இருத்தல்வேண்டும். கொழும்புத்

www.padippakam.com



துறையும் கச்சாயும் நாட்டின் உள்எல்லைக்குள் பூநகரிக்கும் வன்னிக்கும் செல்லும் கடலுக்கருகில் உள்ளன. யாழ்ப் பாணத்திலிருந்து உள் நுழைவுச் சீட்டின்றி மக்கள் போகாது தடுப்பதற்காகக் காவலர் அங்கு வைக்கப்பட்டனர். பயணக் காரர் எடுத்துப்போகும் பொருட்களிற்குச் சுங்க வரியும் அங்கு அறவிடப்படும்.

பூநகரி ஒரு முக்கியமான காவலிடம். இங்குள்ள கோட்டை, வன்னியர்களுடைய ஓட்ட நாட்டங்களைக் கவனித்தறியக்கூடிய இடமாகவும் இருந்தது. அதுபோலவே ஆனையிறவும் அப்பகுதியிலுள்ள வேறு இரு கோட்டைகளும் வன்னியர் சிங்களவர் ஆகியோரின் படை எடுப்பினின்று யாழ்ப்பாண நாட்டைக் காத்தன. பொருட்கள் அனுமதிச் சீட்டின்றி யாழ்ப்பாணத்துக்கு வெளியே கொண்டு போவதை யும் நுழைவுச் சீட்டின்றி மக்கள் போய்வருவதையும் இவ் விடங்களிலிருந்து ஆய்ந்து பார்த்துத் தடுத்தனர். அன்றியும் யாழ்ப்பாணத்திலிருந்து முறைக்கு முறை அடிமைகளை வன்னிக்குக் களவாய் மக்கள் கொண்டு போவதும் அக் காலத்தில் வழக்கமாக இருந்தது. அதனையும் அவ்விடங் களில் நிற்கும் காவலர் தடுத்தனர். அதனோடு வன்னி நாட்டினின்று யானை முதலிய காட்டு மிருகங்கள் நாட்டுக் குள் வராமல் தடுக்கவும் இவை பயன்பட்டன.

பருத்தித்துறையிலுள்ள கோட்டையில் ஒரு காலாட் படைத் தலைவனும் நான்கு போர் வீரரும் இருந்தனர். சோழமண்டலம், திருக்கோணாமலை முதலிய இடங்களுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் போக்குவரத்துள்ள கடிதங்கள் எல்லாம் இக்காலாட்படைத் தலைவனுக்கூடாகவே சென்றன. அவ்வூர் களுக்கு இங்கிருந்து ஏற்றுமதியாகும் பனைமரங்களை இவரே கண்காணித்து வந்தனர். இத்துறைக்கும் அந்நாடுகளுக்கும் உள்ள போக்குவரத்துக் கப்பல்கள் யாவற்றையும் பார்த்து நுழைவுச் சீட்டு முதலியவற்றை ஆய்ந்து நோக்கி வந்தனர். ஊர்காவற்றுறையிலுள்ள கோட்டை மிக முக்கியமானது. இந்த நாட்டின் தென்பாகத்தைக் கடல் மூலமாய் வரும்

www.padippakam.com



பகையை மன்னார்க்கோட்டை காத்து நிற்பதுபோல வட பாகத்தை இது காத்து நின்றது. அதனோடு, பருத்தித் துறையிலுள்ள கோட்டையில் நடந்ததுபோல, இங்கும் கப்பல்கள் ஆராய்ந்து பார்க்கப்பட்டன.

இவ்வாறு பல பக்கங்களிலும் காவல் புரிந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்தனர். அதுமட்டுமின்றி வன்னிப்பகுதியும் அவர் ஆட்சிக்கே உட்பட்டிருந்தது. பெரிய நிலப் பகுதியாகையின் அதைப் பல மாநிலப் பிரிவுகளாகப் பிரித்து ஆண்டனர். இப்பிரிவுகளை அவரின் பெருந்தலைவர் சிலருக்கு ஆளக் கொடுத்தனர். அத்தலைவரின் பெயர் வன்னியர். முள்ளியவளை, தென்னமரவடி, கர்னமேற்பத்து, கரிக்கட்டுமூலை, புதுக்குடியிருப்பு, பள்ள காம், பெல்லெல சோளன் முதலியவை அக்காலத்து வன்னி நாடடுப் பிரிவுகள்.

இவை மட்டுமின்றி மாதோட்டம்; முசலி, பெருங்களி எனப்படும் மன்னார்ப்பகுதிப் பிரிவுகளைத் தாமே உத்தியோ கத்தரை வைத்து ஆண்டு வந்தனர். பூநகரி, இலுப்பைக் கடவை, பல்லவராயன்கட்டு, மாதோட்டம் ஆகியவை ஒல்லாந்த அரசியல் தொடங்கியபொழுது ஓர் அதிகாரத்தின் தலைமையில் இருந்தன.

தமது பொருள் வருவாயைப் பெருக்கவே ஒல்லாந்தர் நாடுகளைக் கைப்பற்றி ஆண்டனர். ஆகையின், பல்வகை களிலும் தமது வாணிகத்தைப் பெருக்கிப் பொருளீட்டவே அவர் பெரிதும் முனைந்து நின்றனர், இப்பகுதியில் அவ ருக்கு முதலில் கூடிய வருவாயைக் கொடுத்தது யானை வணிகம். வன்னிப் பகுதியிலிருந்தே யானைகளைப் பிடித் தனர். அன்றியும் யாழ்ப்பாணத்துக்கு, காலி மர்த்தறை முதலிய இடங்களினின்றும் யானைகள் வந்துசேர்ந்தன. யானை பிடிப்பதற்காக, வன்னியைப் பல பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு வன்னியரைத் தலைவராக வைத்தனர். ஒவ்வொரு வன்னியரும் ஆண்டுக்கு 42 யானை ஒல்லாந்தருக்குத் திறையாகக் கொடுத்தல்

www.padippakam.com



வேண்டும். மாதோட்டம், முசலி, செட்டிகுளம் முதலிய மன்னாரைச் சேர்ந்த இடங்களிலும், பூநகரி, இலுப்பைக் கடவை, பல்லவராயன்கட்டு முதலிய பிரிவுகளிலும் யானைகள் ஏராளமாகப் பிடிபட்டன.

யானை வாங்கவந்த வியாபாரிகள் பாக்கும் வாங்கித் தம் நாட்டுக்கு எடுத்துச் சென்றனர். கற்பிட்டி, திருக்கோணாமலை முதலிய ஊர்களிலிருந்து பாக்கு யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தது. பாக்கு சிங்கள நாட்டிலிருந்து வண்டி மூலம் வன்னி நாட்டுக்கூடாகக் கொண்டு வரப்பட்டது. மிளகும் இங்கிருந்து பெருந்தொகையாய் ஏற்றுமதியானது. வியாபாரிகள் சங்கும் வாங்கினர். இச்சங்குகளை வங்காளத்துக்கு ஏற்றிச் சென்றனர். யாழ்ப்பாணக் கடலிலே குளிக்கப்பட்ட சங்கு அளவிற் பெரியது. மன்னார்க் கடலிலும் சங்கு குளிக்கப்பட்டது. ஆனாலும் அங்கு எடுக்கும் சங்கு மிகச் சிறிது எனக் கருதினர்.

யாழ்ப்பாணப் பகுதிக் கடற்கரைகளில் அகப்படும் முருகைக் கற்களை; ஒல்லாந்தர் ஊழியஞ் செய்வோரைக் கொண்டு, உடைத்தெடுத்தனர். இக்கல்லுகளைக்கொண்டு சுண்ணாம்பு சுட்டனர். அன்றியும் அவற்றை அளவாய் வெட்டிக் கட்டடங்களுக்கு எடுத்தனர். பருத்தித்துறைப் பகுதிகளிலே இக்கற்கள் பெருவாரியாய் அகப்பட்டன. அவற்றை உடைத்துச் சேர்த்துத் தோணிகள் மூலம் யாழ்ப்பாணக் கோட்டைக்குக் கொண்டு சென்று சூளைகளிலிட்டுச் சுண்ணாம்பு சுட்டனர். எஞ்சியவற்றைக் கட்டடங்களுக்கு எடுத்தனர். நாகபட்டினத்துக்கும் இக்கற்கள் மிக ஏற்றப்பட்டன. அவைகளை அங்கு கோட்டை கட்டப் பயன்படுத்தினர். காங்கேசன் துறையில் சுண்ணாம்பு சுடும் சூளைகள் பல இருந்தன. அங்கு முருகைக் கற்களிலிருந்து சுண்ணாம்பு சுட்டு அதனை நாகபட்டினத்துக்கொண்டு சென்று விற்றனர். கல்லு, சுண்ணாம்பு மட்டுமின்றிக் கட்டடத்துக்கு வேண்டிய மரம் முதலிய வேறு பொருட்களும் யாழ்ப்பாணத்திலிருந்து அங்குபோய்ச் சேர்ந்தன.

படிப்பகம்

www.padippakam.com



இதுகாறும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியே கொண்டு சென்று வியாபாரம் செய்யப்பட்ட பொருட்களைப் பற்றிக் கூறினோம். இனி, யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்த பொருட்களைப் பற்றிக் கவனிப்போம். யாழ்ப்பாணத்திலே அரிசி, சாப்பாட்டுச் சாமான்கள் மிகக் குறைவாய் இருந்தன. வங்காளத்திலிருந்து யானை வாங்க வரும் சோனக வியாபாரிகள் இவற்றை இங்கு கொண்டுவந்து சேர்த்தனர். அரிசியும் நெல்லும்தான் யாழ்ப்பாணத்தில் குறைவான பொருட்கள். நெல்லு யாழ்ப்பாணப்பகுதி, தீவுப்பகுதி, வன்னி; பூநகரி, மாதோட்டம் முதலிய இடங்களில் விளைவிக்கப்பட்டதெனினும், இங்குள்ள சனங்களுக்குப் போதியதாகவே இருந்தது. வங்காளத்திலிருந்து யானை வாங்கவரும் சோனகர் கொண்டுவரும் அரிசி நெல்லைவிட, தஞ்சாவூர், ஒரிசா, தொண்டி, திருக்கோணாமலை, மட்டக்களப்பு முதலிய இடங்களினின்றும் இப்பொருட்கள் கொண்டுவரப்பட்டன. சீலை துணியும் இந்தியாவிலிருந்து வந்துசேர்ந்தன. அதுமட்டுமின்றி ஒல்லாந்த அரசினர் தென்னிந்தியாவிலிருந்து நெசவாளக் குடும்பங்களை இங்கு வரவழைத்துச் சீலைகளை நெசவு செய்வித்தனர். இந்நெசவிற்கு வேண்டிய பஞ்சு, வன்னி நாட்டிலிருந்து வந்து சேர்ந்தது.

உள்ளூர் வியாபாரமும் நடந்து வந்தது. பனைமரம் மிகுந்த பயனை அளித்தது. சோற்றுக்குப் பதிலாகப் பனம் பழத்தைப் பயன்படுத்தினர். அது மட்டுமின்றிப் பனங்கட்டி, பனாட்டு, கிழங்கு, பாய், வீடு வேயும் ஓலை முதலியன இம் மரத்தினின்று அவர்களுக்குக் கிடைத்தன. வளை, கப்பு, கைமரம் முதலியவற்றையும் இம்மரத்தினின்று எடுத்தனர். இப்பொருட்களைத் தொண்டி, சோழமண்டலக் கரை முதலிய இடங்களுக்குக் கொண்டுசென்று விற்றுப் பொருள் ஈட்டினர். அன்றியும் தென்னைமரப் பொருள்களையும் அங்கு கொண்டு சென்று விற்றுப் பொருள் ஈட்டினர். அதனோடு இப்பொருட்களைத் திருக்கோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் ஏற்றினர். பருத்தித்துறை ஊர்காவற்றுறை, தொண்டை

www.padippakam.com



மானாறு, வல்வெட்டித்துறை முதலிய இடங்களினின்று கப்பல் மூலமாக இப்பொருட்களை ஏற்றிச் சென்றனர்.

அந்நாட்களிலே புகையிலை வியாபாரமும் இங்கு நடந்து வந்தது. யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் புகையிலை பயிரிட்டனர். அதனை மலையாளத்துக்கு எடுத்துச் சென்று விற்றுப் பொருள் ஈட்டினர். சில காலங்களில் மலையாளம் போகும் கப்பல்களுக்குக் கொள்ளைக் கப்பல்கள் தொந்தரவு கொடுத்தன. அதனால் அப்புகையிலையை நாகபட்டினம் கொண்டு சென்று விற்றனர். ஒல்லாந்த உத்தியோகத்தரும் அப்புகையிலையை வாங்கிப் பாவித்தனர்.

அந்நாட்களில் யாழ்ப்பாணத்தவர் அங்கு வளரும் தென்னை மரத்தினின்றும் மிகுந்த பொருள் ஈட்டினர். பத்தேவியாவிலிருந்த ஒல்லாந்த மேலதிகாரிகள் புதுத் தோம்பின் படி தென்னைமர வரியை நீக்கிவிட்டனர். எனினும், தென்னைமரச் சொந்தக்காரர் அரசினருக்குரிய யானைகளுக்கு மட்டுமின்றி வியாபாரத்துக்காக யாழ்ப்பாணம் வந்திருக்கும் யானைகளுக்கு உணவிற்காகத் தென்னை ஓலைகள் கொடுத்தல் வேண்டும். ஆனால், விற்பனைக்குக் கொண்டு வரும் யானைகளுக்குக் கொடுக்கும் தென்னை ஓலைகளுக்கு வியாபாரிகள் விலை கொடுத்தனர். இவ்வாறு ஓலைகளை மரங்களினின்று அரசினர்கட்டளையின்படி வெட்டுவதால்மரங்களின் காய்கள் குறைந்தன எனப் பொதுமக்கள் பல முறையும் அரசினருக்கு முறையிட்டனர். இதுமட்டுமன்றி மக்கள் ஆண்டு ஒன்றுக்கு இருபத்துநாலு பீப்பா தேங்காய் நெய்யை, அரசினர்க்குக் கொடுத்தல் வேண்டும். அதனோடு முத்துக் குளிக்கும் காலத்தில் உபயோகிப்பதற்காக மன்னார்க் கோட்டைக்கும் பன்னிரண்டு பீப்பா தேங்காய் நெய் அனுப்ப வேண்டும். நெய்யூற்றாது தேங்காய் விற்றல் மக்களுக்கு மிகுந்த வருவாயைக் கொடுத்தது. அதனால் அவர் பல முறைகளில் அரசினரை இக்கட்டளைச் சட்டத்தை நீக்கும்படி கேட்டுக் கொண்டனர்.

www.padippakam.com



கொழும்பிலும் யாழ்ப்பாணப் பட்டினத்திலும் அரசின ருக்குப் பனைமரம் தேவைப்பட்டன. அவற்றை ஒரு சிறு தொகையான பணத்தைக் கொடுத்து யாழ்ப்பாண நாட்டி லேயே வாங்கினர். அரசினர் கேட்டவுடன் பனைமரச் சொந்தக்காரர் அவற்றை அரசினர் குறித்த இடத்தில் ஒப்படைத்தல் வேண்டும். சில வேளைகளில் அரச உத்தியோ கத்தர் அரசினருக்கு வேண்டுமென்று கூறித் தமது சொந்தப் பாவிப்புக்குப் பல பனைமரங்களைத் தறித்து எடுத்தும் போவர். இதனால் பனைமரக்காரருக்கு மிகுந்த நட்டம் உண்டானது. பனைமரக்காரர் அம்மரங்களைத் தறித்துக் கொடுத்தலோடு நிற்கவில்லை. அவர் அவற்றைத் துண்டா டிக் கைமரங்களாக்கி தோணிகளிலேற்றி அனுப்புவதற்காக இரண்டு, மூன்று கட்டைகளுக்கு அப்பாலுள்ள துறைமுகங் களுக்குக் கொண்டுபோய்க் கொடுத்தல் வேண்டும். அதுமட்டு மன்றி தோப்பிலே இந்த மரங்களும் குறிப்பிட்டிருந்தால் அவைவரியும் அவர் கொடுத்தல் வேண்டும். ஒருமுறை பெருந்தொகையான பனைமரங்களைத் தறித்துக் கொழும் புக்கும் நாகபட்டினத்துக்கும் அரசினர் அனுப்பினர். அத னால் ஊரவர்கள் மிகுந்த நட்டம் எய்தினர். அதை அறிந்து பத்தேவியாவிலிருந்து இவ்வழக்கத்தை நீக்கிவிடும்படி யாழ்ப் பாண அரசுக்குக் கட்டளை வந்தது. யாழ்ப்பாணத்தவர் அரசினருக்கு ஊமலும் கொடுத்தல் வேண்டும். இதை அவர் கரியாகச் சுட்டுக் கொல்லுலைக்குப் பயன்படுத்தினர்.

ஆண்டுதோறும் யாழ்ப்பாணத்திலிருந்து பெருந்தொகை யான மக்கள் உழவுத் தொழிலுக்காக வன்னிநாட்டுக்கு மாடு களோடு போவர். அங்குபோய் வயல் உழுது பயிரிட்டு வேலை செல்வர். அப்பயிர்கள் வெட்டி முடிந்ததன் பின் ஊர் திரும்பு வர். அவ்வாறு திரும்பும்போது ஆனையிறவு முதலிய இடங்களிலே உள்ள ஆயங்களில் ஆயப்பணம் கொடுத்து வருவர். இவ்வாறுவரும் ஆயப்பணத்தால் அரசினருக்கு ஆண்டுதோறும் மிகுந்த பொருள் சேர்ந்தது. யாழ்ப்பாணத்தி லுள்ள உயர்ந்த குடியிற் பிறந்தோர் எனக் கருதப்படுவோர்

படிப்பகம்

www.padippakam.com



இயற்கையாய்ச் சோம்பலும் வேலை செய்யப் பிரியமில்லாத வருமாய் இருந்தனர் என ஒல்லாந்த ஆசிரியர் ஒருவர் குறிப்பிடுவர். இவர்கள் தாம் போய்ச் செய்யவேண்டிய வேலைகளை எல்லாம் தமது அடிமைகள்மூலம் செய்வித்தனர். அதன் காரணமாகப் பெருந்தொகையான அடிமை மக்கள் யாழ்ப்பாண நாட்டில் இருந்தனர். சில வேளைகளில் இவ்வடிமைகள் யாழ்ப்பாணத்தருகிலுள்ள இடங்களில் வேலை செய்யும்போது வன்னியர் அவரைப் பிடித்துச் செல்வர். சண்டை இல்லாது அமைதியாய் இருக்குங் காலங்களில் அடிமைகளைக் கொண்டு வயல் வேலை செய்விப்பர். சண்டை திகழும் காலங்களில் அவரைப் போர் வீரராய்ப் பயன்படுத்துவர்.

ஒல்லாந்தர் பயிர் வரி விதித்திருந்தனர். அறுவடையின் போது பத்தில் ஒன்று அரசிறையாகக் கொடுத்தல் வேண்டும். காட்டு நிலங்களையும், சதுப்பு நிலங்களையும் வெளியாக்கிப் பயிரிட்டாலுங்கூட வருவாயில் பத்தில் ஒன்று அரசினருக்கு இறுத்தல் வேண்டும். வகையான நிலங்களுக்கு மூன்று நான்கு ஆண்டுகளுக்கு வரி வாங்காமலும் விடுவர். ஆனால், குறித்த எல்லை முடிந்ததன்பின் பயிர் வரிகட்டியே தீர வேண்டும்.

ஒல்லாந்தர் காலத்திலே தலைவரியே மிகப்பிரதானமான வரியாக விளங்கிற்று. செல்வர் வறியர் என்ற பாகுபாடில்லாது ஒவ்வொருவரும் இவ்வரியைக் கொடுத்தல் வேண்டும். பள்ளியிற் பயிலும் சிறுவரும் முதிர்ந்தோரும் இவ்வரியினின்று விலக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்திலிருந்த சனத்தொகையை மட்டிடற்காகத் தலைத் தோம்பு என்னும் ஒரு பெயர்ப் பட்டியலை எழுதி வைத்தனர். இத்தோம்பிற் கண்ட பெயருள்ளோர் யாவரும் தலைவரி கொடுக்கவேண்டியவராவர். இதனைவிட அதிகாரப் பணம் என்ற ஒரு வரியும் அந்நாளில் இருந்தது. இவ்வரி தமிழரசினர் காலத்திருந்தே இருந்து வந்தது. பொதுவாய் ஒவ்வொருவரும் இப்பணத்தைக் கொடுத்தல் வேண்டும். ஆனால், ஒல்லாந்தர் காலத்தில் இப்

www.padippakam.com



பணத்தைப் பெரும்பாலும் வேளாளர், சாண்டார், தனக்காரர் ஆகிய சாதியினரே கொடுத்து வந்தனர்; தமிழரசர் காலந்தொட்டு நாட்டின் ஒவ்வொரு பிரிவையும் ஆள ஒவ்வொரு அதிகாரத்தை அரசினர் நியமித்தனர். போத்துக்கேயரும் இம்முறையைக்கைப்பற்றி ஆண்டு வந்தனர். ஒல்லாந்தரும் முதலில் அவ்வாறே செய்தனர். அதிகாரங்களுக்கு அரசன் சம்பளம் கொடுப்பதில்லை; அவர் ஆளும் பகுதியிலுள்ள குடிகளே அவருக்கு வேண்டிய உணவுப் பொருள் முதலியவற்றைக் கொடுத்து அவரைப் பார்த்து வரல் வேண்டும். இவ்வழக்கம் பின்பு சம்பளமாய் மாறியது. அவருக்குச் சம்பளத்திற்காகக் குடிமக்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒரு பணங் கொடுத்தல் வேண்டும். ஒல்லாந்தர் இவ்வுத்தியோகத்தைப் பின்பு ஒழித்துவிட்டனர். எனினும், மாதோட்டம், பூநகரி ஆகிய இருபகுதிகளிலும் அவ்வுத்தியோகம் இருந்து வந்தது. இவ்விரு பகுதிகளிலும் மக்கள் அதிகாரத்தின் சம்பளத்துக்காக வழக்கம்போலத் தலைக்கு ஒவ்வொரு பணம் கொடுத்து வந்தனர். இப்பணத்தைக் கொடுப்பதைப் பற்றி ஒருவரும் வெறுப்பைத் தெரிவிக்கவில்லை. அதற்கு எதிர்மாறாக அம்மூன்று சாதியினரும் தாம் பழம் பெருஞ் சாதியினராகையின் தமது அதிகாரத்தைப் பேணி வருவது தமக்கு அரசினர் அளித்தபெருங் கௌரவம் என எண்ணினர். இச்சாதிகளோடு ஒத்த சாதிகளென எண்ணி இருக்கும் மடப்பள்ளி, அகம்படி, பரதேசி, முதலிய சாதியினரும் இக்கௌரவத்திற் பங்கு பற்ற முனைந்து நின்றனர். இதனைப் பயன்படுத்தி அரசினர் இம்மேல் சாதியாரிடமிருந்தும் இவ்வரியை வாங்கி வந்தனர்.

வேறும் ஒரு வகையான வரி அக்காலத்து இருந்தது. அதன் பெயர் ''உத்தியோகப் பணம்.'' அது போத்துக்கேயர் காலத்திலிருந்து இருந்து வந்தது. குறிக்கப்பட்ட ஒரு தொகை ஒவ்வொருவரிடத்திலிருந்தும் அறவிடப்பட்டது. முதன் முதல் இத்தொகையை ஒவ்வொரு சாதியிடத்திருந்தும் மொத்தமாக அறவிட்டனர். அவ்வாறு செய்வதால் அவ்

www.padippakam.com



வரியை அறவிடுவோர் ஒவ்வொருவரிடத்திருந்தும் வரியை அறவிட்ட போதும் ஒவ்வொரு சாதியிலும் சனத்தொகையை குறைந்துக் காட்டி அரசினருக்கு உண்மைத் தொகையைக் கொடாது பணத்தைத் தாமே அபகரித்தனர். இதனை அறிந்ததும் அரசினர் மொத்தமாகச் சாதிகளிடத்திருந்து இவ்வரியை வாங்காது ஒவ்வொருவரிடத்திருந்துமே வாங்கக் கட்டளை பிறப்பித்தனர்.

ஒல்லாந்தர் காலத்திலே சில சாதியினர் அரசினருக்கு ஊழியம் செய்தல் வேண்டும் என ஆணையிட்டனர். அக் காலத்திலே யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவரில் பெரும்பாலோர் சோம்பேறிகள் என ஒல்லாந்தர் கருதினர். அதனால் குறிக்கப்பட்டோர் ஒவ்வொருவரும் மூன்று மாசத்தில் மூன்று நாட்களுக்கோ அல்லது ஓர் ஆண்டில் பன்னிரண்டு நாட்களுக்கோ ஊழியஞ் செய்தல் வேண்டும் எனக் கட்டளை யிட்டனர். எனினும் அவ்வூழிய வேலைக்குப் போகாது அதற் கெனக் குறிக்கப்பட்ட குற்றப் பணத்தைப் பலர் கட்டினர். இதனால் அரசினரின் வேலைகள் பல தடைப்பட்டிருந்தன. அவ்வூழிய வேலைகளுட் சில:-

யாழ்ப்பாணக் கோட்டை பழுது பார்த்தல்.

வெடிமருந்துச் சாலையில் வேலை செய்தல்.

கப்பல் இறக்குமதி ஏற்றுமதி செய்தல்.

சுண்ணாம்பு சுடுதல், பருத்தித்துறையிலுள்ள செங் கல்லுச் சூளையில் வேலை செய்தல்.

வன்னிக்கடுத்துள்ள காடுகளில் மரந்தறித்தல், தீவுப் பகுதிகளில் முருகைக்கல் கிண்டி எடுத்தலும் உடைத்தலும், கொல்லுலைக்குக் கரிசுடுதல் முதலியவையாம்.

ஊழிய வேலை செய்யமுடியாத வயதாளிகள் கரி சுடுதற்கு ஊமல் சேர்த்துக் கொடுத்தல் வேண்டும்.

ஊரவருக்குள் வரிவாங்குவோருக்குப் பெரியதரம் என்ற உத்தியோகங்களைக் கொடுத்து வைத்திருந்தனர். தலை

www.padippakam.com



வரிப் பணம், நிலக்குத்தகை பத்திலொன்று, உத்தியோகப் பணம், அதிகாரப் பணம் ஆகியவற்றை அவர்களே சனங்களிடம் வாங்குதல் வேண்டும். அதனோடு ஊழியஞ் செய்ய வேண்டியவர்கள் ஊழியஞ் செய்யாது குற்றப் பணம் இறுக்க வேண்டிவரின் அப்பணத்தையும் அவரே அறவிடுதல் வேண்டும். இவ்வுத்தியோகத்தரை நியமித்தல் காரணமாக அரசினருக்குச் செலவாகிய பொருள் மிகச் சொற்பமே. இவ்விரு தரப்பு உத்தியோகத்தரும் மூன்று மாதத்துக்கு ஒரு முறை கோட்டைக்குப் போய் ஓர் ஆண்டிலே சேர்க்கவேண்டிய வரிப் பணத்தின் தொகையில் நான்கில் ஒன்றைக் கொடுத்துக் கணக்கு முடித்தல் வேண்டும்.

வரி வாங்குவோர், பெரியதரம் ஆகிய இவ்விரு உத்தியோகத்தரை நியமிப்பதில் 1690-ம் ஆண்டு ஒரு சிறிய மாற்றத்தை அரசினர் செய்தனர். அக்காலம் வரைக்கும் இவ்வுத்தியோகத்தரும் அரசினருக்குக் கீழ் வேலை பார்க்கும் கணக்கப்பிள்ளை ஆராய்ச்சி முதலியோரும் வேளாள வகுப்பையே சார்ந்தவராய் இருந்தனர். முக்கியமானவர் யாரும் கன்னங்கரை என்ற ஊரிலுள்ள தொன்பிலிப்பு சங்கரப்பிள்ளை யென்பவரின் குடும்பத்தினரே. இச்சங்கரப்பிள்ளை என்பவருக்கும் ஒல்லாந்த அரசினருக்கும் இடையில் ஒற்றுமை நீடிக்கவில்லை. காலத்துக்குக் காலம் பல சச்சரவுகள் இருந்து வந்தன. அக்காலத்திலே உத்தியோகத்தில் இருந்த வேளாளர் பொதுச் சனங்களை வருத்தி வந்தனர் எனவும் அறியக்கிடக்கின்றது. அவர் மிகுந்த தற்பெருமை கொண்டிருந்தனர். அதனால் ஏனைய சாதிகளை வெறுத்து அவரை அற்பமாகக் கருதினர். அவர் படிப்படியாய் ஒல்லாந்தர் காலத்தில் மிகுந்த அதிகாரத்தைப் பிடித்து விட்டனர். அதனால் அவர் வறிய சனங்களுக்குப் பெரிய இடரைச் செய்ததுமின்றி அவ்வேழைகள் அவர் செய்யும் அநியாயங்களை அரசினருக்கு எடுத்துக் கூறவும் முட்டுக்கட்டை போட்டனரென்று அறியக் கிடக்கின்றது. இதனை அறிந்த அரசினர் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வரி

www.padippakam.com



அறவிடும் உத்தியோகத்தரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தனர். ஏனெனில் ஒரு பகுதியில் பல ஆண்டுகளுக்கு உத்தியோகம் பார்த்தால் அவர் அப்பகுதியில் செல்வாக்கும் அதிகாரமும் அடைந்துவிடுவர். அதனால், குடிசனங்களை வருத்தவும் தொடங்குவர். அது மட்டுமின்றி அரசினர் இவ்வுத்தியோகங்களை மடப்பள்ளி யார் முதலிய மற்றச் சாதியினருக்கும் கொடுத்தனர். இது வேளாளரின் செல்வாக்கைக் குறைத்தது. அதனால் ஏனைய சாதியினருக்கு ஒரு வகையான ஆறுதல் கிடைத்தது. இவ்வாறு நாட்டிலுள்ள பல சாதிகளுக்கிடையே ஏற்பட்ட பொறாமையினால் நாட்டிலே நடக்கும் கலவரங்களைப்பற்றி அரசினர் அறியக்கூடியதாய் இருந்தது.

இம்மாற்றங்களை அரசினர் கொண்டு வந்ததும் வேளாளர் தமக்குஇதுகாறும் கிடைத்த உத்தியோகங்கள்கிடையாது என அறிந்து அதனால் தமது செல்வாக்கும் குறைந்துவிடு மென எண்ணி, அரசினரது இந்த நடவடிக்கை நடைமுறைக்கு வராது தடுக்கப் பார்த்தனர். எனினும், அரசினர் தாம் விரும்பியபடி செய்தனர். அதனால், கலகம் ஒன்று உண்டாயிற்று.

முற்காலத்திலே ஒவ்வொரு சாதியினரும் தத்தம் சாதிக் கேற்றபடி ஒவ்வொரு வகையாய் உடை அணி முதலிய அணிதல் வேண்டும் என்ற சட்டம் இருந்தது. தலைமயிர் வெட்டல், குடுமி முடிதல், காதணி போடுதல் முதலியன ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு வகையாய் இருந்தது. ஆனால், ஒல்லாந்தர் காலத்திலே இவ்வழக்கத்தைப் படிப் படியாக மக்கள் கைவிடத் தொடங்கினர். இதனைக் குறித்து அங்கு அரசாண்டோர் குடிகள்மீது மிகச் சீற்றங் கொண்டனர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை அரசாண்ட ஒல்லாந்தத் தலைவர் ஒருவர் யாழ்ப்பாணத்தைப்பற்றிக் கூறியது

ஈ—3

www.padippakam.com



கவர்ச்சிகரமானது; 'யாழ்ப்பாண அரசில் வாழுவோர் கர்வமும், மமதையும் கொண்ட பிடிவாதக் குணமுள்ள முட்டாள்கள். இடங்கண்டால் தமக்கு மேலான உத்தியோகத்தர்மீது மேலதிகாரிகளுக்குப் பொய்க் குற்றம் சாட்டுவார்கள். ஆனால், அவ்வுத்தியோகத்தர் கடுமையாய் இருந்து இடங்கொடாது நடந்தால் அவருக்குப் பல்லுக்காட்டி அவர்காலிற் போய் விழுவர். இது அவர் அரசர் அரசாண்ட காலத்திலும் போர்த்துக்கேயர் அரசாண்ட காலத்திலும் அவர் பழகிய பழக்கம்.

ஒல்லாந்த அரசினர் சீர்திருத்திய கிறித்தவ மதத்தை (Dutch Reformed Church) நாட்டிலே பரப்ப முயன்று வந்தனர். அதற்காக 35 கோயில்களும் 4 குருமார்களும் இருந்தனர். அன்றியும் அவர் வருகைக்கு முன் போர்த்துக்கேயர் காலத்தில் அங்கு இருந்த உரோமன் கத்தோலிக்கக் கோயில்களையும் கன்னியர் மாடங்களையும் அழித்துவிட்டு, தாம் உண்மை எனக் கண்ட தமது சமயத்தைப் பரப்பப் பெரும் பொருள் விட்டு ஒரு சமயக் கல்விச் சாலையையும் நடத்தி வந்தனர். ஆனால் அவர் எண்ணம் நல்ல பயனைக் கொடுக்கவில்லை. ஒரு முறை அரச உத்தியோகத்தர் அந்தக் கோயில்களிலே போய்ச் சோதித்துப் பார்த்தபோது அங்கு கிறித்தவ வணக்கப் பொத்தகங்கள், கிறித்தவ வினாவிடைப் பொத்தகங்களோடே ''அஞ்ஞானிகளுக்குரிய'' சைவப் பொத்தகங்களும் காணப்பட்டதாக முறையிட்டனர். ஒரு முறை, வரணிக் கோயிலில் கல்வி பயிற்றும் ஆசிரியர்களின் உத்தரவோடு அங்குள்ள பள்ளிக்கூடத்தில் ஒரு போர் வீரன் சென்று ''அஞ்ஞானிகள்'' சமயக் கதைகளைப் பிள்ளைகளுக்குப் போதித்தானாம். அதை அறிந்து அவனைப் பிடித்துத் தண்டிக்க அரசினர் முயன்றபொழுது அவனைப் பிடிக்க முடியவில்லை. அப்பள்ளிக்கூட ஆசிரியரை வேலையினின்றும் அகற்றினர். வரணிப் பக்கத்தில் இவ்வகையான ''அஞ்ஞான'' வழக்கம் களவில் நடைபெற்று வந்தது.

படிப்பகம்

www.padippakam.com



1679-ம் ஆண்டு இதுபோன்ற சைவ வழிபாடு அரசினர் சமயத்துக்கு மாறாக நடந்தது. அதைப்பற்றி அரசினர் விசாரித்தபொழுது அதை நடத்தியவர்கள் ஒளித்துவிட்டனர். இறுதியில் திம்மேச நாயக்கன் என்பவனின் உதவிகொண்டு அவரைக் கைப்பற்றினர். இவ்வகையான ''அஞ்ஞான''ச் சமய ஒழுக்கங்களுக்கு வன்னியரே காலாக இருந்தனர் என அரசினர் கருதினர். ஏனெனில் அவருடைய ஆட்கள் வரணியிலும், பச்சிலைப் பள்ளியிலும் இருந்து வந்தனர். அவரைப் பற்றி ஒல்லாந்தர் பின்வருமாறு குறிப்பிடுவர்:—''வன்னியரே மிக மோசமான பேய் வழிபாட்டுக்கார அஞ்ஞானிகள். இதுவரையும் அவர் ஒரு வெள்ளைக்காரனையும் தங்கள் வீட்டுக்குள் விட்டறியார். அவ்வாறு வீட்டுக்குள் விட்டால் தாம் களவிலே வைத்து வழிபடும் அஞ்ஞானக் கடவுளர் உருவங்களைக் கண்டுபிடித்து விடுவர் என்ற அச்சத்தினாலேயே இவ்வகையாகச் செய்கின்றனர்.'' இதைக் குறித்துப் பேசுமிடத்து பின்வரும் ரசமான செய்தியும் நோக்கத்தக்கது.

ஒரு முறை வன்னிவாசியாகிய தொன்பிலிப்பு நல்லை மாப்பாணன் என்பவன் தன்னுடைய மகன் ஒருவனைக் கிறித்தவ சமயக் கல்விச் சாலையிலே ஒரு மாணவனாகச் சேர்க்கும்படி ஒல்லாந்த தேசாதிபதியாகிய மிறிச்சற்று என்பவனைக் கேட்டான். அவன் இவ்வாறு கேட்டது உண்மையான கிறித்தவ சமயப் பற்றினாலன்று; தேசாதிபதியை மகிழ்வித்து அவன் ஆதரவைப் பெறவேஇவ்வாறு செய்தான். மிறிச்சற்றுத் தேசாதிபதி மாறி நாட்டை விட்டுச் சென்ற உடனே அப்புதல்வனை ஏதோ சாட்டுச் சொல்லி, சமயக் கல்விச் சாலையினின்றும் வீட்டிற்குத் திருப்பி அழைத்து விட்டான். அன்றியும் இச்சிறுவன் திசாவை ஒருவனோடுகூட நாகப்பட்டினம் சென்றிருந்தபோது, மாறுவேடம் பூண்டு கொண்டு ஒரு சைவக் கோயிலிற் சென்று வழிபட்டுக் கொண்டிருக்கையில் பிடிபட்டான். இந்நிகழ்ச்சியைப் பற்றி ஓர் ஒல்லாந்த ஆசிரியர் குறிப்பிடுவதாவது: ''இச்சிறுவனுக்கும் பத்து அல்லது பன்னிரண்டு வயதுதானிருக்கும். இவனை

www.padippakam.com



அவன் பெற்றோர் வேறொரு சமயக் கல்வியைப் படிக்கவிட்டிருக்கும்போது இவன் இவ்வாறு சைவக் கோயிலிற் போய் வழிபடல் மிகவும் விந்தையானது. இவன் தன் பெற்றோர் இப்படிச் செய் என்று கட்டளையிட்டிராமல் இவ்வாறு செய்வானா? அன்றியும் அவர் வழக்கமாய் இரகசியத்திற் செய்வதையே கண்டு தானும் இவ்வாறு செய்தான் என்றே எண்ணுதல் வேண்டும். சமய ஒழுக்கத்தைப் பற்றிப் பேசும்போது இது போலப் பல செய்திகள் வெளிப்பட்டுள்ளன. இந்த நாட்டார் எமது உண்மைச் சமயமாகிய கிறித்தவத்தை ஏன் விருப்பமாய்க் கைக்கொள்ளுகின்றாரில்லை என்பது அறிய முடியாததொன்று. யாவர் மனத்தையும் உள் நின்றாராயும் ஆண்டவனுக்கே இதன் காரணம் தெரியும். இவரின் ஆன்மா காக்கப் படுவதற்கு இன்னும் காலம் வரவில்லையோ அன்றி வேறு காரணத்தாலோ, எல்லாம் வல்ல இறைவனுக்கே தெரியும்.''

www.padippakam.com

# நாகர்கோயில்

யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறைக்குக் கிழக்கே பத்துக் கட்டை தொலைவில் நாகர்கோயில் என்னும் பெயருள்ள ஒரு சிற்றூர் உண்டு. இவ்வூரின் தெற்கெல்லை யாழ்ப்பாணக் குடா நாட்டில் தொண்டைமானாற்றிலிருந்து பரவி இருக்கும் உப்பாறு ஆகும். இவ்வாற்றினருகிருக்கும் நிலம் உப்பங்கழியாகையின் இங்கு கண்டல் மரம் பெரும்பாலும் வளரும். இக்கழி நிலத்தருகே வடபுறமாக மருத நிலமுள்ளது. இந் நிலத்து அவ்வூர் வாழ் உழவர் செந்நெல் விளைப்பர். புன்செய் நிலமாகையின் ஆண்டுக்கொரு முறையே உழுது பயிரிடுவர். ஏனைய காலங்களில் வயல்கள் வெற்றெனக் கிடக்கும். இம் மருத நிலமும் ஒரு சிறிதளவே அங்குள்ளது. இது முடியும் எல்லையிலிருந்து வடபால் நோக்கி நெய்தல் நிலம் தொடங்கும். இம்மருதநில எல்லையிலிருந்து சற்றேறக் குறைய இரண்டு கட்டை தொலைவிலுள்ள கடல் மட்டும் நெய்தல் நிலமே பரந்துள்ளது.

இந்நெய்தல் நிலப்பரப்பு பருத்தித்துறைக்கு அடுத்துள்ள நெய்தல் நிலத்தூராகிய கற்கோவளத்திலிருந்துதொடங்கும். இது கிழக்குப் பாகத்தே கரையோரமாகப் பரந்து பச்சிலைப் பள்ளிக்கு அடுத்துள்ள கோவில் வயற்குடா நாடு வரைக்கும் செல்லும். யாழ்ப்பாணத்தில் இப்பகுதி மிகச் சரித்திரப்

www.padippakam.com



பெருமை வாய்ந்தது. பெரிய குடியிருப்புக்களைப் பழங் காலத்திற் கொண்டிருந்தது என்று சரித்திர நூல் வல்லோர் கருதுவர். வல்லிப்புரக் கோயிலும் குடத்தனையும் இந்நிலப் பரப்பிலேயே உள்ளன. வல்லிப்புரக் கோயிலிற் கண்டெடுத்த சாசனத்தின்படி கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் அநுராச புரத்திலிருந்து இலங்கையை அரசாண்ட வசபன் என்னும் அரசன் காலத்திலே நாக தீவத்தை அவன் அமைச்சருள் ஒருவனாகிய இசிகிரயன் என்பவன் மாகாண அதிகாரியாய் இருந்து பரிபாலித்து வந்த காலத்தில் பியகுகதீசன் என் பவன் கட்டியெழுப்பிய புத்தப் பள்ளியிருந்த இடத்திலேயே பிற்காலத்தில் வல்லிப்புரக் கோயில் தோன்றியிருக்கின்ற தெனத் தெரிகிறது. மேலும் புத்த பள்ளிகளை அமைக்கும் பொழுது அதன் அத்திவாரத்தின் கீழ் மக்கள் கண்ணுக்கு எட்டாது பொற்றகட்டில் அப்பள்ளியை ஆக்குவோனின் பெயர் பொறித்து வைத்தல் அக்கால மரபு. அவ்வாறெனின் அத்திவாரத்துக்குக் கீழ் புகைக்கப்பட்ட பொற்றகடு மேலுக் குக் கிளம்பியதன் காரணம் யாது என்ற கேள்வி எழும். அதற்கு விடை என்னவெனின் அப்பள்ளி கட்டிய காலத்தும் அந்நிலம் மணலாகவே இருந்ததென்க. ஆகையால் இந் நிலப் பரப்பு சரித்திர எல்லைக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மணல் நிலமாக இருந்திருக்கிறது. 1952-ம் ஆண்டில் நடந்த கடல் கோள்போல முன்பும் எத்தனையோ கடல்கோள்கள் இப் பகுதிக்கு நடந்தனவென்று பழைய நூல்கள் வாயிலாக அறிகிறோம். அன்றியும் இப்பகுதி பழங்காலத்தொட்டே இலங்கைச் சரித்திரத்தில் கீர்த்தி வாய்ந்ததாய் இருந்து வரு கின்றதென அறிகின்றோம். இப்பொழுது சிறுகாடு அடர்ந்து இடையிடையே மக்கள் வாழும் சிறுச்சிறு ஊர்கள் உடைய தாய் இருக்கின்றது. இக்காட்டுப் பக்கங்களில் உள்ள மணற் பரப்பில் செங்கல்லுத்துண்டுகளும் கலவோடுகளும் மலிந்து காணப்படுகின்றன. அதனோடு பொற்காசுகளையும் சில வேளைகளில் திரவியங்களையும் மக்கள் கண்டெடுக்கின் றனர். இப்பகுதி நிலத்தைத் தொல்பொருட்கலை ஆராய்ச்

www.padippakam.com



சியாளர் ஆராய்ந்து பார்த்தால் பழைய உண்மைகள் ஒரு வாறு வெளியாகும்.

நிற்க, இந்நாகர்கோயிலுள்ள நெய்தல் நிலப் பரப்பும் இப்பெரும் பகுதியின் ஒரு கூறே. ஆகையின் இவ்வூருள்ள பகுதியும் சரித்திரப் பெருமை வாய்ந்திருந்தது, என்பது போதரும். இங்கிருக்கும் காட்டு மணல் நிலங்களிலும் கலவோடுகளும் செங்கற்றுண்டுகளும் மலிந்திருப்பதை எங்கும் காணலாம்.

இவ்வூரிலே கீர்த்தி வாய்ந்த கோயில் ஒன்று இருக் கின்றது. இக்கோயிலின் பெயர் நாகதம்பிரான் கோயில், இது இங்குள்ள மருத நிலமும் நெய்தல் நிலமும் சந்திக்கும் இடத்தில் உள்ளது. மிகப் பெரிய கோயிலன்று. எனினும் எவராலும் நன்கு போற்றப்படுவது. இக்கோயிலிலுள்ள நாகதம்பிரானையே இவ்வூரிலுள்ளார் முக்கிய கடவுளாக வணங்குவர். இக்கோயிலின் மூலமூர்த்தி சிவலிங்கத்தைத் தனது படத்துள் அமைத்து வைத்திருக்கும் ஐந்துதலை நாகம். இத்திருவுருவம் பழைய உண்மையை எடுத்துக்காட்டு மாயின் ''நாகதம்பிரான்'' என்னும் சொற்றொடர் சிவபெரு மானுக்கே உள்ள வேறொரு பெயராகும் ''தம்பிரான்'' என்ற சொல் சிவபெருமானுக்குப் பெயராய்ப் பெரியபுராணம் வழங்கும். ''தம்பிரான்தோழர்'' என்னும் சொற்றொடர் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குறிக்கும், சிவபெருமானுக்குத் தோழர்'' என்னும் பொருள் படுதலால். ஆனால், மலையா ளத்தில் ''தம்பிரான்'' என்னும் சொல் அரசனைக் குறிக்கும். திருவனந்தபுரத்து அரசரை இன்றும் தம்பிரான் என்றே அழைப்பர். அதனால் இது ''நாகமாகிய தம்பி ரான்'' என்ற பொருளைத் தருகிறது. அதாவது நாக மாகிய கடவுள் என்று பொருள்படும். இப்பொருளே மக்கள் மனதில் இன்று ஊன்றி இருக்கின்றது. இப்பொருளை யொட்டி அவ்வூரில் பல கதைகளும் எழுந்துள்ளன,

பறங்கியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆண்ட காலத் திலே ஒரு முறை நாகர்கோயிற் கடற்கரையில் பறங்கியரின்

படிப்பகம்

www.padippakam.com



போர்க் கப்பல் ஒன்று வந்து நங்கூரமிட்டது. அவர் படையிற போர் வீரராக்கும் எண்ணத்தோடு அவ்வூரிலிருந்த ஆயிரம் வாலிபரைக் கைப்பற்றினர். இச்செய்கை அவருக்கும் அவர் பெற்றோர்க்கும் இசையவில்லை, பறங்கியர் ஆட்சி அக்காலத்தில் தன்னரசு முறையைக் கைக்கொண்ட கொடுங்கோலாட்சி ஆயினமையின் அவ்வூர் மக்கள் அரசினரின் இவ்வடாத செய்கையை எடுத்து மொழியப் பெரிதும் அஞ்சினர். அதனால் தாம் வழிபடும் கடவுளாகிய நாக தம்பிரானுக்கே இவ் அநியாயத்தை முறையிட்டுப் பழிகிடந்தனர். தம்மக்களின் இடரைக்கண்ட தம்பிரான் அவரைக் காக்கத் திருவுளங்கொண்டார்.

இது இவ்வாறாக, பறங்கியர் இளைஞர் ஆயிரவரையும் ஒருகுறித்த நாளில்கோவைக்குக்(Goa)கொண்டுசெல்லக்கப்பலேற்றுவரென்று அவ்விளைஞரின் பெற்றோர் யாவரும் அறிந்தனர். ஊரவர் கப்பல் நங்கூரமிட்டு நிற்கும் கடற்கரையிலே திரள் திரளாய் வந்து சேர்ந்தனர். எங்கும் அழுகையும் ஓலமுமாக இருந்தது. இவர்கள் இப்படியிருக்கப் பறங்கிக் கப்பற் தலைவனும் கடற்படை வீரரும் கப்பலுக்கு வந்து சேர்ந்தனர். அவரோடு அவ்விளைஞர் ஆயிரவரும் அக் கப்பலிலேற்றப்பட்டனர். சிறிது நேரத்தில் கப்பல் பாயெடுப்பதற்காகிய முன்னேற்பாடுகள் யாவும் அங்கு நடந்துகொண்டிருந்தன. கப்பல் மாலுமிகள் அங்குமிங்கும் ஓடி ஓடித் தத்தமக்கிட்ட வேலைகளைக் கவனித்து வந்தனர். இவ்வாறு வேலைகள் நடந்துகொண்டிருக்கும்போது மாலுமி ஒருவன் கம்பற் பாய்களை ஒழுங்குபடுத்துவதற்காகக் கப்பலின் நடுப்பாய் மரத்தில் ஏறினான். அப்பொழுது அங்கு ஒரு நாகபாம்பு படுத்திருப்பதைக் கண்டான். உடனே அதற்கு அஞ்சிக் கீழிறங்கி ஓடிச் சென்று கப்பற்றலைவனுக்குக் கூறினான். மாலுமிகள் யாவரும் தலைவனோடு பாய்மரத்தருகே வந்து பாம்பு படுத்திருப்பதைப் பார்த்தனர். பின்னர் ஒரு துப்பாக்கி எடுத்து அதற்குள் வெடிமருந்தும் குண்டும் போட்டு அப்பாம்பிற்கு இலக்கு வைத்துச் சுட்டனர்.

www.padippakam.com



பாம்பு ஆயிரத்துக்கு மேலான துண்டுகளாகிக் கப்பற்றளத்தில் வீழ்ந்தது. இதைக் கண்டு கப்பற்றலைவனும் மாலுமிகளும் மிகுந்த ஆனந்தம் கொண்டனர்.

இவ்வாறு அவர் ஆனந்தமுற்றிருக்கையில் ஒவ்வொரு துண்டும் ஒவ்வொரு பாம்பாகிப் படமெடுத்துச் சீறி நின்றாடியது. இக்காட்சியைக் கண்டதும் பறங்கியர் அஞ்சினர். ஒன்றோ, இரண்டோ அல்ல. ஆயிரத்துக்கு மேலான பாம்புகள், அடியெடுத்து வைக்கவும் இடமில்லாது கப்பலெங்கும் பாம்புகளாகக் காட்சியளித்தன. இதற்கிடையில் புயலோன்றும் எழுந்தடித்தது. அப்புயலின் ஆவேசத்தால் கப்பல் பக்கத்துக்குப் பக்கம் ஆடி அசைந்து நீர்கோலி ஆழும் நிலையில் இருந்தது. தலைவன் இவ்வாபத்தான நிலையைக் கண்டான். உடனே பாரத்தைக் குறைப்பதற்காக அங்கு ஏற்றிய இளைஞர்கள் யாவரையும் இறங்கும்படி கட்டளையிட்டான்.

அவ்வாறு அவர்கள் ஒவ்வொருவரும் இறங்கும்போது ஒவ்வொரு பாம்பும் அவருடன் இறங்கியது. கப்பலின் பாரம் குறைந்தபடியால் கப்பலின் அபாயமும் நீங்கிற்று என எண்ணிக் கப்பற் தலைவன் உவகை யெய்தினான். ஆனால், ஒரு பாம்புமட்டும் இறங்காது நின்று பெரும் நாதமிட்டுச் சீறும் பயங்கரமான ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. இன்னும் ஒரு பாம்பு கப்பலின் உட்புறத்தில் நிற்பதை அறிந்தனர். அப்பொழுது கப்பலின் உட்புறத்தை ஆராய்ந்து பார்த்தபோது அங்கு சிறுவன் ஒருவன் இருக்கக் கண்டனர். அவனைக் கப்பலின் சமையற்காரன் தன் அட்டற்றொழிலுக்கு உதவி புரிவதற்குப் பிடித்து வைத்திருந்தமை ஒருவருக்கும் தெரியாது. கப்பலுக்குள்ளே கொண்டு வந்து அட்டல் அறைக்குள் ஒளித்து வைத்திருந்தான். அதை அறிந்து மாலுமிகள் அச்சிறுவனையும் வெளியே கொண்டு வந்தனர். பாம்பும் அவனைப் பின் தொடர்ந்து வந்தது. உடனே அவனையும் கரையில் இறக்கினர். அவனோடு பாம்பும்

www.padippakam.com



சென்றது. புயலும் ஓய்ந்தது. இதை அறிந்து மாலுமிகள் மூச்சுவிட்டு மனம் ஆறினர். அதன்பின் கப்பல் பாயெடுத்து அவ்வூரைவிட்டு நீங்கியது. ஊரவர்கள் நாகதம்பிரான் கோயிலுக்குச் சென்றுபெரிய வழிபாடாற்றி நாகதம்பிரானை வழுத்தி நின்றனர்.

இக்கோயிலிலே திருவிழா ஆண்டுதோறும் புரட்டாதி மாதம் நடக்கும். அங்கு நடக்கும் திருவிழாக்களில் ஒன்று கப்பற்றிருவிழா. அப்பொழுது ஒரு கப்பல் கட்டி, பறங்கியர் போல் உடையணிந்து, பறங்கியர் அவ்வூர் இளைஞரைப் பிடித்துத் தம் கப்பலில் ஏற்றிப் பின் நாகதம்பிரானின் அருளால் இறக்கிவிட்ட வைபவத்தை மக்கள் முன்னிலையில் பாட்டுப்பாடி நடித்துக் காட்டுவர். அன்றியும் கடைசித் திருவிழாவாகிய கடற் தீர்த்தத்தன்று சுவாமியை அலங்கரித்து மிக்க ஆடம்பரத்துடன் அங்குள்ள கடற்கரைக்கு எடுத்துச் சென்று தீர்த்தமாடுவர். தீர்த்தமாடும் இடமே பறங்கியரின் கப்பல் வந்து நங்கூரமிட்டு நின்ற இடம் என்று அங்குள்ளார் இன்றும் கூறுவர்.

நாகதம்பிரானின் திருவிளையாடல்களைப்பற்றிய இன்னும் பல கதைகள் அவ்வூரவர்க்குள் வழங்குகின்றன. ஒருமுறை கடற் திருவிழாவன்று தீர்த்தமாட்டுதற்குச் சுவாமியைக் கொண்டு செல்ல ஏதோ பிணக்கால் சிறிது நேரம் சென்று விட்டது. மக்களும் கடற்கரையிற் தீர்த்தமாடும் இடத்திற் கூடிவிட்டனர். சுவாமியை இன்னும் கொண்டு வரவில்லை. அப்பொழுது எவரும் பார்க்கக்கூடிய வண்ணம் நாகமொன்று அங்கு வந்து கடலிற் தீர்த்தமாடியது. அவ்வற்புதக் காட்சியைக் கண்டு ஆனந்தித்து மக்கள் நாகதம்பிரானைப் பரவி நின்றனர்.

அவ்வூரிலே இருபகுதி மக்கள் வாழுகின்றனர். தரைப் பகுதியில் வேளாண் மக்கள். கரைப் பகுதியில் நெய்தல் நில மக்கள். இருபகுதியாருக்கும் உரியது நாகதம்பிரான் கோயிலாகையினால், வழக்கமாக ஒற்றுமையாகவே இங்கு திருவிழாக்கள், பொங்கல் பூசைகள் முதலிய நடைபெறும்.

படிப்பகம்

www.padippakam.com



ஊடுதலும் உவத்தலும் மனித இயற்கையாகையின் சிற்சில வேளைகளில் இருபகுதியாருக்கும் சண்டை சச்சரவுகள் வருதலும் உண்டு. திருவிழாக் காலத்தில் ஒருநாள் அவ்வகையான சண்டையொன்று எழுந்தது. முதலில் வாய்ப்போராய் எழுந்தது கைப்போர் பொல்லுப்போராய் மாறுதற்கு ஆயத்தமாயிற்று. எங்கும் ஒரே குழப்பமும் கொந்தளிப்புமாகவிருந்தது. திருவிழாவும் நிறுத்தப்படவேண்டிய நிலையில் இருந்தது. இவ்வாறான கலவரத்துக்கிடையில் ஒருவன் அங்குள்ள பலிபீடத்தில் ஒரு பாம்பு வந்திருக்கக் கண்டு, யாவருக்கும் உரக்கக் கூவி அச்செய்தியைச் சொன்னான். உடனே சண்டை நின்றது. யாவரும் நாகதம்பிரானை வீழ்ந்து வணங்கித் தாம் செய்த இத்தீர செயலை மன்னிக்குமாறு இரந்து வேண்டினர். அதன்பின் திருவிழா முன்னரிலும் பெரும் அன்போடு மிக விமரிசையாக நடந்து முடிந்தது.

அங்கு நாகபாம்புகள் பல வாழுகின்றன. அவை எவருக்கும் தீங்கு செய்வதில்லை. பூசை செய்யும் பூசாரியார் அவற்றிற்குப் பாலும் பழமும் வைக்கும் வழக்கம் உண்டென்று கூறுவர். கோயிலில் ஏதாவது குற்றம் நடந்துவிட்டால் பாம்பு அங்கு மக்களுக்கு வெளிப்பட்டு நிற்கும் என விளம்புவர். மறு நேரங்களிலும் அவ்விடத்தில் பாம்பு உலாவ மக்கள் காண்பதும் உண்டு.

ஒருநாள் அங்கு வழக்கமாகப் பூசை செய்யும் பூசாரியார் ஏதோ வேலையாய் எங்கோ சென்றுவிட்டார். அவர் போகும்போது மறுநாள் பூசையைப் போய்ச் செய்துவிடுமாறு சிறுவனாகிய தன் மகனிடம் கூறி இருந்தனர். சிறுவன் பூசை செய்யுமாறு அங்கு சென்று கோயிற் கதவைத் திறந்தான். கதவு சிறிது திறந்ததும் அங்கு ஒரு பாம்பு வாயிற்படிக்கருகில் கிடப்பதைக் கண்டான். கோயிற் பாம்பாகையின் அதற்கு அவன் அவ்வளவு பயப்படவில்லை. பாம்பைக் கடந்து கோயிலுக்குள் போதல் முறையன்றென எண்ணி சிறிது நேரம் அங்கு வெளியே நின்றான். பாம்போ நகர்ந்தபாடில்லை.

www.padippakam.com



பின்னர் சிறு தடி ஒன்றினை எடுத்து அதனால் பாம்பைச் சிறிது தள்ளினான். பாம்புக்குக் கோபம் வந்துவிட்டது. கோயிலுக்குள் ஒரேஇரைச்சலாக இருந்தது. சிறுவன் பயந்து நடுங்கினான். பாம்பின் இரைச்சலைக் கேட்டு அங்கு பலர் வந்து கூடினர். அங்கு நின்றோருள் ஒருவன் ஓடோடியும் பூசாரியார் வீட்டுக்கு வந்து நடந்தவற்றைக் கூறினான். அத்தறுவாயில் பூசாரியாரும் வீடு வந்து சேர்ந்தனர். அவர் நிகழ்ந்தவற்றை அறிந்து விரைவில் நீராடிவிட்டுக் கோயிலை அடைந்தார். பாம்பு நாதமிட்டுக்கொண்டு கிடப்பதைக் கண்டார். உடனே கதவைத் திறந்து, ''எம்பெருமானே! என் மகனோ சிறு குழந்தை. அவன் செய்ததை இவ்வாறு கோபமாய் எடுக்கலாமா? நகர்ந்து வழி விடுங்கள்; பூசைக்கு நேரமாகிறது'' என்று தம் கைகளைக் கூப்பி வணங்கிக் கூறினார். நாத ஒலி நின்றது. பாம்பும் ஒரு பக்கம் நகர்ந்தது. பூசையும் செவ்வனே முடிவுற்றது.

இவ்வூரிலே விடந்தீண்டி மக்கள் இறப்பது குறைவு. யாருக்காவது விடந்தீண்டிவிட்டால் விடந்தீண்டியவரைக் கோயிலுக்குக் கொண்டுவந்து அங்குள்ள புற்று மண்ணை எடுத்துக் கோயிலுக்கு அருகிலிருக்கும் நீர்நிலையிலுள்ள தண்ணீருடன் கலந்து குடிக்கக் கொடுப்பார். சிறிது நாளில் விடம் தீர்ந்து போகும். இந்நீர்நிலைக்குள், ''குடவாழை'' என்ற ஒருவகைச் செடி அடர்ந்து வளர்ந்துள்ளது. இச்செடியின் சத்து விடத்தைப் போக்க வல்லதோ என்றும் ஆராயத் தக்கது.

இன்று இவ்வளவில் நிற்க இதுவரையில் ''நாகதம் பிரான்'' என்ற சொற்றொடரை நாகமாகிய தம்பிரான் எனப்பொருள் கொண்டுஆராய்ந்தோம். ''நாகர் தம்பிரான்'' என்னும் தொடரும், 'நாகதம்பிரான்' என்று உருவங் கொண்டு வழங்கும், 'வணிகர் தெரு' 'வணிக தெரு' என்று மருவி வழங்குதல் போல. நாகர் என்னும் சொல்லும் தம்பிரான் என்னும் வேற்றுமை வழியாகப் புணர்ந்து இப்பொழுது வழக்கிலிருக்கும் நாகதம்பிரான் எனும் தொடர் வந்திருக்க

www.padippakam.com



லாம் எனக் கொள்ளின் இச்சொற்றொடர் நாகர் என்னும் சாதியாரின் அரசன் என்று பொருள்படும். வல்லிபுரக் கோயிலில் கண்டெடுத்த சாசனத்தினாலும் மற்றும் வேறு ஏதுக்களினாலும் இப்பொழுது, ''யாழ்ப்பாணம்'' என வழங்கும் நிலப்பரப்புக்கு நாகதீபம் என்ற பெயர் பண்டைக் காலத்தில் இருந்ததென அறிகிறோம். ஆகையினால், யாழ்ப் பாணம் நாக சாதியாரின் குடியிருப்பாய் இருந்த அக்காலத் தில், ''நாகர்கோயில்'' எனப்படும் அவ்வூர், நாகர் தம் அரசன் வசியும் ஊராக இருந்திருக்கலாம். அதாவது, நாகர்கோவிலின் கோட்டை அங்கேயே இருந்தது. அங்கி ருந்தே நாகர் தலைவன் அப்பகுதியை அரசாண்டான் என்று போதரும்.

மேலும் இராசநாயக முதலியாரவர்கள் தமது ''பண் டைய யாழ்ப்பாணம்'' என்னும் சரித்திர நூலில், ''கந்த ரோடை'' என்னும் ஊரே, யாழ்ப்பாணத்தில் நாகர் காலத்துத் தலைநகராயிருந்ததெனக் கூறுங்காலத்தில், அங்கு நாகர் மட்டுமேயன்றி வேறு சாதியாரும் வந்து கூடி விட்டனர் எனத் தெரிகிறது ஆனால், ''நாகர் கோயில்'' என்னும் ஊர் தலைநகராயிருந்த காலத்தில் நாகரேயன்றிப் பிற மக்கள் அங்கு இருக்கவில்லையெனஊகித்தற்கிடமுண்டு. ஆகையால், நாகர் கோயிலே யாழ்ப்பாணம் நாகர் குடியிருப் பாயிருந்த காலத்து முதற்றலை நகராயிருக்கலாம்.

இதுபோலவே, தென் இந்தியாவிலும், ''நாகர் கோயில்'' என்னும் பெயருடைய ஓர் ஊர் இருக்கிறது. மிகப் பழங்காலத்து நாகர் சாதியார் இந்தியாவின் தென்கோடியில் வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. நாகபட்டினம் நாகர்கோயில் போன்ற ஊர்ப் பெயர்கள் இதற்குச் சான்றாகும். அன்றியும் மலையாளத்தில், ஈழத்தில் இருப்பது போலவே, ''நாக'' வழிபாடு இன்றும் இருந்து வருகிறது. இங்குள்ள ஒவ்வொரு நம்பூதிரிப் பார்ப்பனர் இல்லத்திலும் அதன் தெற்குப் பக்கத் தில், 'நாக' வழிபாட்டிற்குரியஇடங்கள் காணப்படுகின்றன. இதனால் நாக வழிபாடு இங்கு பண்டைக்காலந்தொட்டே இருந்து வருகிறதெனத் தெரிகிறது. எனவே, இப்பகுதிக்கும் நாகர் காலத்தில் இங்குள்ள நாகர் கோயிலே அரசன் இருப்பிடமாயிருந்திருக்கலாம்

www.padippakam.com

# யாழோசை

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழ் மொழிக்கு ஆக்கம் தந்த பெரியார்கள் மிகச் சிலரே. அவருள் ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை மறைமலை அடிகள் முதலியோர் குறிப்பிடத் தக்கவர். நாவலர் அவர்கள் சைவசமயக் கல்விக்கும் சைவப் பண்பாட்டிற்கும் புத்துயிர் அளித்தார். தாமோதரம்பிள்ளை அவர்கள் சங்க நூல்களையும், பழைய இலக்கணங்களையும் துருவி ஆராய்ந்து அச்சுவாகனமேற்றித் தமிழனின் பண்டைப் பெருமைகளையும் சீரிய பண்பாடுகளையும் உலகோர் அறிய வைத்தார். மறைமலை அடிகள் வடமொழியின்றித் தமிழ் தனித்தியங்காது என்னும் வெற்றெண்ணத்தைத் தகர்த்தெறிந்து, அதற்குப் பண்டைத் தூய்மையைத் தேடிக் கொடுத்தார். விபுலாநந்த அடிகளாரும் வடநாட்டுப் பண்பாடு முதலியவற்றால் அழிந்தொழிந்து போன தமிழிசையையும் தமிழிசைக் கருவிகளையும் தமது ஆராய்ச்சியின் திறனால் திரும்பவும் எடுத்துத் தமிழ் மக்களுக்கு அளித்துப் பெரும் புகழீட்டினார். தமது நலங் கருதாத இப் பெரியோரின் ஓயா உழைப்பினால் தமிழ்த்தாய் இன்று உலகினர் போற்றவும் தமிழ்மக்கள் சூழ்ந்து நின்று ஏத்திப் புகழவும் அரியாசனத்தில் வீற்றிருக்கின்றாள்.

விபுலாநந்த அடிகளார் சங்க நூல்களைக் கற்றுத் தெளிந்த பேரறிஞர். தமிழிலக்கணங்களை ஆராய்ந்தறிந்த

படிப்பகம்

www.padippakam.com



பேராசான். உரைநடை எழுதுவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். சிறந்த கவி புனையும் பேராற்றல். மிக்கவர். அன்றியும் தாம் ஆங்கில மொழிமூலம் கற்றறிந்த பூதநூல் வேதிநூல் முதலியவற்றில் நுண்பொருள்களைக் கற்றோரும் மற்றோரும் எளிதில் அறியக்கூடிய வண்ணம் தூய தமிழில் எடுத்து விளக்குவதில் வல்லுநர். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களையும் இலக்கியங்களையும் தமிழ்மொழியில் பெயர்த்துத் தமிழுக்கு ஆக்கந் தேடித்தந்த பெரும்பேரறிஞர். இத்தகைய பேரறிஞர் தமிழ்மொழிக்குத் தாமே தொண்டு செய்வதோடு அமையாது வேறு பல அறிஞரையும் இப்பணியில் ஊக்குவிக்கும் பெருங்குணம் படைத்தவர். புத்தம் புதிய நூல்கள் பல தமிழ்மொழியில் எழுதல் வேண்டும் என்பதே அடிகளாரின் வேணவா. அதற்காகத் தம்மாலியன்றவற்றை எல்லாம் செய்து வத்தார். நன்மாணாக்கர் பலரை நாடெங்கும் உருவாக்கினார். தாம் முயலுந்துறைகளில் பணியாற்றும் புலவர்களுக்கும் நூலாசிரியர்களுக்கும் ஊக்கமளித்தார். சுருங்கக் கூறின் தமிழ்மொழி மேலோங்க வேண்டுமென்று தம்முள்ளத்திற் கிடந்த பேருணர்ச்சியைத் தம் சுற்றாடலில் வந்தடைந்த எவருக்கும் அள்ளி இறைத்தார். அடிகளாரின் உணர்ச்சி வேகம் வந்தடைந்த எவரையும் அவர்பால் இழுத்தது. தமிழ்த் தொண்டில் ஈடுபடச் செய்தது. அடிகளார் தம் வாழ்க்கையில் முன்னேற்றமான கொள்கையுடனே வாழ்ந்தார். சமயத்துறையில் பழைய வேதாந்தத்தைக் கடைப்பிடித்தவர் அல்லர். காலத்துக்கேற்றவாறு சமய ஆசாரங்களைத் திருத்தி அமைக்க வேண்டும் என்னும் எண்ணக் கருத்துடையவர். தமிழ் மொழியைப் பொறுத்தவரையிலும் மிகுந்த முன்னேற்றமான குறிக்கோளையுடையவர். அடிகளார் 1931-ம் ஆண்டு ஆனி மாதம் அண்ணாமலைப் பல்கலை கழகத்துப் பேராசிரியராகப் போயிருந்தபொழுது அவர் ஆற்றிய அரும்பணி ஒன்றனை நாம் இங்கு குறிப்பிடவேண்டி இருக்கின்றது. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய பாட்டுக்கள் யாவும் மிகுந்த உணர்ச்சியுடன் முன்னேற்றமான கருத்துக்

www.padippakam.com



களைப் பொதித்துள்ளனவாயிருந்தாலும், அவை பழைய யாப்பமைதியோடும் தமிழ்மரபோடும் முற்றப் பொருந்தாமையினால் உண்மையான தமிழ்க் கவிகளல்ல என இலக்கண இலக்கியங்களைக் கற்றறிந்த பண்டிதர்கள் வெறுத்தனர். அப்பாடல்களுக்குரிய மேலான சிறப்பையும் கொடுக்க மறுத்தனர். ஆனால், அடிகளார் அண்ணாமலை நகரை அடைந்த போது அங்கு பாரதிகழகம் என்ற ஒரு சங்கமுங்கட்டி அப்பாட்டுக்களை இசையறிந்த புலவரைக் கொண்டு இசையுடன் பாடுவித்தார். அதன்பின்னரே பாரதியாரின் புகழும் பாட்டுக்களும் தமிழ்நாடெங்கணும் பரவின. தேடாதிருந்த பாரதியாரைத் தமிழுலகம் கனம்பண்ண வைத்த பெருமை விபுலாநந்த அடிகளாருக்கே உரியதாகும்.

அன்றியும், பாரதியார் தமது பாடல்களில் விளம்பியவாறு பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும் என்ற ஆசை அடிகளுக்கு இருந்தது. அதனால் தம்மையடையும் விஞ்ஞானம் படித்த அறிஞரை, ஆங்கிலம் கல்லாது தமிழ் மட்டுமே கற்ற பொது மக்களுக்குத் தாம் கற்ற விஞ்ஞானக் கல்வியைத் தமிழில் மொழிபெயர்த்து சிறுச்சிறு நூல் வடிவமாகவோ கட்டுரை வாயிலாகவோ கொடுத்தல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுவர். ஆனால், விஞ்ஞானம் படித்த பெரும்புலவருக்கோ தமிழ் வராது. அதனால் அவர் படித்த படிப்பெல்லாம் தமிழ் மட்டுமறிந்த பொதுமக்களுக்குச் சிறிதும் பயன்படாதிருந்தது. அந்த நிலை இந்நாளிலுங்கூட மாறவில்லை. அடிகளார் இதனைப் பற்றிப் பேசும்பொழுது யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையில் அமெரிக்க மிசனரிமார் வைத்து நடத்திய செமினரியை எடுத்துக்காட்டாகப் பலமுறையும் கூறுவர். அச்செமினரியில் படித்து வேலை செய்த பெரியோர்கள் கணிதநூல், வேதிநூல், பூதநூல், வானநூல், மருத்துவநூல், உடல்நூல் முதலிய மேனாட்டு விஞ்ஞான நூல்களைத் தமிழில் எழுதி வெளியிட்டனர். அவ்வேலையை இடையிலே கைவிடாது யாழ்ப்பாணத்தவர் தொடர்ந்து ஆற்றியிருந்தால் தமிழ்மொழி

படிப்பகம்

www.padippakam.com



மிக விரைவாக முன்னேறியிருக்கும். ஒரு பெரிய தொண்டை யாழ்ப்பாணம் இத்துறையில் ஆற்றியிருக்கும்.

அடிகளாரும் ஏனையோரைப்போலவே ஆங்கிலம் மூலம் விஞ்ஞானம் கணிதம் முதலியவற்றைப் படித்துப் பட்டமும் பெற்றவர். அதனாலே, தாமறிந்த விஞ்ஞான அறிவைத் தமிழ்ப் பொதுமக்களுக்கு அளித்தல் வேண்டும் என்னும் பெரு விருப்புக் கொண்டவர். வேதிநூலைப் பற்றியோ, பூத நூலைப் பற்றியோ நூல்கள் வரைந்து கொள்ள அவருக்கு நேரமில் லாது போயிற்று. ஆனால், தம் விஞ்ஞான அறிவை வேறு வகையாகத் தமிழ் மக்களுக்கு அளித்தார்.

1934-ம் ஆண்டிலே சென்னை மாகாணத்திலுள்ள அறிஞர்கள் ஒன்றுகூடி மேலை நாட்டு விஞ்ஞான நூல் முதலியவற்றைத் தமிழில் ஆக்குவதற்காகச் சொல்லாக்கக் கழகம் ஒன்றைச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் கூட்டினர். அம் மகாநாட்டிற்குப் பொதுத் தலைவராக அடிகளாரையே தெரிந்தெடுத்தனர். அக்கூட் டத்தின் பயனாக எழுந்ததே சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட, 'கலைச் சொற்கள்' என்னும் அகராதி நூல். இந்நூலிற் காணப்படும் கலைச் சொற்களைக் கை யாண்ட அறிஞர்கள் இப்போது தமிழ்நாட்டில் வேதிநூல் கணிதம் அரசியல் நூல் முதலியனவற்றை எழுதுகின்றனர். இவ்வாறு அடிகளார் தொடக்கி வைத்த நன்முயற்சியால் விஞ்ஞானக் கலை இன்று தமிழில் விரைவாக வளர்ந்து வருகின்றது.

தமிழ் நாட்டிலே எத்தனையோ பெரும் மேதாவிகள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். தாம் பிறந்த நாட்டிற்கும் மொழிக்கும் தம்மாலியன்றவாறு அரும்பெருந் தொண்டு களைச் செய்திருக்கின்றனர். தமிழ்மொழி மூலமாக உலகுக் குத் தொண்டு செய்த பெரியார்களுள் வள்ளுவர், இளங்கோ, சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள், மெய்கண்ட

ஈ—4

www.padippakam.com



தேவர், அருணந்தி சிவாச்சாரியார் முதலியோர் குறிப்பிடத் தக்கவர். இப் பெரியார் யாவரும் தமது அரிய எண்ணக் கருத்துக்களைத் தமிழ் மொழி மூலம் உலகுக்கு அளித்தனர். ஆனால், இவர்களைப்போன்ற கல்வியில் உயர்ந்த எத்தனையோ பல தமிழர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்தனர். அவர்களுள் ஆதிசங்கராச்சாரியார், இராமானுசர் முதலியோர் முதன்மை வாய்ந்தவர். அவர்கள் யாவரும் தமிழர் தமிழையே பேசினார்கள். எனினும், உயர்ந்த கருத்துக்கள் பொருந்திய நூல்களைத் தமிழில் எழுதாது வடமொழியில் எழுதி வைத்தனர். அதனால் வடமொழி சிறப்படைந்தது. ஆனால், அந்நூல்கள் தமிழில் எழுதப்பட்டிருந்தால் தமிழ் மொழி எத்துணைச் சிறப்படைந்திருக்கும்?

ஏன் இவர்கள் தமிழில் எழுதவில்லை? தாம் இவற்றைத் தமிழில் எழுதினால் தமிழ் நாட்டவர் மட்டுமே படிப்பார். ஆனால், வடமொழியில் எழுதினால் இந்தியாவிலுள்ளார் யாவரும் படித்தறிவர் என்ற எண்ணத்தினாலேயே இவ்வாறு செய்தனர். மேலான எண்ணங்கள் பொதிந்த நூல்கள் எம் மொழியில் எழுதினாற்றானென்ன? அவை மொழியென்னும் போர்வையை நீக்கிக்கொண்டு வெளியாய் எவருக்கும் முன் நின்று விளங்கிக்கொண்டிருக்கும். இது அந்தக் காலத்தில். இப்பொழுதும் விஞ்ஞானம் முதலிய அறிவைப் பெற்ற எத்தனையோ தமிழர் தமிழில் எழுதினால் அவர் பெருமை உலகுக்கு வெளிவராதாம். அதனாலேயே அவர் ஆங்கிலத்தில் எழுத முன் வந்துள்ளனர். இப்பெரியாரின் அறிவு தமிழுக்குப் பயன்படாமற் போகின்றது. தாம் கற்றவற்றைத் தமிழில் எழுதித் தமிழுலகுக்கு அளிக்குமாறு விஞ்ஞானத்தில் வல்ல பெரியார்களை அடிகள் பல முறையும் வேண்டினர். அக்காலத்தில் அவருரை வெற்றுரை ஆயிற்று. அவர் கூறியவற்றைப் பொருட்படுத்தினார் ஒருவருமிலர். ஆங்கிலேயர் ஆட்சி நீங்கியதும் காலம் மாறியது. இன்று தமிழ்மொழியிலேயே விஞ்ஞானம் வேண்டும், கலைகள் வேண்டும் என்ற

www.padippakam.com



ஒன்றே கூக்குரல். இனிமேலாவது அடிகள் கண்ட கனவு நனவாகுமா?

அடிகளார் தாம் கற்றறிந்த விஞ்ஞானப் பெரும் புலமையைக் கொண்டும் கணித அறிவைக் கொண்டும் பெரும் ஆராய்ச்சிகளைச் செய்து ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கலாம். ஆனால், அவருக்குத் தமிழ்மேல் இருந்த அன்பு வேறெங்கோ இழுத்தது. தமிழ் மொழியிலும் தமிழ்ப் பண்பாட்டிலும் அவர் தமது கருத்தைச் செலுத்தினார். சிலப்பதிகாரத்திலேயுள்ள அரங்கேற்றுகாதையை ஆராய்ந்தார். அதற்குள்ள அரும்பத உரையையும், அடியார்க்கு நல்லார் உரையையும் கற்றார். பண்டைத்தமிழர் மீட்டிய யாழிலே அவர் மனஞ் சென்றது. மாதவியும் கோவலனும் கடற்கரைக் காவிலிருந்து மாறி மாறி மீட்டிய யாழிசை அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. திரும்பவும் அவ்வின்னிசையைத் தம் காதாற் பருக ஆசை கொண்டார். இவ்வாசை பல ஆண்டுகளாக அவரை உறுத்தியது. முற்றத்துறந்த துறவியொன்றாலும் தமிழ் மேல் வைத்த ஆசை அவரை விரட்டியது.

அவர் தமக்கிருந்த பூத நூலறிவையும் கணித நூலறிவையும் பயன்படுத்திப் பண்டை யாழைத் திரும்பவும் அமைத்தார். இவ்வியாழ் தமிழ்நாட்டிலே தோன்றி வளர்ந்த வரலாற்றை அவர் தமது யாழ்நூலில் மேல்வருமாறு எழுதியிருக்கின்றார்,

''சரித்திரகால எல்லைக்கெட்டாத காலத்திலே வில்லியாழ் எனப் பெயரிய குழவியாயுதித்து, மழலைச் சொற்பேசி, இடையர் இடைச்சியரை மகிழ்வித்துச் சீறியாழ் என்னும் பேதைப் பருவச் சிறுமியாகி, பாணனொடும் பாடினியொடும் நாடெங்குந் திரிந்து ஏழைகளும் இதயம் களிப்பெய்த இன்சொற்கூறிப் பின்பு பேரியாழ் என்னும் பெயரொடு பெதும்பைப் பருவமெய்திப் பெரும்பாணரொடு சென்று குறுநில மன்னரும் முடிமன்னரும் தமிழ்ப் புலவரும் கொடை வள்ளல்களும் கேட்டு வியப்பெய்தும் வண்ணம் நயம்பட உரை

www.padippakam.com



பகர்ந்து அவன்பின், மங்கைப்பருவ மெய்தி, அப்பருவத்திற் கேற்ப புதிய ஆடையும் அணிகலமும் பூண்டு நாடக அரங் கத்திலே திறமைகாட்டி, மடந்தைப்பருவம் வந்து எய்துத லும், திருநீலகண்டப் பெரும்பாணரோடும் மதங்கசூளா மணியாரோடும் அம்மையப்பர் உறைகின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம் வந்து, தெய்வ இசையினாலே அன்பருள் ளத்தினை உருக முத்தமிழ் விரகராற் பாராட்டப்பட்டு, அரிவைப் பருவம் வந்து எய்துதலும், அரசிளங் குமரிகளுக்கு இன்னுயிர்ப் பாங்கியாகி, அவர்க்கேற்ற தலைவரை அவர் பாற் சேர்த்துச் சீருஞ் சிறப்புமெய்தி நின்ற யாழ் என்னும் மென்மொழி நங்கை இருந்தவிடந் தெரியாமல் மறைந்து போயினாள்.''

மறைந்துபோன இந்த யாழும் அடிகளாரின் தன்முயற்சி யினால் உயிர்பெற்றுப் பொலிவுடன் திகழ்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்துத் தமிழர் கிராமியத் தெய்வ வழிபாடு

இலங்கைத் தமிழ் மக்களுள் பண்டைக்காலந்தொட்டு இருவகையான தெய்வ வழிபாட்டு முறைகள் இருந்து வருகின்றன. முதலாவது ஆகம வழிபாட்டு முறை, இரண்டாவது கிராமிய வழிபாட்டு முறை.

ஆகம வழிபாட்டு முறை திராவிட மக்களுக்குள் பண்டைக் காலந்தொட்டு ஆகம முறைப்படி கடவுளர்களை ஏத்தி வழிபடும் முறையாம். ஆரியருக்கு அவர் சமய வழிபாட்டிற்கு வேதங்கள் அடிப்படையாக இருப்பது போலவே, திராவிடருக்கும் ஆகமங்கள் அடிப்படையாக இருக்கின்றன. வேதங்கள் யாகங்களைச் செய்தலே சிறந்த வழிபாட்டு முறையெனக் கொள்கின்றன. ஆனால், ஆகமங்கள் சிவன் திருமால் முதலிய கடவுளர்களைப்பற்றிக் கூறி, அவர்களை வழிபடும் முறைகளைக் கூறுவதோடு மட்டுமன்றி அவ்வழிபாடுகளால் மக்கள் அடையும் பயன் முதலியவற்றையும் அவற்றின் காரண காரியங்களையும் எடுத்துச் சொல்வதாக அமைந்திருக்கின்றன. இம்முறையைப் பின்பற்றியே திராவிட மக்களுள் உயர்ந்த படியினுள்ளோர் கடவுளரை வணங்கி வருவர். இவ்வாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களை எடுத்துக் கூறும். சரியை கிரியை ஆகிய இரண்டு படிகளிலும் வழிபடுவர். யோகநிலையிலுள்ளோர்

படிப்பகம்

www.padippakam.com



உடலை வருத்திச் சாதனை செய்தும் அதன் மூலமாக உள்ளத்தை ஒருநிலைப்படுத்தியும் கடவுளோடு ஒற்றுமைப்படும் வழியில் நிற்பர். ஞான நிலையில் உள்ளோர் இறைவனோடு இரண்டறக் கலக்கும் பக்குவத்தினை எய்துவர். எனவே, இவ்வழிபாடுகள் யாவும் சரியை, கிரியை ஆகிய இருபடியிலும் உள்ளார்க்கே யாம்.

ஒவ்வொரு நாட்டிலும் பண்டைக்காலந்தொட்டு மக்கள் தங்கள் சூழ்நிலைக்கேற்ப வழிபாட்டு முறைகளை ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வழிபாட்டு முறைகள் குறித்த சமூகங்களின் வழக்கங்களுடன் ஒன்றுபட்டு மிளிர்ந்தன. பண்டைக் காலத்தில் தாயை வழிபடும் முறையே எங்கும் பெருவழக்காய் இருந்து வந்தது. அக்காலத்திலே தோன்றியது அம்மன் வழிபாடு. இவ்வழிபாட்டு முறை இந்தியா எங்கணும் நிலவி வந்தது. வங்கநாட்டில் இன்று பெருவழக்கிலுள்ளது. திராவிட நாட்டிலும் இவ்வணக்கமுறை உண்டு. சிறப்பாகப் பொது மக்களுக்குள் இவ்வழிபாடு பெரிதும் நிலவுகின்றது. காளி, பேச்சியம்மன் முதலிய பெண் தெய்வ வழிபாடுகள் இம்முறைக்குள் அடங்கும்.

சங்க காலந்தொட்டுத் தமிழ் மக்களுக்குள் வீரவழிபாடு இருந்து வந்தது. சங்க நூல்களிற் காணப்படும் நடுகல் வணக்கம் இங்கு குறிப்பிடத்தக்கது. பிற்காலத்து எழுந்த அண்ணமார், நாச்சிமார், மதுரை வீரன், கண்ணகை முதலிய தெய்வ வழிபாடுகள் வீரவழிபாட்டின்கீழ் அடங்கும்.

இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் நாட்டு வழிபாடுகள் தடைப்படுத்தப்பட்டுக் கிறித்தவ வணக்கம் ஆட்சியாளரால் நிறுவப்பட்டது. அதனால், நாட்டிலே நிலவிய தெய்வ வணக்கங்கள் மறைவிலேயே செய்யப்பட்டு வந்தன. இதனால் வெளிப்பார்வைக்குக் கிறித்தவ பத்திமான்களாகத் திகழ்ந்த எம் மூதாதையர் வீட்டிற்குள் மிகுந்த பயபக்தியுள்ள சைவசமயிகளாக இருந்

www.padippakam.com



தனர். அதனால், அதுகாறும் வெளியாகச் செய்யப்பட்ட வழிபாடுகள் யாவும் வீட்டிற்குள்ளேயே, அதுவும் மறைவிலே செய்யப்பட்டு வந்தன. இக்காலத்திற்றான் அடுப்புநாச்சியார் என்னுந் தெய்வத்தை வழிபடும் வழக்கம் எழுந்தது. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் தங்கள் ஆட்சிக் காலத்து மக்களை மதமாற்றஞ் செய்து ஆங்காங்கு கிறித்தவ ஆலயங்கள் கட்டினர். அவற்றிலொன்று மாதா கோயில். அவர்கள் ஆட்சியொழிந்து மக்கள் தம் பண்டைய வழிபாடுகளைப் பயமின்றித் திரும்பவும் செய்துவந்த காலத்தும் இம்மாதா கோயில் வழிபாடு ஓரளவு இருந்து வந்தது. அதனைக் கிறித்தவ வழிபாடெனை அறியாது, சிறுசிறு கொட்டில்களில் நடத்தி வந்தனர். வழிபாடு சைவ முறையில் நடந்துவந்தது. இடையிடையே மக்கள் அங்குபோய்த் தாமாகவே விளக்கு வைத்துக் கர்ப்பூரங் கொளுத்தி வழிபாடாற்றினர். இப்பொழுது இவ்வணக்கம் அருகிவிட்டது. எனினும், ஆங்காங்கு மாதா கோயில்கள் எனப்படும் சிறு கொட்டில்களை நாம் இன்றுங் காணலாம்.

அடுத்துக் கிராமியத் தெய்வ வழிபாட்டு முறைகளை எடுத்துக்கொள்வோம். மாரியம்மன் கோயில்கள் அல்வாய், தெல்லிப்பழை, அனலைதீவு, வன்னிவிளாங்குளம் முதலிய பல விடங்களில் உண்டு. சங்க நூல்களில் பாலை நிலத் தெய்வமாகக் கொள்ளப்பட்ட கொற்றவையின் மரபைச் சார்ந்த தெய்வம் இது. இப்பொழுது அம்மை, பொக்குளிப்பான், சின்னமுத்து முதலிய நோய்களைக் கொடுத்தற்கேதுவாயும், தீர்த்தற்கேதுவாயும் உள்ள தேவதையெனக் கணிக்கப்பட்டு வருகின்றது. அதனால், அதை மிகுந்த பய பக்தியோடு மக்கள் வணங்கி வருவர். இவ்வகைப்பட்ட நோய்கள் வருங்காலத்து குளிர்த்தி முதலியன போட்டு வணங்குவர். இடர்கள் வருங்காலத்தில் கூத்தாடுவிப் போமென நேர்த்திக்கடன் செய்வர். அன்றியும், ஆண்டு தோறும் பொங்கல் போட்டு வேள்வி நடாத்துவர். வேள்விக் காலங்களில் ஆடு, கோழி முதலியவற்றைப் பலி கொடுத்த

www.padippakam.com



னும் ஆங்காங்கு உண்டு. இக்கோயில்களில் வைரவர், காத்தவராயர், கழுவேறி முதலிய தெய்வங்களும் வைத்து வணங்கப்படுகின்றன. வேள்விக் காலத்தில் பொங்கல் பொங்கி அம்மனுக்கு முன்னே படைப்பர். பழவகைகள் வெற்றிலை பாக்கு முதலியவை வைத்து மடைபரப்புவர். வைரவருக்கும், காத்தவராயருக்கும், கழுவேறிக்கும் அவ்வாறே மடை போடுவர். ஆனால், காத்தவராயர், கழுவேறி ஆகிய தெய்வங்களுக்குப் போடும் மடையில் கள், சாராயம், இறைச்சி, முட்டை, மீன் ஆகியவற்றோடு பிட்டு வகைகளும் குரக்கன் பிட்டு, சாமிப்பிட்டு, தினைப்பிட்டு, ஒடியற்பிட்டு, மரவள்ளிப்பிட்டு, அரிசிப்பிட்டு, தவிட்டுப் பிட்டு அவித்துவைப்பர். கருவாடும் சுட்டுப் படைப்பர். இக்கோயில்களில் வேள்விக்குப் பண்டைய முறைப்படி பறை மேளம் அடிப்பர். வேள்விப் பூசை அதிகாலையில் நடக்கும். அதற்குமுன் ஒவ்வொரு குடும்பத்தாரும் புதுச்சட்டி பானை அரிசி முதலியவை கொண்டுவந்து பொங்கல் பொங்குவர்.

அன்றியும் இரவுதோறும் அன்பர் நேர்த்திக் கடனுக்காகக் காவடிகள் எடுத்து வருவர். ஆனால், மாரியம்மன் கோயிலுக்கு முக்கியமாய் எடுத்து வரப்படுவது கரகம். பிறிதொரு கோயிலிலே கரகங்கட்டி வேப்பிலை, பூ முதலியவற்றால் அதனை அலங்கரித்து மந்திர உச்சாடனத்தோடு ஆசானொருவன் நேர்த்திக் கடன்காரன் தலையில் அதனை ஏற்றி வைக்க உடுக்கடித்துப் பாடவல்லுநர் மாரியம்மன் விருத்தம், மாரியம்மன் தாலாட்டு முதலியவற்றை உடுக்கடித்துப் பாடுவர். மேலும், மேலும் ஆசான் கரகமெடுப்பவன் காதிலே மந்திரங்களை உச்சாடனம் பண்ணியபடியே இருப்பான் அப்பொழுது தேவி கரகமெடுப்போனில் உருக்கொள்வாள். அதனால், அவன் உடுக்கின் தாளத்துக்கேற்பக் கால் பெயர்த்து ஆடி வருவான். கரகத்தின் முன்னிலையில் வைரவர் உருப்பத்திக் கையில் ஓர் எலுமிச்சம் பழத்தைப் பொத்தியவண்ணம் வைத்துக்கொண்டு நின்றாடும். அச்சன்னதத்திற்குச் சாம்பிராணித் தூபம் ஒருவன் பிடிக்கப்

படிப்பகம்

www.padippakam.com



பிறிதோராசான் அவன் காதில் மந்திரம் ஓதிக்கொண்டு நிற்பான். வைரவர் உருக்கொண்டோன் கூவிட்டுக் கொண்டு அங்கு ஒரு புறத்து அடிக்கப்படும் பறையோசையின் தாளத்திற்கேற்பக் கால் பெயர்த்து ஆடுவான். சன்னதத்தின் பொய்மெய்யை அறிவதற்காகப் பலசாலிகள் இருவர் சன்னதகாரன் நீட்டி நிற்கும் இருகைகளிலும், கைக்கொருவராக நின்று தம் வலியெலாங் கூட்டிச் சாட்டை கொண்டடிப்பர். அச்சோதனை முடிந்த பின்னர் சன்னதகாரன்மீது குடங்குடமாகத் தண்ணீர் ஊற்றுவர். இவ்வாறுகுக்கொண்ட வைரவர் வழியிலே கரகத்திற்கு இடரொன்றும் வராது காப்பாற்றிவரும்: இப்படிவரும் வேளையில் ஆசான் மீது அழுக்காறு கொண்ட வேறொரு மந்திரவாதி ஒருவருமறியாத முறையில் வைரவ சன்னதத்தை அணுகிக் காதுக்குள் மந்திரமோதிக் கரகத்தை நிலத்தில் விழுத்தலும் உண்டு. அவ்வாறு நிகழ்ந்தால் கரகத்தினாசான் தன் மந்திர சக்தியினால் திரும்பவும் அதனைக் கரகமெடுத்தான் தலையிலேற்றி, முன்னரிலும் சிறப்பாக உருப்போட்டுக் கரகத்தை யாதொரு இடையூறுமின்றி நடத்திச்சென்று, மாரியம்மன் கோயிற் சந்நிதியில் இறக்குவிப்பான்.

வேள்வி நடக்கும் மாரியம்மன் கோயில்களில் அவ்வூரவர்களில் ஒருவரே அப்பூசைகளை நடத்தி வருவர். அவரை மக்கள் பூசாரியார் என்றழைப்பர். அவர் பூசை பண்ணும்போது யாதொரு மந்திரமுஞ் சொல்வதில்லை. பூசை முடியும் வேளை தேவாரப் பாடல்களே அங்கு ஓதப்படும்.

வேள்விப் பூசை விடியற்காலையிலே தொடங்கும். கோயில் சந்நிதிக்கு நேரே வெளிப்புறத்தில் பறைமேளம் அடிக்கப்படும். அம்மனுக்குப் பூசை நடக்கும்பொழுது கடவுட்பற்றை எழுப்பும் வகையாகப் பறை இயம்பும். வைரவர் முதலிய தெய்வங்கட்குப் பூசை நடக்கும்பொழுது பறையை உயர்த்தி அடிப்பர். அப்பொழுது வைரவர் முதலிய தெய்வங்கள் ஒவ்வொருவர்மீது சன்னதமாய் வெளிப்பட்டு ஆடிக்கொண்டு,

www.padippakam.com



துரிதமாகப் பறையொலிக்கும் இடத்தருகே ஓடி, அப்பறையின் தாளத்துக்கிசைய நின்று ஆடும். அப்பறையினோசை அங்கு நிற்கும் ஒவ்வொருவரின் உள்ளத்தையும் ஊடுருவி நின்று ஒலிக்கும். ஆடாதாரையும் ஆட்டிவைக்க வல்லது அது. பண்டைத் தமிழனைப் போர்க்களத்துப் பறை ஆவேசமூட்டியது அல்லவா?

உயிர்ப்பலி கொடுக்கும் கோயில்களில் இப்பாறையின் ஒலி ஒலிக்க, தெய்வமேறினான் உரு ஆடக் கோழிகளை வெட்டி வீசுவர். அவற்றின் இரத்தம் ஆறாய்ப் பாய அவ்விடம் பண்டைப் போர்க்களத்தை நினைவுறுத்தும்.

இவை முடிந்தபின் முன்னே பறையறைந்து செல்ல, வெறியாட்டயர்வோர் பூசாரி முதலாக யாவரும் தண்ணீர்ச் செம்பு, கோயிற் பிரம்பு முதலியவற்றுடன் ஒரு நாற்சந்தியை அடைவர். அங்கு பூசை பண்ணி, இளநீர் வெட்டிக் கிழக்குத் திசையை நோக்கி எலுமிச்சங்காய் எறிவர். பலி வெட்டும் கோயிலானால் அங்குச் சில ஆடு கோழிகளை வெட்டுவர். இதனையே வழிவெட்டிவிடுதலென்பர். அப்பொழுது சன்னதமாடுதோர் தம்மேலுருக் கொண்டாடிய தெய்வம் அகலத் 'தொம்'மென்று நிலத்தில் விழுந்துவிடுவர். பின் அவரைத் தூக்கிக்கொண்டு கோயில் வந்து சேர்வர். அங்கு திருநீறு, சந்தனம், தீர்த்தம், வில்வம் முதலியவை மக்களுக்கு வழங்கப்படும்.

காளி கோயில், வைரவர் கோயில், ஐயனார் கோயில் ஆகிய கோயில்களிலும் இவ்வகையான வழிபாடே நடைபெறும். ஐயனார் கோயில்களிலே சில இடங்களில் அண்ணமார் என்ற தெய்வங்களும் உள்ளன. ஐயனார் கோயிலுக்குச் சிறிது தூரத்திலே நிற்கும் மரத்தடியிலே இவற்றை வழிபடுவர். இம்மரத்தடியில் பொல்லுகள் வெட்டி வைப்பர். நேர்த்திக்கடன்காரரும் பொல்லுகள் கொண்டு வந்து அங்கு வைத்து வழிபடுவர்.

கண்ணகையம்மன் கோயில் வழிபாடு, மேற்கூறிய வழிபாட்டிலிருந்து வேறுபட்டது. பெரும்பாலும் கண்ணகை

www.padippakam.com



யம்மன் பொங்கல் வைகாசி மாதத்திலேயே நடக்கும். பொங்கலுக்குச் சில நாட்களுக்கு முன் கோயில் திறந்து' கண்ணகையம்மன் கதை படிப்பர். கடைசித் தினத்தன்று அதனை இரவிரவாகப் படிப்பார். அன்றே மக்கள் தங்கள் குடும்பங்களோடு கோயிலுக்கு வந்து புதுச் சட்டிப்பானை யிலே பொங்கல் பொங்குவார். காவடிகளும் பாற்செம்பு களும் தொகை தொகையாகக் கோயிலுக்கு வந்து சேரும். பின்னர் பூசை நடக்கும், கண்ணோ யுற்றார் அது மாறுவதற்காக நேர்த்திக்கடன் பண்ணி வெள்ளியால் கண்மலர் செய்து கொடுப்பர். இக்கோயில் களிலும் பறை மேளம் அடிக்கப்படும், மட்டக்களப்புப் பகுதி யில் கண்ணகை கோயிற் பூசை மிகச் சிறப்பாக நடக்கும். அங்கு பூசை நாட்களிற் கடலோட்டுகாதை படித்து, பொங்கிப் பின் குளிர்த்தியும் போடுவர், ஆண்டுக்கொரு முறையே கண்ணகை கோயில்கள் இப்பகுதியில் திறக்கப் படும்.

யாழ்ப்பாணத்திலும் வன்னிப்பகுதியிலும் நாச்சிமார் கோயில்கள் ஆங்காங்கு உள்ளன. வன்னிநாட்டைஅரசாண்ட வன்னித் தலைவியர் எழுவர், அக்காலத்து ஒல்லாந்தரோடு பெரும்போர் நிகழ்த்தித் தோல்வியுற்றனர். அதனால் தாம் மாற்றார் கைப்படலாகாது என்னும் எண்ணத்துடன் நஞ்சுண் டிறந்தனர். எனவே, தமிழ் மக்கள், அவரை வீரத் தெய்வங் களாக்கி இன்றும் வணங்குகின்றனர். நாச்சிமார் வழிபாடு தோன்றிய வரலாறு இதுவே. இச்கோயில்களிலே வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் விளக்கேற்றுவர். பறையும் முழக் குவர். ஒவ்வொரு முழக்கமும் ஒவ்வொரு நாச்சியின் பெய ருக்காம். தைப்பொங்கல், ஆண்டுப் பிறப்பு முதலிய நன் னாட்களில் கோயிலின் சுற்றாடலிலுள்ள குடும்பத்தினர் வந்து பொங்கல் பொங்குவர். அன்றியும் இடர் நேர்ந்த காலத்து, நேர்த்திக் கடன் செய்து அதற்காகவும் பொங்கல் நடத்துவதுமுண்டு. பெரும்பாலும் இக்கோயில் மரத்தடியிலி ருக்கும், ஒவ்வொரு நாச்சிக்கும் ஒவ்வொரு மரம், இச்

படிப்பகம்

www.padippakam.com



கோயிலில் இறைச்சி, மீன் முதலிய பண்டங்களைப் படைக்கும் வழக்கமில்லை.

சத்த கன்னியர் கோயில்களும் இடத்துக்கிடம் உள்ளன. இங்கு திங்கள், வெள்ளிக்கிழமைகள் தோறும் விளக்கு வைக்கப்படும். ஆண்டுக்கொருமுறை ஊரரெல்லாருங்கூடி ஒரு குறித்த நன்னாளில் பொங்கல் பொங்கி வழிபடுவர். இடையிடையே நேர்த்திக் கடனுக்காகவும் பொங்குவதுண்டு. முல்லைத்தீவு வட்டுவாகல்லிலுள்ள சத்தகன்னியர் கோயிலி லிருந்தே வற்றாப்பழைக் கண்ணகை அம்மன் கோயிலில் வைகாசி மாதத்தில் நடக்கும் பொங்கல் விழாத் தொடங்குவ த்ற்கு நீர் எடுத்து செல்வர். இவ்வாறு ஊற்றி விழாவுக்குத் தீபமேற்றுவதாகப் பேசப்படுகின்றது. அன்றியும் சத்த கன்னியர் கோயிலுக்கும் அக்காலத்தில் விளக்கேற்றியது, அக்கோயிலுக்கு முன்னிருக்கும் ஆற்றிலிருந்து எடுக்கும் தண்ணீரிலேயே என்பர். வட்டுவாகல்லிலுள்ளவர்கள் தங்கள் தங்கள் பிழைப்புகட்கு ஏகும்போது, பிழைப்புச் சித்திக்காகச் சத்தகன்னியரை நேர்ந்து செல்வர். எவரும் அக்கோயிலுக் கருகே அச்சத்தோடேயே ஊடாடுவர், சிறுபிள்ளைகள்கூட கோயிலடியிற் சென்றால் மிகுந்த பயபக்தியோடு ஒழுக வேண்டுமென்பது அவ்வூரிலுள்ள பெற்றோர் கட்டளை. யாழ்ப்பானத்துப் புத்தூரிலும் சத்தகன்னியர் கோயில் ஒன்று இருக்கின்றது.

திரௌபதை அம்மன் வணக்கம் திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உண்டு. அங்கு விழாக் கடைசி நாளன்று பஞ்ச பாண்டவர் வேடமிட்ட ஐவர் திரௌ பதை வேடமிட்டவரோடு கோயில் முன்றிலுள்ள தீப்பள்ளத் தில் நடந்து செல்வர். தீமிதி முடிந்த பின்னர் கடலில் சென்று மூழ்கிக் கோயில் வந்து சேர்வர். பின் அவ்வேடமிட் டவர்களிடம் நோயுற்றோர், பேய்பிசாசு ஏணாட்ட முள்ளோர் திருநீறு போடுவிப்பர். சிறப்பாகத் திரௌபதை யம்மன் வேடமிட்டவரிடம் சிறு குழந்தைகளும் பெண்களும் சென்று திருநீறு போடுவிப்பர்.

www.padippakam.com



தீக்குளித்தலைப்பற்றி பேசுமிடத்துக் கதிர்காமத்தையும் குறிப்பிடுதல் வேண்டும். அங்கும் திருவிழா முடிவு நாட்களில் பெரிய தீப்பள்ளம் வளர்த்துத் தீ மிதிப்பர். இத்தீமிதி மட்டக் களப்பு, திருக்கோணமலையிலுள்ள வேறுபல கோயில்களிலும் மிகவும் சிறப்பாக நடைபெறும். யாழ்ப்பாணத்திலும் சில காலங்களில் சில கோயில்களில் தீ மிதிப்பர்.

முதலிகள் கோயில்களும் பல இடங்களில் உள்ளன, முதலிகள் வணக்கம் வீர வணக்கத்தைச் சேர்ந்ததாக இருத்தல் வேண்டும். ஏழு பூவரச மரங்களுக்கடியில் இவ் வணக்கம் நடக்கும். கல்லுகளொழிய இம்மரங்களுக்கடியில் உருவம் முதலியவை ஒன்றுமில்லை. அக்கல்லுகளிலேயே தண்ணீருற்றிப் பூ, வில்வம் சாத்தி வணங்குவர். வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் விளக்கேற்றுவர் ஆண்டுக்கொரு முறை சிறப்பான பொங்கல் நடைபெறும். யாழ்ப்பாணத்துக் கரவெட்டி முதலிய இடங்களில் இவ்வழிபாடு இன்றும் நடை பெறுகிறது.

இடத்துக்கிடம் பூதராயர் கோயில்களும் உள்ளன. வீர பத்திரரின் மூர்த்தங்களில் இதுவும் ஒன்றெனபர். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் விளக்கேற்றுவர். பொங்கல்களும் இடையிடையே நடைபெறும். ஆண்டுக்கொருமுறை சிறப் பான பொங்கலும் நடக்கும். மக்களுக்கு நன்மை செய்யும் மூர்த்தங்களுள் ஒன்றெனக் கருதுவர். இவ்வழிபாடு வீர வணக்க அடிப்படையில் எழுந்திருக்கலாம். துன்னாலை, பருத்தித் துறை ஆகிய இடங்களில் இக்கோயில்கள் இருக் கின்றன.

முனியப்பர் வழிபாடு யாழ்ப்பாணத்தில் இடத்துக்கிடம் உண்டு. யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள கோட்டைக்கருகில் முனியப்பர் கோயிலொன்று இருக்கின்றது. இங்கு வெள்ளிக் கிழமைதோறும் மக்கள் கூட்டங் கூட்டமாக வந்து முனி யப்பரை வழிபட்டுச் செல்வர். கோயிலுக்கு எதிரேயே யாழ்ப் பாணத்து நீதிமன்றங்கள் உள்ளன. அம்முறை மன்றங்களில் வழக்குத் தொடருவோர் வழக்கில் வெற்றி பெறுவதற்காக

www.padippakam.com



முனியப்பருக்கு நேர்த்திக் கடன்கள் செய்வர். ஆடு கோழி களும் இங்கு வெட்டப்பட்டு வந்தன. பருத்தித்துறையி லிருந்து யாழ்ப்பாணஞ் செல்லும் வசுவண்டிகள் பெரும் பாலும் வல்லையிலுள்ள மருதமரத்திற்கடியில் நிறுத் தப்பட்டு, அவ்வசுவிலுள்ளார் அங்கு உறையும் வல்லை முனிக்குக்கர்ப்பூரங் கொளுத்துவர். இம்முனி புறாப்பொறுக்கி யென்னுங் கிராமத்திலுள்ள பேராலமரத்தை உறைவிடமாகக் கொண்டது. அவ்வாலமரம் தறிபட்டபடியால் இப்பொழுது இம்மருத மரத்தில் உறைகின்றதென்று ஊரார் நம்புவர். இப்பகுதியில் இன்னும் பல முனிகள் வதிகின்றன, என மக்கள் எண்ணுவர். அவை உயிலங்கன்றடி முனி, திக்கத்து முனி, சக்கோட்டை முனி, தாமரைக் குளத்து முனி, பருத் தித்துறைச் சந்தைப்புளியடி முனி என்பனவாகும் இம்முனி களுக்கெல்லாம் தலையாயது சந்தைப் புளியடி முனி என்பர், இப்பகுதியிலுள்ளார் இம்முனிகள் யாவும் திங்களுக்கொரு முறை ஒருங்குகூடும். அந்நாளன்று உயிலங்கன்றடிமுனி புறாப்பொறுக்கி ஆலடிமுனியைச் சந்தித்து அதனை அழைத் துக்கொண்டு திக்கத்து முனியிடம் வரும். இம் மூன்றும் அங்கிருந்து சக்கோட்டையிலிருக்கும் முனியிடம் வரும். அதன்பின் யாவையும் பருத்தித்துறைத் தாமரைக் குளத்தடி மருதிலுறையும் முனியையும் அழைத்துக்கொண்டு சந்தைப் புளியடி முனியிடம் வந்தடையும். இவை யாவும் வரும் பொழுது தத்தம் பரிகலங்களுடனே வரும். அப்படி வரும் பொழுது சங்கொலி, சேமக்கல ஒலி முதலியன கேட்கும் என்பர். சங்கு எக்காளம் சீழ்க்கை ஆகியவற்றினொலி இன்றும் அந்நேரங்களிற் கேட்கும் என்பர். இம்முனிகள் வரும்வழியில் எக்கச்சக்கமாக, மக்கள் எதிர்ப்பட்டால், கூடி வரும் பரிகலங்கள் அவரை அடித்துத் துன்பஞ் செய்தலும் உண்டென்பர். இத்துன்பங்களினின்றும் நீங்குவதற்காக மக்கள் முனியப்பருக்கு நேர்த்தி செய்து அவ்விடையூறுகளி னின்றும் நீங்குவதுண்டு.

படிப்பகம்

www.padippakam.com



பெரியதம்பிரான் வணக்கமும் பல இடங்களிலுண்டு. பெரிய தம்பிரான் கோயில்களில் சூலம் வைத்து வணங்குவர். ஆண்டுக்கொருமுறை மடைபோடுவர். கரவெட்டிச் சண்டிற் குளத்தடிக்கருகில் பெரிய தம்பிரான் கோயிலொன்றுண்டு. இங்கு நடக்கும் மடையின் பொழுது தாழங்காயினையும் வைப்பர். மடை குழப்பின பின்னரும் இக்காய்கள் அழுகிப் போகும்வரைக்கும் அங்கு விடப்படும்.

கிங்கிலியர் என்னும் தெய்வத்திற்கும் வழிபாடு நடை பெறுவதுண்டு. இத்தெய்வத்திற்குப் பொங்கல் பொங்குவர். சிலர் மந்திர சித்திக்காகவும், காரிய சித்திக்காகவும் தகட் டிலே அட்சரம் போட்டுக் கிங்கிலியரை அதிலே ஆவாகனம் பண்ணி அத்தகட்டை வெற்றிலையில் வைத்து இருகையிலு மேந்திச் சுடலையில் நின்றுங்கூட உருச்செபிப்பர். இத் தெய்வம் மனிதரை இடரினின்று காக்கும். இதற்குக் கோயில்களுள்ளன. இருபாலையைச் சார்ந்த முனிவாய்க் கால் என்னுமிடத்தில் கிங்கிலியசுவாமி கோயிலொன்று உண்டு.

நாகதம்பிரான் வணக்கம் திராவிட மக்களின் பண்டைய வணக்கங்களிலொன்று, இவ்வண்ணம் பரத கண்டத்திலுங் காணப்படுகின்றது. மலையாளத்து நம்பூதிரிப் பிராமண இல்லங்களில் நாகம் வீட்டுத் தெய்வமாக வணங்கப்படுவதை இன்றுங் காணலாம். இலங்கையில் புதூர், நாகர்கோயில், பொன்னாலை, செம்பியன்பற்று, மருதடிச் சேனையூர், கோட்டைக்கல்லாறு முதலிப இடங்களிலும் பிற இடங்களி லும் நாகதம்பிரான் கோயில்களை நாம் காணலாம். இக் கோயில்களில் ஆண்டுக்கொருமுறை பொங்கல் மிகச் சிறப்பாக நடக்கும். புதூர் நாகதம்பிரான் கோயிற் பொங்கலின் பொழுது நாகமிருக்குமிடத்தைச் சுற்றி வெள்ளை கட்டப்பட் டிருக்கும். அங்கு மிகுந்த பயபக்தியுடன் பூசாரியார் பால் பழமேந்திச் சென்று நாகத்திற்கு வைப்பர். அங்குள்ள பாம்பு கள் அப்பால் பழத்தை அருந்திச் செல்லும். நாகர்கோயில் நாகதம்பிரான் கோயிலிலும் பாம்புகள் அடிக்கடி அக்கோயி லுக்கு வந்து நடமாடும்.

படிப்பகம்

www.padippakam.com



ஆகம முறைப்படி பூசை செய்யப்படாத பெருங்கோயில் களிலெல்லாம் பூசாரிமாரே பூசை செய்வர். கதிர்காமத்தில் பூசை செய்பவரைக் கற்பகனார் என்றழைப்பர். அங்கு முருகன் ஆகாச சொருபமாகஒரு வடிவுமின்றி இருத்தலினால் பூசை நேரத்தில் கற்பகனார் ஒருவகைக் கிருத்தியமும் செய் யார். ஆனால் கோயிலுக்குள்ளே சென்று, வெளியே வந்து திருநீறு முதலியவற்றை அடியார்களுக்குக் கொடுப்பர். அன்றியும், இவர் வாயிலே சீலைத் துண்டொன்றைக் கட்டிக் கொள்வர். மந்திரமில்லாத பூசை என்பதை இது காட்டு கின்றதுபோலும். தொண்டைமானாற்றுச் செல்வச் சந்நிதி கோயிலும் பூசை செய்பவர் பார்ப்பனரன்று. இங்கு பூசை ஆகம முறைப்படி நடப்பதில்லை கதிர்காமத்தில் நடப்பது போன்று வாய்கட்டிப் பூசை செய்பவர். இவ்வழக்கம் மட்டக் களப்பிலுள்ள சில கோயில்களிலும் உண்டு.

கோயில் கட்டி வழிபடுந் தெய்வங்களைவிட வீடுகளில் வைத்து வழிபடும் தெய்வங்களும் பல உள்ளன. கோயில் களில் பூசகர் செய்யும் பூசைக்குப் பரார்த்த பூசையென்றும், மக்கள் தாமாகவே செய்யும் பூசைக்கு ஆன்மார்த்த பூசை என்றும் சித்தாந்த நூல்கள் செப்பும். சித்தாந்திகள் இலிங் கங்களை எழுந்தருளச் செய்து தாமாகவே பூசை செய்வது போலத் தமிழ் நாட்டுப் பாமர மக்களும் தங்கள் வீடுதோறும் தெய்வங்களை வைத்து வழிபடுவர். இத்தெய்வங்கள் வீட்டுத் தெய்வங்கள் அல்லது குலதெய்வங்கள் எனப்படும். ஈழத்தி லுள்ள தமிழ் மக்கள் வீடுதோறும் ஒவ்வொரு தெய்வத்தை வாலாயம் பண்ணி வணங்கி வருவர். இவ்வணக்கம் பெரும் பாலும் பண்டைத் திராவிட வணக்கத்தைச் சார்ந்தது.

பொதுமக்களுக்குள் காளி வழிபாடு பெரு வழக்காக உள்ளது. வீடுதோறும் வீட்டின் ஒரு மூலையிலுள்ள ஒரு மரத்தின் கீழ் செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் விளக்கு வைத்து பழம் பாக்கு வெற்றிலை படைத்துக் கர்ப்பூரங் கொளுத்திப் பூசை செய்து வழிபடுவர். இதற்கு அவ்வீட்டு மூதாட்டியே பெரும்பாலும் விளக்கு வைப்பர். குடும்பத்

www.padippakam.com



தினரெல்லோரும் அங்கு சென்று வணங்குவர். ஆண்டுக்கொரு முறை பொங்கல் பொங்கிப் பெரிதாகப் பூசை நடத்துவர். வீட்டிலுள்ளோர்க்கு நோய் நொடிவந்த காலத்து நேர்த்திக் கடன் செய்வர். வருத்தம் மாறிய பின்னர் பொங்கிப் படைப்பர். வீட்டில் நடக்கும் எந்த நல்ல காரியங்களையும் காளியை வழிபட்டே தொடங்குவர். இத்தெய்வம் குடும்பத்தினரை எல்லா இடரினின்றும் காக்கும். அவ்வீட்டுச் சிறு குழந்தைகள் வெளியே சென்றவிடத்து எச்சிப்பேய் முதலியன தொடர்ந்து அவரை உறுத்தினால் இத்தெய்வம் உருவேறி வெளிப்பட்டோ அன்றிக் கனாவிலே தோன்றியோ அவ்வீட்டாருக்கு நடந்ததைச் சொல்லி அதற்குச் சாந்திகளும் சொல்லும். பில்லி, செய்வினை, சூனியம், பிரிவு முதலியனவற்றை, அவ்வீட்டிலுள்ளாரின் எதிரிகள் யாராவது செய்து வைத்தால் இத்தெய்வம் வெளிப்பட்டு அதனைச் சொல்லி அவ்வீட்டாரினிடரைக் களைவிக்கும்.

வைரவரையும், காளியை வணங்குவது போன்று ஒரு மரத்தடியில் வைத்து வணங்குவர். அதுவும் வீட்டாரைக் காளிபோன்று காத்து நிற்கும்.

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீட்டிலும் அடுப்புநாச்சி என்னும் தெய்வத்தை வணங்குவர். இவ்வழிபாடு போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்துத் தொடங்கியது. ''நல்ல நாள் பெருநாள்'' வந்தால் வீட்டிலே செய்யும் பலகாரத்தில் முதற் பலகாரமொவ்வொன்றையும் அடுப்பு நாச்சிக்கென நேர்ந்து அடுப்புக்குட் போடுவர். அதன்பின்னரே ஏனைய பலகாரங்களைத் தமது தேவைக்கெடுப்பர். கலியாண வீடு முதலிய கொண்டாட்டங்களுக்கும் பணியாரங்கள் தேடும்பொழுதும் அவ்வாறே செய்வர். வீட்டிலுள்ள சிறுகுழந்தைகளுக்கு வாய விச்சல் போன்ற வருத்தங்கள் வந்தாலும், கஞ்சி வடிக்கும் பொழுது அது உடம்பில் ஊற்றுப்பட்டாலும் அடுப்பு நாச்சிக்கு; சமைக்கும் பொருட்கள் யாவற்றையும் அடுப்பிற்கு முன்னே வெற்றிலை பாக்குடன் வைத்துப்படைப்பர். படை



படிப்பகம்

www.padippakam.com



தமிழ்மொழி தனது பண்டைய நிலையினின்றும் குன்றத் தொடங்கியது.

இவ்விதமாய்த் தமிழ் நாட்டவரும், முக்கியமாய், யாழ்ப் பாணத்தவரும் நிலை தடுமாறி வருகின்ற காலத்து, தமிழ் மொழியின் தவப் பயனால் உயர்திரு. ஆறுமுக நாவலர் அவர்களும் திரு. சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களும், யாழ்ப்பாணத்தில் வந்துதித்தனர். இவ்விரு தமிழ்ப் பெரி யார்கள் செய்த நல் முயற்சியினாலும், ஓயா உழைப்பினா லும் தமிழ்த் தாயும் ஆரியம் போல் உலக வழக்கழிந்தொழிந்து சிதையாத சீரிளமையோடு உலகத்தின் முன்னேற்றமடைந்த மொழிகளுள்ளே திறமை வாய்ந்த ஒரு மொழியாக உலவு கின்றன. இவ்வகைத் திறமை வாய்ந்த, 'தனக்கென வாழாப் பிறர்க்கென வாழ்ந்த இவ்விரு பெரியார்களுள்ளே, இப்பொழுது தாமோதரம் பிள்ளையவர்களுடைய வாழ்க்கை யைப் பற்றியும், அவர் தமிழ்த் தொண்டைப் பற்றியும் சிறிது ஆராய்வாம்.

இவர் கிறித்தவ ஆண்டு 1832-க்குச் சரியான நந்தன வருடம் ஆவணி மாசம் 29-ம் திகதி யாழ்ப்பாணத்தைச் சார்ந்த சிறுப்பிட்டி யென்னும் ஊரிலே பிறந்தார். இவர் தந்தையார் பெயர் குருநாதர் வைரவநாதர். தாயார் ஏழாலையைச் சேர்ந்த மயில்வாகனம் என்பவரின் மகள் பெருந்தேவி என்பரார்.

தாமோதரம்பிள்ளையவர்கள் முதன் முதல் வீட்டிலே தமது தகப்பனாரிடத்தில் கல்வி பயின்றனர் அதன்பின்னர், ''ஞானக்கும்மி'', ''யேசு மத பரிகாரம்'' என்னும் நூல் களைப் பாடியவரும், அக்காலத்துச் சிறந்த தமிழ் வித்துவா னாக விளங்கியவருமாகிய சுன்னாகம் முத்துக் குமாரக் கவிராயர் என்பவரிடம் கல்வி கற்றனர். பிள்ளையவர்கள் அவரிடத்தில் நைடதம், இராமாயணம், பாரதம் முதலிய அரிய இலக்கிய நூல்களைக் கற்றதுமன்றி இலக்கணப் பயிற்சியுஞ் செய்து வந்தனர். இவரிடத்தில் இருந்த தமிழ்க் கல்விப் பற்றையும், தமிழ் நூல்களைக் கற்றலிலும் கேட்டலி

www.padippakam.com



லும் இருந்த ஆர்வத்தையும் கண்டு அப்புலவர் சிகாமணியும் இவருக்கு எவ்வித ஒளிப்பு மறைப்புமின்றிச் செவ்வனே பாடஞ் சொல்லி வந்தனர். அவர்களே, பிள்ளையவர்களின் முதலாசிரியர், பிள்ளையவர்களுக்கும் அவரிலே மிகுந்த அன்பும், மதிப்பும் இருந்ததென்பது இவர் தொல்காப்பியப் பதிப்புரையின்கண் ஆசிரிய வணக்கம் கூறுமிடத்துக் கூறிய,

''கற்றறிவில்லாக் கடையனேன் றனக்கு
நற்றமிழ் கொழுத்திய நாவலன் சுன்னை
முத்துக் குமார வித்தக னடியினை
சித்தத் திருத்தி''

என்னும் அடிகளாலே விளங்கும். இவ்வண்ணம், தமிழ்க் கல்வி கற்று வருநாளில் ஏனையோரைப் போலவே ஆங்கிலக் கல்வியுங் கற்க வேண்டுமென்னும் அவாவினால் உந்தப்பட்டவராய் தெல்லிப்பழையை அடைந்து அங்குள்ள அமெரிக்க மிசன் பாடசாலையில் ஆங்கிலஞ் சிலகாலம் கற்றார். பின்னர் ஆங்கிலத்தில் உயர்தரக் கல்வி கற்கும் நோக்கமாக Batticotta Seminary எனப் பெயருள்ள யாழ்ப்பாணச் சர்வ சரித்திரக் கலாசாலையை அடைந்தனர். இக்கலாசாலை 1822-ம் ஆண்டு அமெரிக்க மிசன் சங்கத்தாரால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட டாக்டர் பூர் (Dr. Poor) என்னும் பண்டிதரால் நிறுவப்பட்டது. அதுவே, அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வி கற்பதற்கு உயர்ந்த இடமாக இருந்தது. இக்கலாசாலையில் தாமோதரம்பிள்ளை அவர்கள் 1844-ம் ஆண்டு ஐப்பசி மாதம் தமது பன்னிரண்டாம் வயதிற் சேர்ந்தனர். அக்காலத்து இக்கலாசாலையில் இவருக்கு ஆசிரியராயிருந்தோர் கனம் சி.பீ. மில்ஸ் ஆசிரியர் நெவின்ஸ், ஆசிரியர் இலைமன், ஆசிரியர் இறய்ஸ், ஆசிரியர் பிறெக்கென்றிக், ஆசிரியர் கறல் விசுவநாத பிள்ளை, வித்துவான் கதிரவேற்பிள்ளை முதலியோரே. இத்தகைப் புலமை வாய்ந்த பேராசிரியரின் கீழ் மிக ஊக்கமாய்க் கல்வியைக் கற்றுத் தமது இருபதாம் ஆண்டில் கலாசாலைக் கல்வியை முடித்து அரங்கேறினர்.

www.padippakam.com



இவருக்கு ஆசிரியராக இருந்த 'நெவின்ஸ்' என்பவர் இவரிடத்திருந்த தமிழ்ப் பாண்டித்தியத்தை அறிந்து 'பண்டிதர்' என்னும் பட்டமுஞ் சூட்டி, இவரினால் தமிழ்க் கல்வி மிகுந்த உயர் நிலையை அடையுமென்றும் கூறி வாழ்த்தினர். கலாசாலையை விட்டகன்ற பின்னர் யாழ்ப்பாணத்துக் கோப்பாயில் அக்காலத்திருந்த போதனா சக்தி வித்தியா சாலையில் ஆசிரியராக நியமனம் பெற்றார்.

அக்காலத்திலே சென்னையில், ''தினவர்த்தமானி'' என்னும் பத்திரிகையை நடாத்தி வந்த பேர்சிவல் துரை அவர்கள் இவருடைய தமிழ் வண்மையைக் கேள்வியுற்று, சென்னைக்கு அழைத்து அப்பத்திரிகைக்கு ஆசிரியராக அமர்த்தினார். பத்திரிகை ஆசிரியராக இருந்து வரும்பொழுது பல ஆங்கிலேயருக்குத் தமிழ் கற்பித்து வந்தனர். இவருக்குத் தமிழில் இருந்த திறமையை யாவரும் நன்கு அறிந்தமை காரணமாக அரசினர் சென்னை இராசதானிக் கல்லூரிக்கு இவரைத் தமிழ்ப் பண்டிதராக நியமித்தனர். அங்குத் தமிழ்ப் புலமை நடாத்தி வருங் காலத்திற்றான் சென்னைப் பல்கலைக் கழகமும் அரசினரால் நிறுவப்பட்டது. அக்கழகத்தாரால் முதன்முதலாக 1857-ம் ஆண்டு நடாத்தப் பட்ட கலைமானி (B.A) தேர்தலில் இவர் முதல் மாணவனாகவும், இவருக்கு யாழ்ப்பாணச் சர்வ சரித்திரக் கலாசாலையில் ஆசிரியராயிருந்த கறல் விசுவநாத பிள்ளை அவர்கள் இரண்டாம் மாணவனாகவும் தேர்ச்சி பெற்றனர். இதன் பின்னர் கள்ளிக்கோட்டையிலுள்ள அரசாங்க வித்தியாசாலையில் ஆசிரியராய்ச் சில காலம் கடமை பார்த்து விட்டுச் சென்னையிலே உள்ள அரசாங்க வரவு செலவுப் பகுதியில் உயர்ந்த உத்தியோகத்தில் அமர்ந்தனர். அங்கிருந்த வண்ணமே சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் நடாத்தப்பட்ட, ''முறைமாணி'' (B. L.)த் தேர்தலில் 1871-ம் ஆண்டு தேர்ச்சி எய்தினர். அரச சேவையில் இருந்து இளைப்பாறிய பின்னர் குடந்தை (கும்பகோணம்) யில் வக்கீலாகச் சில காலம் கடமை பார்த்தனர். இதன்

www.padippakam.com



பின்னர் புதுக்கோட்டையில் நீதிபதியாக நியமிக்கப்பட்டு அங்கு நான்கு ஆண்டுகளாகக்கடமை பார்த்து மிகுந்த புகழோடு இளைப்பாறினர்

பிள்ளை அவர்கள் 1860 -ம் ஆண்டு தெல்லிப்பழையில் பிள்ளையினார் என்பவரின் மகளாகிய நாகமுத்தம்மாவை மணஞ் செய்ததன் பயனாக நான்கு ஆண் குழந்தைகளையும் இரண்டு பெண் குழந்தைகளையும் பெற்றனர் இவர் புத்திரருள் மூத்தவராகிய கனகரத்தினம் பிள்ளை என்பவரும் சோம சுந்தரம் பிள்ளை என்பவரும் சிறு பிராயத்திற்றானே இறந்து விட்டனர். இரண்டாவது புத்திரரான அமிர்த லிங்கம் பிள்ளை யென்பவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று கொண்டிருக்கும்போதே தமது 26-வயதில் நோய்வாய்ப்பட்டிறந்தனர். இவர் ஆங்கிலத்தில் மட்டுமின்றித் தமிழிலும் மிகுந்த பாண்டியத்தியமுடையவராய்த் திகழ்ந்தார். ''சாலை விநாயகர் பிள்ளைத் தமிழ்'' ''தில்லை அந்தாதி'' முதலிய நூல்களைத் தமது சிறுபிராயத்திற்றானே பாடி வெளியிட்டுள்ளார். இவர் ஆசுகவி பாடுவதிலும் மிக வன்மையுடையவர் எனக்கூறுவர். ஒருகால் யாழ்ப்பாணத்தில் நடந்த ''சைவ உதயபானு'' என்னும் பத்திரிகையின் ஆசிரியராகிய ஊரெழு சரவணமுத்து என்பவர், இவர் தம்பியராகிய அழகசுந்தரம் பிள்ளை அவர்கள், விநாயகக் கடவுளில் ஒப்பில்லாத பக்தியுடையவர் எனப் பாடிய பாட்டொன்றுக்கு மறுப்பாகப் பின் வருஞ் செய்யுளைப் பாடியுள்ளர்.

''ஒப்பொருவரில்லை யுலகி லெ்னச் சாற்றிடினுந்
தப்பித மென்றே சாற்றுவேன் — எப்பொழுதும்
நம்பிக்கை யுண்டானால் நாய்க்கும் பயந்தோடி
வெம் பிடுவ தென்னோ விளம்பு.''

சிறு பிள்ளைப் பருவத்தில் அழக சுந்நரம் பிள்ளையவர்கள் தாய்க்குமிகுந்த பயமுள்ளவரென்று தாம் கண்ட உண்மையை அமைத்து இச்செய்யுளைப் பாடினர். ஒருமுறை இவர் சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபோது சிவப்பிரகாச

www.padippakam.com



பண்டிதர் அவர்கள், ''கிறிஸ்து மத கண்டனம்'' என்னும் பொருள்பற்றிச் செய்த சொற்பொழிவொன்றுக்கு குறிப்புரை சொல்லுமாறு இவரைச் சபையிலுள்ளார் வேண்டியபோது பின்வரும் வெண்பாவை ஒரு தடக்குமின்றிப் பாடி முடித்தார் எனச்சொல்வர்.

ஓலமிடும் பாதிரிக ளுள்ளம் புழுங்கியழ
ஞாலமிசை பைபிளிருள் நாசமுற — மேதினியில்
மெய்ச்சைவ மோங்கிடவு மேப்ரசங்களு செய்தான்
இச்சிவப்ர காசமன்னன் இன்று.''

பின்னர் ஒருகால் இவர், ''வடமுல்லை வாயிற் கோவை'' என்னும் நூலைப் பாடிக்கொண்டு, அதை அங்கேற்றுமாறு வடமுல்லை வாயிலை அடைந்து, அங்கு ஒரு சத்திரத்தில் தங்கிய போது தமக்கு சாப்பாடு போட்ட பார்ப்பானைப்பற்றிப் பின்வருமாறு நகைச்சுவையுடைய பாவினைப் பாடினர்.

வாழைக் காயோர் பொரியல் வைத்தான் பருப்புநெய்
கூழைப்போற் சாதமே கொட்டினான் —பேழைவயி
றேற்றது காய்க் குழம்பும் ஈசாபுளித் தயிரும்
போற்று முல்லைப் பார்ப்பனிடம் போய்.''

வேறொருவரகு பிள்ளைத் தாலாட்டுப் பாடிக் கொடுத்த தைக்கண்ட இவர் தங்கையர் தனது பாவைப் பிள்ளையைத் தாலாட்டும் வண்ணம் ஒரு தாலாட்டுப் பாடித் தரும்படி கேட்டபோது

ஒட்டைக் குடியிலே உடைந்த சட்டி பானையே
காட்டுவிறகே களிமண்ணே கண்வளராய்''

என உடனே பாடிக் கொடுத்தார். இவ்வளவு தமிழ்ப் பாண்டித்தியம் வாய்ந்த இவர் இளவயதிலே இறந்தமை தமிழ்மொழி செய்த தவக் குறைவே போலும்.

தாமோதரம் பிள்ளை அவர்களுக்கு மூன்றாவது புத்திர னான சோமசுந்தரப்பிள்ளையும் கல்வி கற்குமாறு யாழ்ப்

www.padippakam.com



பாணம் சென்றிருந்த போது அங்கு பாலிய வயதிலேயே இறந்தனர், இவர் சிறு வயசினராய் இருந்தபோதிலும் மிகுந்த வாக்குச் சாதுரியம் உடையவராய்த் திகழந்ததனால் பிள்ளையவர்களுக்கு இவரின்மேல் மட்டற்ற அன்பு இருந்தது. பிள்ளையவர்களும் மனைவியாரும் சென்னையில் இருந்தமையினால் இறக்கும்பொது இவரோடு இருக்க முடியாது போயிற்று. இவைகளை எல்லாம் நினைத்து புத்திரன் மேலுள்ள சோகத்தினால் பிள்ளையவர்கள் பாடிய பின்வரும் செய்யுள் கல்லையுமுருக்கும்.

**''விந்தை மிகுந்த வியன்சோம சுந்தரமென் கொழுந்தை**
**சந்திர சூரியர் வந்துதியாமுன் சகோதரர் தாய்**
**தந்தைய ரின்றித் தனிநின்ற வேளையிற் றாவினையோ?**
**நிந்தனை நிந்தனை காண் அந்தகா இந்த நீணிலத்தே.''**

பிள்ளையவர்களின் நான்காவது புத்திரரே அழகு சுந்தரம் பிள்ளையவர்கள். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றுத் தம் தந்தையாரைப் போன்று தமிழிலும் மிகுந்த பாண்டித்திய முடையவராய் விளங்கினார். தமிழில் இவருக்கிருக்கும் பேரறிவின் காரணமாக கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப் பெற்றார். இவரை இப் பொழுது கிங்ஸ்பரி (Kingsbury) என அழைப்பர், இது இவர் கிறித்து சமயத்தைத் தழுவியபோது வைத்துக் கொண்ட பெயர்.

பிள்ளையவர்களுக்கு இரு பெண் குழந்தைகள் இருந்தார்கள் எனமேலே கூறியுள்ளாம். அவர்கள்பெயர் பொன்னம்மாளும் சிவபாக்கியமும் என்ப. அவர்கள் இப் போது உயிரோடில்லை. அன்றியும் பிள்ளை அவர்களின் மனைவியும் இறந்து விட்டமையால் 1888-ம் ஆண்டு சண்டிலிப்பாயிலுள்ள சீதாலட்சுமி என்னும் பெண்ணை இரண்டாம் தாரமாகக் கலியாணம் செய்து கொண்டனர். இவர்இப்பொழுதும் உயிரோடிருக்கின்றனர். இவ்விவாகத்தி

www.padippakam.com



னால் பிள்ளையவர்களுக்கு சிங்காரவேலு, வெற்றிவேலு என்னும் இரு புத்திரர் இருக்கின்றனர்.

இது நிற்க, உயர்திரு. ஆறுமுக நாவலர் பெருமானும், திருவாளர் தாமோதரம் பிள்ளை அவர்களுமே தமிழ்க் கல்வி இப்போது அடைந்துள்ள உயர்நிலைக்துக்கு காரணர் ஆவர். ஆறுமுக நாவலர் அவர்கள் இல்லாதுவிடின் தமிழ் மொழியிலுள்ள அரும்பெரும் நூல்களாகிய தேவாரம் திருவாசகம் முதலாகிய திருமுறைகளும், கந்தபுராணம் முதலாகிய புராண நூல்களும் மகாபாரதம் முதலாகிய இதிகாசங்களும், நன்னூல் முதலிய இலக்கணங்களும் ஏட்டுச் சுவடிகளில் இருந்தவாறே இறந்து பட்டிருக்கும். அதுபோலவே தாமோதரம்பிள்ளை அவர்களும் தமது வாழ்நாளைத் தமிழ்த் தொண்டிற்கு அர்ப்பணஞ் செய்யாது விட்டிருப்பின் தொல்காப்பியம், கலித்தொகை முதலிய சங்க இலக்கியங்கள் ஏட்டுருவமாகவே இருந்து, கவனிப்போரின்றிப் பூச்சி வாய்ப்பட்டு இருந்த விடந் தெரியாமல் மறைந்திருக்கும். தமிழ் மொழியிலே பல காவியங்கள் காலத்திற்குக் காலம் இறந்துபட்டன. எஞ்சிய நூல்களும் அவ்வண்ணமே இறந்துபடாது, இப்பெரியாரின் நன்முயற்சியினால், இப்போது உலகிலே நடமாடுகின்றன. அரசாங்கத்தின்கீழ் சேவை செய்யும்போது இத்தமிழ்த் தொண்டைத் தாம் விரும்பிய வண்ணம் செய்ய நேரம் இல்லாது போயிற்று ஆனால், நாவலர் அவர்களுக்கு காலத்துக்குக் காலம் ஏட்டுச் சுவடிகளில் இருந்த நூல்களைப் பரிசோதிப்பதற்கும் அவைகளை அச்சேற்றுவதற்கும் தம்மால் இயன்ற உதவி புரிந்து வந்தனர். நாவலர் பெருமான்மீது அவருக்கு அளவற்ற மரியாதையும், அன்பும் இருந்தது. அக்காரணத்தினால் அவரைப் பிள்ளையவர்கள், ''ஒப்பாரும் மிக்காருமில்லாத நாவலர் பெருமான்'' எனத் தினவர்த்தமானிப் பத்திரிகையில் எழுதியுள்ளார்கள். நாவலரிடத்திருந்த கல்வித் திறமையை அறிந்ததன் பயனாக பண்டைத் தமிழ் நூல்களுக்கெல்லாம் இலக்கணமாகவும், தமிழ் மொழிக்கோர் அணியாகவும் விளங்குகின்ற தொல்காப்பியம் என்னும் நூலை அச்சிடும்படி அவர்களை வேண்டிக்கொண்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



அவ்வேண்டுகோளுக்கிணங்கி நாவலர் பெருமான் சொல்லதிகாரத்தை சேனாவரையர்உரையோடுஅச்சிட்டு வெளியேற்றினர். அதன்பின் நாவலர் அவர்கள் 1879-ம் ஆண்டு இறைவன் திருவடியை எய்திவிடவே பிள்ளையவர்கள் தாமே அப்பணியைச் சிரமேற் கொண்டார். அக்காலத்திலேயே அவரும் அரச சேவையிலிருந்து விலகினார். தொல்காப்பியச் சுவடிகளைத் தமிழ் நாடெங்கணும் தேடி எடுத்துப் பரிசோதித்துப் பொருளதிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு 1855-ம் ஆண்டு அச்சேற்றி வெளியிட்டனர். அத்துடன் ஒன்றன்பின் ஒன்றாய் வீரசோழியம், தணிகைப்புராணம், கலித்தொகை, இலக்கண விளக்கம், சூளாமணி முதலிய நூல்களையும் அச்சேற்றி வெளியிட்டார். இவை முடிந்தபின் தொல்காப்பியம் எழுத்ததிகாரமும் நச்சினார்க்கினியர் உரையுடன் வெளிவந்தது. இவர் இறக்கும்போது அகநானூறு பரிசோதனை நிலையில் இருந்தது. பிள்ளையவர்கள் இம்முயற்சியினால் அடைந்த துன்பங்களும் பொருள் நட்டங்களுமோ பல. ஆனால், அவை ஒன்றையும் நோக்காது தமிழ்மொழியின் மேலிட்ட அன்பினாலே இவ்வரிய முயற்சியைச் செய்து முடித்தனர். இவருக்குப் பின்னரே சங்க இலக்கியங்கள் தமிழுலகில் நடமாடத் தொடங்கின. இப்பணிகளையறிந்த காருண்ணிய அரசினர் இவருக்கு ''ராவ்பகதூர்'' என்னும் பட்டத்தை 1895-ம்ஆண்டு சூட்டினர். இதனாலே இவரைச் சங்கநூற் கல்விக்குத் தந்தை எனல் மிகையாகாது.

தாமோதரம்பிள்ளை அவர்களுடைய தந்தை தாயர் அமெரிக்க மிசனைச் சேர்ந்த கிறித்தவர்கள். அக்காலத்தில் அமெரிக்க மிசன் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது, கிறித்தவரானார் யாவருக்கும் மேல்நாட்டுப் பெயர்களைக் கொடுத்தது போலவே இவருடைய குடும்பத்தினருக்கும், ''கிங்ஸ்பரி'' என்னும் பெயரைக் கொடுத்தார்கள். ஆனால், தாமோதரம் பிள்ளையவர்கள் சிறு வயது தொடக்கம் கிறித்துவக் கொள்கைகளை ஆதரியாது விடுத்தனர். சைவ சமயத்திலே

www.padippakam.com



மிகுந்த நம்பிக்கை கொண்டனர். சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்னும் உணர்வு உதிக்கப் பெற்றவராய், சரியை, கிரியை, ஞானம், யோகம் என்னும் நான்கினுள் முதலிரண்டினாலும் அப்பெருமானை வழிபட்டுச் சமய தீட்சை, விசேட தீட்சை என்னும் இரண்டினையும் பெற்றுச் சிவலிங்கம் எழுந்தருளச் செய்து பூசித்து வந்தனர்.

அன்றியும், இவர் காலத்திற்றான் ஆறுமுக நாவலர் முதலிய சைவ சமயக் கூட்டத்தினருக்கும் கறல் விசுவநாத பிள்ளை முதலிய கிறித்தவர் கூட்டத்தினருக்கும் சமயப் போட்டி நடந்து வந்தது. அப்போட்டியிலே பிள்ளையவர்கள் சைவ சமயத்தவர் பக்கம் சேர்ந்ததுமன்றிக் கிறித்தவரை மிகவும் தாக்கி எழுதியுமிருக்கின்றார். இது, சிவசங்கர பண்டிதர் எழுதிய கிறிந்து மத கண்டனம் என்னும் நூலுக்குச் சாற்று கவியாகக் கண்ட பின்வரும் செய்யுளால் விளங்கும்:

''முத்துக் குமார கவிராச சேகரன் மொய்யமரில்
தத்தித் தடக்குண்டு நாவலர் தாவச் சனி வடிந்து
சித்தங் கெடவுடல் தாமோதரேந்திரன் சிதைத்த
பைபின்
செத்துக் கிடக்குது பார்ச்சிவ சங்கரன்
தெம்முனைக்கே.''

சைவ சமயத்துக்காகவும் தமிழ் மொழிக்காகவும் தமது வாழ்நாளைச் செலவழித்த ஆறுமுக நாவலர் பெருமான் இறைவனடி சேர்ந்ததைக் கேள்வியுற்றபோது சொன்ன பின் வருங் கவியினாலும் இவருடைய சைவ சமயப் பற்று விளங்கும்.

''வேதம் வலிகுன்றியது மேதகு சிவாகம
விதங்கள் வலிகுன்றின வடற்
சூதன் மொழி மூவறு புராணம் வலிகுன்றியது
சொல்லரிய சைவ சமயப்

www.padippakam.com



போதம் வலிகுன்றியது சொற் பொதிய மாமுனி
புகன்ற மொழி குன்றியது நம்
நாதனிணை ஞாலமிசை நாடறிய ஆறுமுக
நாவலரடைந்த பொழுதே.''

இவ்வண்ணம் பலவகையாகப் பணியாற்றிய பெருந்தகை. 1901-ம் ஆண்டுக்குச் சமானமான சார்வரி ஆண்டு, மார்கழி மாதம். 18-ந்தேதி இந்நிலவுலகை நீத்து இறைவன் திருவடி நீழலை அடைந்தனர். இவர் பிரிவைப்பற்றிச் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரவர்கள் சொல்லிய பின்வரும் பாவினால் பிள்ளையவர்கள் அரும் பணியும் அழியாப் புகழும் நின்று விளங்கும்.

''ஏட்டிலிருந்த வருந்தமிழ் நூல்களனைப் புலவும்
தீட்டி வழுக்களைந் தச்சினிலார்க்குபு செந்தமிழ் சேர்
நாட்டி லளித்துயர் தாமோத ரேந்திர னண்ணு புகழ்
பாட்டி லடங்குந் தகைத்தோ புலவர்கள் பாடுதற்கே.''

www.padippakam.com

# ஈழநாட்டில் தமிழ் வளர்ச்சி

பண்டைக் காலந்தொட்டு ஈழநாடு தமிழ் மொழிக்குச் சிறந்த இருப்பிடமாகத் திகழுகின்றது. சங்க காலத்தில் ஈழ நாட்டிலிருந்தும் பல புலவர்கள் தமிழகம் சென்று தமிழ் மொழியை அலங்கரித்துப் புகழ் பெற்று விளங்கினர். அவருள் ஒருவர் ஈழத்துப் பூதந்தேவனார். அவரினது பாக்களுட் சில சங்க நூற்களிற் காணக்கிடக்கின்றன.

ஈழத்துத் தமிழரசர் காலத்தில் தமிழ்மொழி பல துறைகளிலும் உயர்ந்த நிலையில் இருந்ததென்பதற்குப் பலவித சான்றுகள் உள. இக்காலத்திற்றான் தட்சண கைலாச புராணமும், திரிகோணாசல புராணமும்; பரராசசேகரம் என்னும் வைத்திய நூலும் செகராசசேகரம் என்னும் சோதிட நூலும், அரசகேசரி இயற்றிய இரகுவம்சமும் ஆக்கப் பெற்றனவாக அறிகின்றோம். அன்றியும் சரஸ்வதி மகாலயம் என்னும் நூல் நிலையத்தையும் ஸ்தாபித்து தமிழ் நூல்களை ஒருங்கு சேர்த்துப் பேணிக் காத்து வந்தனர். இத்தகைய காரணங்களால் தமிழ்மொழி அக்காலத்துச் சிறப்புற்றோங்கியது.

அதுமட்டுமன்றி அக்காலத்து ஈழநாட்டை ஆண்ட சிங்கள அரசரும் தமிழ் மொழியையும் தமிழ்ப் புலவரையும் மிகவும் ஆதரித்து வந்தனர். தம்பதேனியாவில் இருந்து அரசாண்ட மூன்றாம் பராக்கிரமவாகு என்பான் முன்னிலையில் போசராச பண்டிதர் என்பவரால் இயற்றப்பெற்ற

www.padippakam.com



சரசோதி மாலை என்னும் நூல் (கி.பி. 1310) அரங்கேற்றப் பெற்றது.

அதன்பின் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய ஐரோப்பியர் ஆட்சியிலும் ஈழநாட்டிலே தமிழ்மொழி வளர்ச்சி குன்றவில்லை. ஆனால், தமிழ்மொழி தனது வளர்ச்சியில் பழைய முறையோடு புதிய முறையையுந் தழுவிக்கொண்டது. கூழங்கைத் தம்பிரான் என்பவர் ஆக்கிய யோசேப்புப் புராணம் என்னும் நூல் பழைய புராண முறையில் புதிய கருத்துக்களோடு ஆக்கப்பட்டது. பிலிப்பு தேமெல்லோ என்ற ஈழநாட்டுதித்த கிறிஸ்தவ பாதிரியாரால் கிறிஸ்தவ வேதாகமத்து ஒரு பாகமாகிய புதிய ஏற்பாடு தமிழில் மொழி பெயர்த்து அச்சிடப் பெற்றது. இதுவே தமிழில் கிறிஸ்தவ வேதாகமத்தினின்று மொழி பெயர்த்து வெளிவந்த முதன் முதல் நூலாகும். இது மாத்திரமின்றி பழைய ஏற்பாட்டின் சில பாகங்களும் மொழி பெயர்க்கப்பட்டன. அன்றியும் மருதப்பக் குறவஞ்சி என்னும் நூலும் இயற்றப்பட்டது. இது அக்காலத்து யாழ்ப்பாணத்தில் இராசவாச முதலியாரா யிருந்த மருதப்பிள்ளை என்பவர் பேரில் தேமெல்லோப் பாதிரியார் இயற்றியது. இவை மட்டுமன்றி அவர் 'சத்தியத்தின் ஜெயம்' என்னும் நூலையும் இயற்றியுள்ளார். இன்னும் கவுரியேல் பச்சேக்கோ என்னும் கத்தோலிக்கக் குருவானவர் 'தேவ ஆசீ பெற்ற மாந்தர் சரிதை' என்னும் வசன நூலும் இயற்றியுள்ளார். இஃது இருபெரும் புத்தகங்களாக வெளியிடப்பட்டது. இவற்றைவிட போர்த்துக்கேய ஒல்லாந்த காலத்தில் வேறு பல நூல்களும் இயற்றப்பெற்றன. யாழ்ப்பாணவைபவ மாலை என்னும் சரித்திர நூலைக் கூழங்கைத் தம்பிரானின் மாணவருளொருவராகிய மாதகல் மயில்வாகனப் புலவர் என்பார் இயற்றியுள்ளார் அதனோடு தில்லை புலியூர் யமகஅந்தாதி, காசி யாத்திரை என்னும் செய்யுள் நூல்களையும் ஞானாலங்கார ரூபக நாடகம் என்னும் நாடக நூலையும் பாடினர்.

www.padippakam.com



பின்னர் ஆங்கில ஆட்சி தொடங்குகின்றது. இக்காலத்து முதல் பகுதியில் சின்னத்தம்பிப் புலவர் என்னும் புலவர் சிகாமணி திகழ்ந்தனர். விரைவிற் கவிபாடும் வன்மை வாய்ந்தவர். மறைசையந்தாதி, கல்வளையந்தாதி என்னும் பிரபந்தங்களையாத்தனர். அக்காலத்து யாழ்ப்பாணத்துக் கரவெட்டி யென்னும் ஊரில் வாழ்ந்த வேலாயுதம் பிள்ளை என்பவரை பாட்டுடைத் தலைவனாக்கிக் 'கரவைவேலன் கோவை' என்னும் கோவை நூலையும் செய்தனர். பறாளை விநாயகர் பள்ளு என்னும் பள்ளுப் பிரபந்தத்தையும் யாத்தனர்.

புலவர்களைக் குறித்துப் பேசுமிடத்து சேனாதிராய னார் என்பவரைப் பற்றியும் குறிப்பிடல் வேண்டும். இவரும் கூழங்கைத் தம்பிரானிடம் கல்வி பயின்றவர். ஆங்கில மொழி யோடு போர்த்துக்கேய மொழியையுங் கற்றுணர்ந்தவர். அன்றியும் அவர் காலத்துள்ள வித்துவான்கட்கெல்லாம் ஒரு சிரோமணியாய் விளங்கியவர். இவரிடம் கற்ற மாணவர் பலர். அவருள் ஸ்ரீ லஸ்ரீ ஆறுமுக நாவலரும் ஒருவராவர். சுருங்கக் கூறுமிடத்து இப்பெரியாரின் முயற்சிகளால் யாழ்ப் பாணத்தில் தமிழ் மிக விருத்தியடைந்தது. நல்லைவெண்பா, நல்லையந்தாதி, நல்லைக்குறவஞ்சி என்னும் பிரபந்தங் களை இயற்றியுள்ளார். தனிக் கவிகளையும் யாத்துள்ளார்.

இக்காலத்துத் திறமை வாய்ந்து விளங்கிய புலவர்களுள் சிவசம்புப் புலவருமொருவராவர். இவர் யாழ்ப்பாணத்து புருத்தித்துறையைச் சார்ந்த உடுப்பிட்டியைச் சேர்ந்தவர். இளமை தொட்டுக் கவிபாடும் வன்மை படைத்தவர். ஈழ மண்டலத்தில் பிரபந்தம் பாடியவர்களுள் இவரே தலை சிறந்தவர். பாஸ்கர சேதுபதிமீது ஓர் கல்லாடக் கலித்துறை யும் நான்மணி மாலையும் இரட்டை மணிமாலையும் வேறு தனிக் கவிகளும் பாடியவர் அப்பாடல்களைச் சேதுபதி முன்னிலையில் அரங்கேற்றி மதிப்பும் பெற்றவர். அன்றியும் பாண்டித்துரைத் தேவர் அவர்கள்மேல் ஒரு நான்மணி மாலை பாடிப் பரிசில் பெற்றார். அவர் காலத்திருந்த பிரபுக்கள்மீதும்

படிப்பகம்

www.padippakam.com



த்னிப் பாடல்கள் இயற்றியுள்ளார். மறைசையந்தாதி யாப்பருங்கலக்காரிகை என்னும் நூல்களுக்கு உரையுங் கண்டனர். பல மாணவரை ஒருங்கு கூட்டிப் பாடஞ் சொல்லித் தமிழை வளர்த்தார்.

ஈழத்துப் புலவர்களைப் பற்றிப் பேசுமிடத்து யாழ்ப்பாணத்து ஏழாலை சுப்பையாப் புலவர், என்பவரைப் பற்றி உரையாதிருக்க முடியாது. இவர் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை மேளகாரப் பகுதியைச் சேர்ந்தவர். அதனால், இவரை நட்டுவச் சுப்பையர் என்று அக்காலத்து அழைத்தனர். இலக்கண இலக்கியங்களிற் பயின்றவரோ என்று ஒருவருக்கும் தெரியாது. ஆனால், இவரை ஒரு இயற்கைப் புலவன் என்றே கூறல் வேண்டும். இவர் இயற்றிய ''கனகி சுயவரம்'' என்னும் நூல் இவரது இயற்கைப் புலமைத் திறமையையும் வர்ணனைச் சிறப்பையும் புத்திசாதுரியத்தையும் நன்கு தெரிவிக்கின்றது. இந்நூலில் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பிரபுக்களைப்பற்றியும் பல சுவையான செய்திகள் மலிந்துள்ளன. இவர் பாட்டுக்களில் சொல்லும் பொருளும் அழகாய் அமைந்துள்ளன. பாடல் மாதிரிக்கு அவர் நூலிலிருந்து ஒரு விருத்தம் தருவாம்:

**காட்டுக் குயிலைக் கடி தோட்டி கனத்த நாவிஜெய் தடவி**
**மாட்டு மினிய சொல்லாளே மானே தேனே கனக மின்னே**
**ஓட்டைக் காதி னுடனிருந்திங் குவந்தே புடவை விற்கின்ற**
**நாட்டுக் கோட்டைச் செட்டிகளி னல்லாண்டப் பனிவன்**
**காணே.**

ஈழநாடானது ஆங்கிலேயரது கையில் சென்றதும் ஆங்கு இதுகாறும் வழங்கிவந்த தமிழ்மொழியும் ஒரு புத்தம் புதிய முறையில் வளரத் தொடங்கியது. புத்தம் புதிய கலைகள் தோன்றின. இதுகாறும் புலவர்கள் செய்யுள் நடையையே நூல் யாத்தற்குப் பெரிதும் கையாண்டு வந்தனர். ஆனால், ஆங்கிலேயருடன் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பிவந்த பாதிரிமார் தம் சமயக் கொள்கையைப் பரப்புவதற்குச் செய்யுள் நடை ஓர் இடையூறாயிருந்ததைக் கண்டு கற்றோ

ஈ—6

www.padippakam.com



ரும் கல்லாதோரும் தமது கொள்கையை இலகுவில் விளங்கிக் கொள்வதற்காக வேண்டி வசன நடையைக் கையாளத் தொடங்கினர். அன்றியும் மேலைத் தேசத்து முன்னேறி வந்த வைத்தியம், விஞ்ஞானம், கணிதம், தருக்கம் முதலிய பகுதியில் எழுந்த நூல்களைப் பின்பற்றி, தமிழிலும் நூல் களியற்றினர்.

இக்கலையாக்க முயற்சியில் பெரிதும் ஈடுபட்டிருந்தவர் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை அமெரிக்கன் மிஷனைச் சேர்ந்த கிறீன் பாதிரியார் ஆவர். அவருக்கு உதவியாக இருந்து பணியாற்றியவர் தான்போத்து, சாப்மன் உவில்லி யம்போல், கறோல் விஸ்வநாத பிள்ளை, நெவின் சிதம்பரப் பிள்ளை முதலியோர் ஆவர். இவர்கள் மொழிபெயர்த்தும், தாமாக இயற்றியதுமாகிய நூல்கள் பல. அவையாவும் வசன நடையில் எழுதப் பெற்றவை.

இந்நூல்கள் கவனிப்பாரின்றி அருகிவிட்டது, தமிழ் மொழியின் தவக்குறைவு போலும். இப்பெரியார்கள் 19-ம் நூற்றாண்டிற் செய்த பணியைக் குன்றவிடாது மேலும் மேலும் தமிழ் மக்கள் இத்துறைகளில் உழைத்திருப்பரேல்;

''புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மொத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.
சொல்லவுங் கூடுவ தில்லை — அதைச்
சொல்லுந் திறமைதமிழ்மொழிக் கில்லை

என்றந்தப் பேதை யுரைத்தான்.........

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்
தந்தையருள் வலியாலும் — இன்று
சார்ந்த புல்வர் தவவலி யாலும்
இந்தப் பெரும் பழிதீரும் — புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்.''

படிப்பகம்

www.padippakam.com



என்று கூறிப் பாரதியார் உளம் நொந்து புலம்புவதற்கு இடம் வந்திராது. இந்த இருபதாம் நூற்றாண்டிலே, கலைச் சொற்கள் தேடற் பொருட்டு கலையாக்கக் கழகங்கள் முயல வேண்டிய தில்லை. இக்கழகங்கள் வெறுஞ் சொற்களைத் தேடித் தேடி வாணாளை வீணாளாக்குகின்றன. வட்டுக் கோட்டையில் அப்பெரியார் செய்த பணியின் நூற்றிலொரு பங்கேனும் பெரும்பட்டதாரிகள் சேர்ந்த இக்கழகங்கள் இன்னும் செய்தில. இனிமேலாவது செய்யுமோ? வெறும் சிலுசிலுப்பொழிய வேறொன்றையும் காணோம்.

எம்மொழிக்கும் முதற்கருவியாயமைந்தவை இலக்கண மும் நிகண்டுமாம். தமிழ்நாட்டில் மேனாட்டுப் பாதிரிமார் வந்து தமிழைப் படித்துப் பணியாற்றும் வரையும் நிகண்டு களே தமிழ்மொழிப் பயிற்சிக்குத் துணைபுரிந்து வந்தன. இந் நிகண்டுகளெல்லாம் செய்யுள் வடிவமாக இயற்றப்பட்ட நூல்களானதால் அவை கற்றோர்க்கே பெரிதும் பயன்பட் டன. தமிழைப் படித்த மேனாட்டுப் பாதிரிமார் இக்குறை யைக் கண்டனர். கண்டதும் மேனாட்டு முறையில் அகராதி ஒன்று இயற்றினால் தமிழ் படித்ததற்கு மிகவும் உதவி புரியும் என்று எண்ணினார். இதன் காரணமாக அக்காலத்துப் பாதிரிமாருக்குள் சிறந்த தமிழ்ப் புலமையோடு விளங்கிய இத்தாலியா தேசத்துக் குருவானவர் வீரமாமுனிவர் என்பார் ''சதுர் அகராதி'' என்றோர் அகராதியை வகுத்தனர். ஆனால், தமிழ் மொழியில் வழங்கிய முழுச் சொற்களும் இவ்வகர்ாதியில் இடம்பெறவில்லை. யாழ்ப்பாணத்தில் வந்து பணியாற்றிய கிறிஸ்தவ பாதிரியார் இக்குறையைக் கண்டு அதை நீக்குமுகத்தான் மேனாட்டு முறையில் ஓர் புதிய அகராதியை ஆக்கிவைக்க முயன்றனர். இவ்வெண் ணத்தை நிறைவேற்றும் பொருட்டு, அக்காலத்து யாழ்ப் பாணத்தில் விளங்கிய தமிழ் அறிஞர் கொண்ட ஒரு குழுவை அமைத்து சொற்களைச் சேகரிக்கும் முயற்சியிலீடுபட்டனர்.

இம்முயற்சியின் பலனால், ''மானிப்பாய் அகராதி'' என்ற பெயரோடு ஓர் அகராதி வெளிவந்தது. இத்துடன்

www.padippakam.com



நில்லாது ஒரு தமிழ் ஆங்கில அகராதியையும் வெளியிட முயன்றனர். இந்நோக்கத்தோடு பல்லாண்டு முயன்று தாம் சேர்த்த சொற்களையெல்லாம் அகர வரிசைப்படுத்தி உவின்சிலோ பாதிரியாரிடம் கொடுத்தனர். அவர் அதனைத் திருத்தி அமைத்து 1862 ம் ஆண்டு சென்னை பட்டினத்தில் அச்சேற்றி வெளியிட்டனர். இதுவே, மேனாட்டு முறையில் தமிழ்ச் சொற்களைக் கோவைப்படுத்தி வெளியிட்ட தமிழ்ப் பேரகராதி எனலாம். பின்னெழுந்த அகராதியெல்லாம் இதனைப் பின்பற்றி எழுந்தவையாகும். எனினும் இவ்வக ராதியில் காணும்,சிறப்புகள் மற்றெவ்வகராதியிலும்இல்லை. சில ஆண்டுகளுக்கு முன் சென்னை மாகாண ஆட்சியில் பெரும் தொகை செலவிட்டு பல்லாண்டு முயன்று வெளிவந்த ''தமிழ் அகராதி'' தானும் இந்நூலை முன்மாதிரியாக கொண்டே எழுந்தது. உவின்சிலோ அகராதியிலும் பார்க்க இந்தமிழ் அகராதியில் சொற்கள் அதிகமுண்டு. சொற்களின் பிறப்பைக் கூறுவதாக இந்நூலில் குறிக்கப்பட்டுள்ளது. தமிழில் வந்து வந்து வழங்கும் சங்கத மொழிச் சொற் களுக்கும், உருது, இந்துஸ்தானி சொற்களுக்கும் சரியொப் பாய் அந்தந்த மொழிகளிலுள்ள சொற்களை கூறுவதே யன்றி அச்சொற்கள் எவ்வெம் மாற்றங்களை யடைந்து தமிழ் ரூபம் அடைந்தெனவென்று கூறுவதில்லை. அதனோடு உண்மையான தமிழ்ச் சொற்களின் பிறப்பு முறை ஒன்றை யுங் காணோம். சுருங்கக் கூறின் உவின்சிலோ செய்த அகராதியிலும் பார்க்க இங்கு எடுத்துப் பேசும் ''தமிழ் அகராதி'' அவ்வளவு சிறந்தது அல்ல எனல் மிகையாகாது. தமிழ் மொழியிலே வழங்குகின்ற சொற்களின் பிறப்பை ஆராயும் முயற்சியிலும் முனைந்து நின்ற பெருமை ஈழ நாட் டிற்கே உரியது.

இக்கூற்றுக்குச் சான்றாக நல்லூர் சுவாமி ஞானபிரகாசர் ஆக்கி வெளியிட்ட சொற் பிறப்பு ஒப்பியல் அகராதியின் முதற்பகுதியைக் கூறலாம். சொற்களைப் பற்றி அப்பெரியார் செய்தஆராய்ச்சி முழுதும்சரியென்று கூறுகின்றோமல்லோம்.

www.padippakam.com



ஆனால், தமிழ் மொழிச் சொற்சிறப்பு ஆராய்ச்சிக்கு வழி கோலிய பெருமை இப்பெரியார்க்கே உரியது. இந்த அகராதி முழுவதும் எழுதி முடிந்ததாகக் கேள்வி. இந்நூல் முழுவதும் வெளிவரின் சொற்பிறப்பு ஆராய்ச்சித் துறையில் ஈடுபடு வோருக்கு பெரிதும் துணை புரியும்.

ஆங்கில அரசுடன் மேலைத் தேசத்துக் கிறிஸ்தவப் பாதிரிமாரும் தமது சமயத்தைப் பரப்ப அயராது உழைத்த னர் என்று முன்னே காட்டினோம். அவரின் ஓயா உழைப்பி னால் சைவ சமயத்தவர் பலர் தமது சமயத்தை விட்டுக் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவத் தொடங்கினர். இதைக் கண்ணுற்ற சைவப் பெரியார் பலர் தமது பண்டைய மதம் இவ்வாறு அழிகின்றதே என்று கவர்கின்றனர். சிலர் இம்மத மாற்றத்தைத் தடுக்க வேண்டுமென்று முன் வந்துழைத் தனர்.

இவ்வாறு உழைத்தவர்களுள் தலைசிறந்தவர் யாழ்ப் பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் ஆகும். இப் பெரியார் இருபாலை சேனாதிராயரிடம் தமிழை நன்கு கற்றவர். பாதிரிமார் நடத்திய பள்ளிக்கூடத்திற் சென்று ஆங்கிலமும் நன்கு கற்றவர். சங்கத மொழியிலும் சிறந்த வல்லுனர். கிறிஸ்தவப் பாதிரிமாருக்காக இளமையிலே விவிலிய நூலை தமிழிலே மொழி பெயர்த்துக் கொடுத்தவர். இங்ஙனம் சைவ சமயம் குன்றுவதைக் கண்ணுற்று பாதிரி மார் முயற்சியைப் பல வகையாலும் தடுப்பதற்கு முயன்றார். அதன் பயனாய் சைவ சமயத்தை நிலைநாட்டும் பொருட்டு யாழ்ப்பாணம் எங்கணும் சைவப் பாடசாலைகளை நிறுவி, சைவ சமயக் கல்வியையும் தமிழ் மொழியையும் மக்களுக்குப் புகட்டி வந்தார். அன்றியும் அப்பள்ளிக்கூடங்களில் பாவிப்ப தற்காக பல நூல்கள் தேவையெனக் கண்டார். அக்காரணத் தால் சென்னை பட்டணத்திலே ஓர் அச்சுக்கூடம் ஏற்படுத்தி ஏட்டு வடிவிலே இருந்த அரிய பெரிய தமிழ் நூல்களையெல் லாம் அச்சேற்றி வெளியிட்டார். பள்ளிக்கூடங்களிற் பயிலும் சிறார்க்கென தெள்ளிய நடையில் பாலபாடங்களையும் தாமே

www.padippakam.com



வெளியிட்டார். சமய சம்பந்தமான புராண இதிகாசங்களை முதன்முதலாக அச்சேற்றி உலகுக்களித்த பெரியார் ஆறுமுக நாவலர் பெருந்தகையே.

நிற்க, கிறிஸ்தவப் பாதிரிமாரோடு எதிர்த்து சைவ சமய அறிவைப் பெருக்கும் வண்ணம் அப்பாதிரிமாரைப் போல் சைவ சமய உண்மைகளைத் துண்டுப் பத்திரங்கள் மூலம் எழுதி வெளியிட வேண்டியதாயிற்று. இதுகாறும் இப்படிப் பட்டவையெல்லாம் செய்யுள் நடையிலே எழுதி வெளியிடப் பட்டது. செய்யுள் நடை பொது மக்களுக்கு விளங்காது. ஆகையினால் அப்படிச் செய்தால் தமது முயற்சி வீண் முயற்சி யாய் முடிந்துவிடுமெனக் கண்டார். அதனால் வசன நடை யைக் கையாண்டார். எனவே, அதனை யாவரும் விளங்கக் கூடிய செம்மை சான்ற தெள்ளிய முறையில் அமைத்தார். இவரியற்றிய பெரிய புராண வசனம் திருவிளையாடற்புராண வசனம் ஆகியவை திருந்திய எளிய வசன நடைக்கு இலக்கிய மாக அமைந்துள்ளன, இக்காரணத்தால் அன்றோ 'பரிதி மாற் கலைஞன்' என மறு பெயர் பூண்ட வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் அவர்களும் நமது நாவலர் பெருந் தகையை 'வசனநடை கைவந்த வள்ளலார்' என்று கூறிப் போந்தனர்.

நாவலர் தமிழ் மொழிக்காற்றிய பிறிதுமொரு தொண்டு மிகவும் பாராட்டுதற்குரியது. கிறிஸ்தவப் பாதிரிமார் தமது சமயத்தைப் பரப்புவதற்காக ஆங்காங்கு சென்று மேடை களில் நின்று பிரசங்கம் செய்வதைக் கண்டார். கண்டதும் தாமும் அவ்விதம் செய்யப் பயின்றுகொண்டால் சைவ சமயத் தைச் சீர்குலைக்க விடாது பெருக்குவதற்குத் துணைபுரியு மென எண்ணினார். இதன் பயனாய் யாழ்ப்பாணத்துச் வண்ணார் பண்ணையிலுள்ள மண்டபத்திலே வெள்ளிக் கிழமை தோறும் சைவப் பிரசங்கஞ் செய்யத் தொடங்கினார். தான் செய்ததுமின்றி வேறு பலரையும் இவ்வாறு செய்யப் பழக்கிக்கொண்டார். இதன் பயனாய் முன்னொரு போது மில்லாத வழக்கமாகிய மேடைப் பேச்சும் தமிழ் மொழிக்கு

படிப்பகம்

www.padippakam.com



வந்தது. ஆகையால் தமிழில் மேடைப் பேச்சு என்பதற்கு நாவலர் அவர்களே தந்தை. இவர்கள் தமிழ்நாடு சென்ற போது இவரின் பேச்சு வன்மையின் காரணமாக நாவலர் எனும் பட்டம் வழங்கப்படலாயிற்று.

நாவலர் பெருந்தகை சமயத்துறையில் பெரிதும் தொண்டு புரிய சி. வை. தாமோதரம்பிள்ளை யென்னும் பெரியார் தமிழ் ஆக்கத்திற்காக வேறோர் துறையிலே உழைத்தார். செல்லு வாய்ப்பட்டு அழிந்தொழியும் தறுவாயிலிருந்த சங்க நூற் களை ஊர் ஊராய்த் திரிந்து சேகரித்து ஒப்பு நோக்கி அச்சு வாகனம் ஏந்தித் தமிழ் அன்னையைச் சிறப்பித்தனர். கலித் தொகை, தளவியல் வீரசோழியம், சூளாமணி, இலக்கண விளக்கம் ஆகிய இந்நூல்கள் இவரின் ஓயா உழைப்பி னாலேயே இன்று நிலவுகின்றன. தமிழரின் அருங்கலமாகிய தொல்காப்பியம் என்னும் இலக்கணத்தை இவர் உழைப்பு இல்லாதுவிடின் தமிழ் மக்கள் கனவிலும் காணமுடியாது. சுருங் கக்கூறின் நாவலர் பெருந்தகை தமிழோடு சம்பந்தமுடைய சைவசமய நூல்களையும் புராண இதிகாசங்களையும் திருத்தி வெளியிட பிள்ளையவர்கள் சங்க நூல்களையும் தொல்காப் பியம், இலக்கண நூல்களையும் வெளியிட்டார். இப்பெரியார் களின் உழைப்பினாலன்றோ தமிழ் மொழியிலுள்ள நூல்கள் இறந்து படாது புத்துயிர் பெற்றன. இவர்களுக்குத் தமிழ் மக்கள் செய்யக்கூடிய கைமாறு யாதோ? இவர்களது அடிச் சுவட்டைப் பின்பற்றியே காலஞ்சென்ற உ. வே. சாமிநாதய் யரும் பழம் நூல்களை அச்சிட்டுப் பெரும் புகழ் பெற்றார்.

இதுவரையும் இயற்றமிழினது வளர்ச்சியையும் ஆக்கத் தையும் குறித்துக் கூறினோம். ஈழத்திலே நாடகத் தமிழும் இசைத் தமிழும் எவ்வாறு வளர்ந்ததென ஒரு சிறிது ஆராய் வோம். ஈழத்தில் இன்றும் தென்மோடி வடமோடி முறைப் படி பல நாடகங்கள் நாட்டுக் கூத்து முறையாக ஆடப்பெற்று வருகின்றன. இராம நாடகம் குசலவ நாடகம் அரிச்சந்திர விலாசம் முதலியவை ஆடப்படுவதை இன்றும் நாட்டிலே ஆங்காங்கு காணலாம். ஈழ நாட்டிலும் எத்தனையோ நாட

www.padippakam.com



கங்கள் இயற்றப்பெற்று ஆடப்பெற்று வந்தது. இன்றும் வருகின்றன. அவற்றுள் ஒரு சிலவே அச்சில் வெளிவந்துள்ளன. பூதத் தம்பி விலாசம், மீகாமன் வெடியரசன் நாடகம் என்னுமிரு நாடக நூல்களையும் நாம் அச்சு உருவத்தில் கண்டுள்ளோம். வாளிபமன் நாடகம், எம்பிறிதோர் நாடகம் முதலிய பல நாடக நூல்கள் இன்றும் ஏட்டு ரூபமாக நாட்டி லிருக்கின்றன. மட்டக்களப்புப் பகுதியில் வசந்தன் பாடல்கள் என்பன உண்டு. அவற்றைப் பாடிக் கூத்தாடுவர். இப்பாடல்களிற் சில அச்சில் உள்ளன.

இசைத் தமிழிலும் ஈழநாடு உழைக்காதிருக்கவில்லை. நாடோடிப் பாடல்கள் வன்னிப் பகுதியிலும் மட்டக்களப்புப் பகுதியிலும் ஒரு தொகையாய் வழங்குகின்றன. அவற்றைத் திரட்டி வெளியிடாதது வருந்தத்தக்கது. இன்றும் கோயில்களில் ஊஞ்சற்பாட்டு, கப்பற்பாட்டு, குழுத்திப்பாட்டு, தாலாட்டு, அம்மானை முதலியவை புதியதும் பழையதுமாய் வழக்கிலிருக்கின்றன.

நிற்க, இசைத்தமிழ் ஆராய்ச்சியிலும் ஈழநாடு மறக்கற்பாலதன்று. பழந்தமிழர் இசைக்கலையை நுணுகி ஆராய்ந்த பெருமையும் வழக்கற்று மறந்து போன தமிழ் மக்களின் யாழ் எத்தகைய எவ்வுருவின என்று காட்டிய சிறப்பும் ஈழ நாட்டுப் பெரியார் ஒருவருக்கே உரியது. விபுலானந்த அடிகளையே இங்கு குறித்துள்ளோம். தமிழ் நாட்டின் ஏனைய பாகங்களிலே தமிழிசையைப் பழைய முறைப்படி கேட்பது அரிது. காதில் விழுவதெல்லாம் பிற நாட்டுக் கலப்பிசை. ஆனால், இன்னும் மட்டக்களப்புப் பகுதியில் ஆடப்படும் கூத்துக்களிலோ அல்லது ஏருழவர் வாயிலோ அல்லது அரிவி வெட்டும் அரியவையர் ஆடவரிடத்திலோ அல்லது நெற்குத்துவனிதையர் நாவிலோ இன்றும் கேட்பது சரியான தமிழிசை, அவ்விசை ஒலியின் நடுவில் பிறந்ததன் காரணத்தினாலேயோ அடிகள் தமிழிசைக் கலை ஆராய்ச்சியிலீடுபட்டது?

# நாட்டுக் கூத்து

பண்டைக் காலத்திலிருந்தே யாழ்ப்பாணப் பகுதியில் நாடகக்கலை மிகுந்த உயர் நிலையிலிருந்து வந்தது. இற்றை நாட்களில் நாடகத்தை நாட்டுக்கூத்து என்றும் ''இறாமா'' என்றும் இருகூறாக நாட்டு மக்கள் பிரிப்பர். நாட்டுக் கூத்துத் தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்தது. ''இறாமா'' என்பது ஐரோப்பிய நாடக முறையைப் பின்பற்றி எழுந்த கூத்து. இறாமா என்னும் சொல் ''டிறாமா'' (Drama) என்னும் ஆங்கிலச் சொல்லின் திரிபாகும். ''நாட்டுக் கூத்து'' என்பதை வெறுமனே ''கூத்து'' என்றும் அழைப்பர்.

நாட்டுக்கூத்து இருவகைப்படும். ஒன்று நாடகம், மற்றது விலாசம் 'நாட்டுக் கூத்தே முதன் முதல் நாட்டில் இருந்து வந்தது. சோழப் பெருமன்னர் காலமாகிய பத்து, பதினொரு பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிலே தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலே நாடகங்கள் நடித்தனர் என்று கல்வெட்டு மூலம் அறிகின்றோம். ஆனால் விலாசமென்பது விசயநகர மன்னர் தமிழ் நாட்டில் ஆதிக்கத்தோடு இருந்த காலத்தில் எழுந்திருக்க வேண்டும். தஞ்சாவூரிலிருந்து பதினேழாம் நூற்றாண்டில் அரசு புரிந்த நாயக்க மன்னர் காலத்தில் 'விலாச நாடகம்' என்னும் கூத்துக்களைப் பற்றிக் கேள்விப்படுகின்றோம். உதாரணமாக இரகுநாத நாயக்கர் அரசு நடத்திய காலத்தில் யஞ்ஞ நாராயண தீட்சிதர் என்பார் 'இரகுநாத விலாச நாடகம்' என்னும் நாடக நூலை

www.padippakam.com



இயற்றினர் என்று அறியக் கிடக்கின்றது. இவ்வாறு எழுந்த விலாச நாடகம்' என்னும் பிரபந்தங்கள் பிற்காலத்தில் விலாசமாக மாறியது. ஆகையால் விலாசங்கள் பதினேழாம் நூற்றாண்டுக்குப் பின்னரே எழுந்திருக்க வேண்டும்.

நிற்க, இராம நாடகம், குசலவ நாடகம், வீரகுமாரன் நாடகம், வள்ளியம்மன் நாடகம், சிறுத்தொண்டர் நாடகம், அல்லி நாடகம், சந்தியோகுமையர் நாடகம் முதலியன நாடகத்துக்கு எடுத்துக்காட்டுகள். கிட்டின விலாசம், அரிச்சந்திர விலாசம், மார்க்கண்ட விலாசம் முதலியன விலாசங்கள். நாடகங்கள் முழுக்கத் தமிழ்ச்சார்பாய் அமைக்கப்பட்டன. விலாசங்களில் ஒரு சிறிது வடநாட்டுச் சார்பு கலந்திருக்கும். ஆனால் இவை இரண்டின் வேறுபாட்டையும் இப்பொழுது இலகுவில் அறிந்துகொள்ள முடியாது.

மற்றும் இந்நாட்டுக் கூத்தை வேறுமொருவகையாகவும் பிரிப்பர். தென்மோடி, வடமோடி என. தென்மோடிக் கூத்துக்களில் தமிழ் நாட்டின் பழைய இசை முறைப்படியே பாட்டுக்கள் அமைந்திருக்கும். ஆனால் வடமோடியில் தமிழ் நாட்டுக்கு வெளியேயிருந்து வந்த இசைமுறைகளும் கலக்கும். அன்றியும் பாட்டுடனே ஆடும் கூத்து முறையும் இப்படியே. தென்மோடியில் முழுவதும் தமிழ்க் கூத்து வரும். வடமோடியில் ஒரு சிறிது ஆரியக் கூத்தும் கலந்திருக்கும்.

தமிழ்நாட்டு ஏனைய பாகங்களில் நிலவி வந்ததுபோல யாழ்ப்பாணத்திலும் முதன் முதல் தென்மோடியே நிலவி வந்தது. ஒரு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தென்மோடிக் கூத்தே ஆடப்பட்டு வந்தது. ஆனால், தமிழ் நாட்டில் வடநாட்டு இசைப் பாணிகளும் கூத்து முறைகளும் வந்து சேர, மெல்ல மெல்ல யாழ்ப்பாணத்தில் நடக்கும் கூத்து முறையும் மாறியது. வடமோடிக் கூத்தும் வந்து சேர்ந்தது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்னே இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒருவகைத் தடையுமின்றி மக்கள் வந்து போகக்கூடிய ஏதுக்கள் இருந்தமையால் தென்னிந்தியாவினின்று யாழ்ப்பாணத்துக்கு முறைக்கு முறை

படிப்பகம்

www.padippakam.com



வந்த நாடகக் குழுவினரால் வடமோடிக் கூத்து இங்கே கொண்டு வரப்பட்டது. அதனால் வடமோடி யாழ்ப்பாணத் திலும் பரவியது.

இக்கூத்துக்களை ஆடப்பழக்கும் ஆசிரியரை அண்ணாவி மார் என்றழைப்பர். ஓர் ஊரிலுள்ள மக்களில் இளைஞர் பலர் ஒன்றுகூடி அண்ணாவி ஒருவரை நியமித்து அவரிடத்து ஒரு நாடகத்தை ஆடவும், அதற்கு ஆகிய பாட்டுக்களைப் பாட வும் கற்றுக் கொள்ளுவர். பல மாதங்களாகப் பழகி வருவர். இவ்வாறு பழகி அரங்கேற்றக் கூடிய பருவம் வந்ததும் ஒரு கோயிலுக்கு அருகிலுள்ள வெளிப்புறத்து ஒரு கொட்டகை அமைத்து அதிற் களரி கட்டுவர். கொட்டகை வட்டமாக அமைந்திருக்கும். அதற்கு வெள்ளை கட்டி அழகுறச் செய் வர். அதன் கப்புகளுக்கிடையில் வாழைக்குற்றிகள் நட்டு, அவற்றில் தேங்காய்ப் பாதிகளை வைத்து அவற்றுள் பழஞ் சீலை செம்ப எண்ணெய் ஊற்றி விளக்கு எரிப்பர். இவ் வெளிச்சத்திலேயே கூத்து நடைபெறும். ஆதியிலே இக் கொட்டகைகள் நாலு புறமுந் திறந்திருக்கும். கூத்தாடு வோர் எல்லாப் புறத்தும் வளைந்து ஆடிவருவர். கூத்துப் பார்க்க வந்த மக்களும் கொட்டகையைச் சுற்றி எல்லாப் பக்கமும் இருந்து பார்ப்பர். இவ்வாறான கொட்டகை அமைப்பு இன்னும் மட்டக்களப்பு பகுதியில் இருந்து வருகின் றது. யாழ்ப்பாணத்தில் ஒரு பக்கம் அடைத்து மூன்று பக்கம் மட்டும் திறந்த கொட்டகைகளையே காணலாம்.

அன்றியும், இந்நாட்களில் வெளிச்சத்திற்குப் பழைய முறைப்படி இரண்டொரு எண்ணெய் விளக்குகளை ஏற்றி விட்டு (நிலக்கரி) வளி விளக்குகளையே பயன்படுத்துவர். ஆனால், முற்காலத்திலே வளி விளக்குகள் இந்நாட்டுக்கு வருவதற்கு முன்பு, கூத்துப் பார்க்கப் போகும் மக்கள் ஒவ்வொருவரும் தம் தகுதிக்கு இயன்றவாறு கலசங்களில் எண்ணெய் எடுத்துச் செல்வர். கூத்து ஆடும் இடத்தை அடைந்ததும், கொட்டகையைச் சுற்றி எரியும் விளக்கு

www.padippakam.com



இந்நாட்டுக் கூத்துக்கள் தமிழ் நாட்டியக் கலைக்கு ஓர் அருங்களஞ்சியம். தமிழ் நாட்டிலே பண்டு தொட்டு பொது மக்களுக்குள் இருந்து வந்த கூத்து முறைகளை இவற்றுள்ளே பார்த்து அனுபவிக்கலாம். அரசன் களரியிலே தோற்ற மளிக்குப்போது ஒரு வகையான கூத்தையாடி வருவான். அது வீரச்சுவை ததும்பி மிளிரும். அரசி பெண்களுக்கு இயல் பான மென்மை பொதிந்து கூத்துக்களை ஆடுவள். அவை மிகச் சாந்தமாகவும் கண்ணுக்கும் கருத்துக்கும் மிக இன்ப மாகவும் இருக்கும். போர் வீரர் கூத்து மிகுந்த உக்கிரமுள்ள தாய் வெகுளிச் சுவையூட்டி மக்கள் உள்ளத்தை எழுப்பும் வகையாய் அமைந்துள்ளது. போர் செய்யும் போது ஆடும் கூத்தும் அத்தகையதே. அன்றியும், பொது மக்களிடையே வழங்கிவரும் பொது மக்களாடல்களையும் இந்நாடகங்களிற் காணலாம். குறவன் ஒருவகைக் கூத்தாடுவன். குறத்தி அவ்வகையான கூத்தையே பெண் தன்மை தோன்ற ஆடுவள். பணியாளர் முதலியோர் வேறுவகை ஆடல் ஆடுவர். இதைவிடக் கதையின் போக்குக்குத் தகுந்தவாறு பலப்பல சுவைகளைப் பார்ப்போர் மனதில் எழுப்பும் வகையாகவும் இக் கூத்துக்கள் அமைந்துள்ளன.

இக்கூத்துக்களிலே பாடும் இசையும் பண்டைக்காலந் தொட்டுத் தமிழ் நாட்டிலே வழிவழிவாய் வந்தவை. அந்த நாடகங்களில் இவ்விசைக்கிணங்கவே கதைக்கேற்றவாறு பாட்டுக்களை அமைப்பர். பாட்டுக்கள் புதிதாயிருந்தாலும் இசைப் போக்கு பழையது. கருனாடக சங்கீதம் தென்னாட்டில் உண்டாவதற்கு முன்னர் வழங்கி வந்த இசையே இந்நாடகங்களில் வரும். இசையிற் பெரும்பாலானவைஎன்று கூறுதல் பிழையாகாது. பதினேழாம் நூற்றாண்டு முதற் பகுதியில் தஞ்சாவூரிலிருந்து அரசாண்ட இரகுநாத நாயக்கர் மந்திரியாகிய கோவிந்த தீட்சிதரே கருநாடக சங்கீதத்தை முதலிலே தொடக்கியவர். அக்காலகதிலே வெங்கடேசுவர தீட்சிதர் என்பார் எழுதிய 'சதுர் தண்டிப்பிரகாசிகை' என்னும் நூலும் வேங்கடமகி என்பார் எழுதிய 'மேளகர்த்தா'

படிப்பகம்

www.padippakam.com



என்னும் நூலுமே கருநாடக சங்கீதத்துக்கு அடிப்படையான நூல்கள். அந்த நாட்களிலிருந்தே கருநாடக சங்கீதம் தென்னாட்டில் வாழ்ந்து வருகின்றது. ஆனால், தமிழ் நாட்டு நாடகங்களில் வழங்கி வரும் இசைப் பாணிகளிற் பெரும் பாலான இக்காலத்துக்கு முன்னிருந்த இசையமைதியைக் கொண்டிருப்பன. ஏனெனில் கருநாடக சங்கீதம் ஒருவருக்கு வந்து அமையாது. ஆனால் நாட்டுக் கூத்துகளிற் பாடும் இசைகள் வேறு வகையானவை. பாட மிக இலகுவாய் இருக்கும். கருநாடக சங்கீதத்தில் அமைந்த இசைகள்போல வேலைப்பாடுகள் கிடையா. வர்ணமெட்டை அறிந்தாலே ஒரு குறித்த கீர்த்தனத்தையும் இதன் இராகத்தையும் பாடி விடலாம். அன்றியும். தென்பாங்கு (தெம்மாங்கு) என்று ஓர் இசை, நாட்டுக் கூத்திற் பெரிதும் பயன்படுத்தப்படும். இது இந்நாட்டுப் பொது மக்களுக்குள் பழங்காலந் தொட்டு வந்த இசை, இராக இலட்சண விதிகளுக்கு அமையாதது. இந் நாட்டுக்கூத்து இசைகளில் இசை வல்லுநர் யாரும் ஆராய்ச்சி செய்தால் பழந்தமிழ் நாட்டு இசை முறையை ஒருவாறு கண்டு பிடிக்கலாம்.

ஒவ்வொரு நாட்டிலும் நாட்டுக் கூத்துக்களும், நாட்டுப் பாடல்களும் அந்த அந்த நாட்டுப் பொது மக்களுக்குள் இருந்து வருகின்றன. இவை இரண்டும் நாட்டு மக்களின் உள்ளத்திலே காலத்துக்குக் காலம் நின்றெழும் வற்றாத ஊற்றுக் கேணிகள். அவரடையும் இன்ப துன்பங்களைக் காட்டும் கண்ணாடிகள். இவ்வுண்மையை அறிந்து ஒவ் வொரு நாட்டிலும் இவற்றைக் கவனமாய்ப் பேணிக் காத்து வருகின்றனர்.

மேலை நாடுகளில் ஆண்டுதோறும் பெருஞ்செலவிட்டு ஆடை அணிகள் அமைத்து அரங்குகளில் அழகாக நடத்தப் படும் ஒப்பெறா (opera) எனப் பெரிய கூத்துக்கள்போன்ற வையே எமது நாட்டுக் கூத்துக்களும். அவ்வகையான அருஞ் செல்வம் எமது நாட்டு மக்களுக்கிடையே இன்றும் நின்று

www.padippakam.com



நிலவுகின்றமை எமக்கு மிகுந்த களிப்பும் பெருமையும் அளிக்கின்றது. எமது மூதாதையரின் வாழ்க்கைக் கனவுகள் யாவும் இதிலே அமைந்திருக்கின்றன. அவர் எமக்கு அளித்துப் போன அருஞ் செல்வத்தைப் போற்றிப் பாதுகாத்தல் அவர் வழித் தோன்றல்களாகிய எமது கடன். அரசினர் அவைகளில் ஆடிவந்த பரதநாட்டியத்தை ஒருவாறு பாதுகாத்துக் கொண்டது தமிழ்நாடு. பாமர மக்களிடையே நிலவிவந்த இக்கூத்து முறைகளையும் அழியவிடாது பாதுகாத்து அதனைப் பொன்னேபோற் போற்றுதல் தமிழ் மக்கள் கடன்.

படிப்பகம்

www.padippakam.com

# வடபகுதித் துறைமுகங்கள்

இலங்கைத் தீவானது இந்து சமுத்திரத்தின் நடுப் பகுதியில் இருப்பதாலும், பரத கண்டத்துக்கு மிக அண்மை யில் இருப்பதாலும் ஆசியாவில் உள்ள எல்லா நாடுகளிலும் பார்க்க அது சிறத்த சுடல் வணிக நிலையமாய் விளங்கியது. இங்கு இலங்கையில் உண்டாகும் பொருட்கள் மட்டுமின்றிப் பல தேசத்துப் பொருட்களும் வந்து சேர்ந்தன. கிழக்கிலும் மேற்கிலும் உள்ள வணிகம் இங்கு வந்து அப்பொருட்களைத் தத்தம் நாடுகளுக்கு எடுத்துச் சென்றனர். இதனால் அது ஒரு பண்டமாற்று நில்யமாய் இருந்தது. எகிப்திய ஆசிரிய ரான கொஸ்மஸ் என்பார், பல நாட்டுப் பொருட்களையும் தன்னிடத்தே ஒருங்கு சேர்த்து அவற்றை வேண்டிய நாடு களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் பண்டமாற்று நிலையம் இலங்கை என்பர். பண்டைக் காலத்தில் வட இலங்கையே இந்தப் பலநாட்டு வணிக நிலையமாய் விளங்கியது. பட்டு, பீங்கான் பொருட்கள் முதலியவற்றைக் கிழக்கு ஆப்பிரிக்காக் கரையில் உள்ள துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லும் சீன தேசக் கப்பல்களும் கிழக்கிந்தியத் தீவுகளில் உண்டாகும் வாசனைப் பொருட்களை ஐரோப்பிய தேசங்களுக்கு ஏற்றிப் போகும் அராபியக் கப்பல்களும் இந்நாட்டில் உள்ள துறை முகங்களில் வந்து தங்கின. சம்புகோளம், மகாதித்தம் அல்லது மாந்தை என்னும் இரு துறைமுகங்களும் பண்டைக்

ஈ—7

www.padippakam.com



காலத்திலே மிகக் கீர்த்தி வாய்ந்தனவாக இருந்தன. கி.மு. 5-ம் நூற்றாண்டில் விசயனும் அவன் கூட்டத்தாரும் இலங்கைக்கு வருமுன்னரேயே இத்துறைமுகங்கள் செல்வமும் செழிப்பும் உற்றனவாக விளங்கின. வட இந்தியாவினின்று வணிகர், வணிகப் பொருள்கள் வாங்குவதற்காக இலங்கைக்கு கப்பல் மூலம் வந்த செய்திகளைப் புத்த சாதகக் கதைகள் கூறுகின்றன. வங்காளத்திலுள்ள தாம்ரலிப்தி என்னும் துறை முகத்திற்கும் சம்புகோளத்திற்கும் கடல் வாணிகத் தொடர்பு இருந்துவந்தது. சம்புகோளத்தினின்றே தேவநம்பிய தீசனின் தூதர்கள் அசோகச் சக்கரவர்த்தியின் அரசவைக்குப் போகும் பொழுது கப்பலேறினார்கள். இப்பட்டினத்தில் இருந்து அனுராதபுரத்திற்குச் செல்லப் பெருந்தெரு ஒன்று அக்காலத்தில் இருந்தது.

இச்சம்பு கோளப் பட்டினத்திலேயே, புத்த பகவான் இருந்து தவம் செய்து மெய்யறிவு பெற்ற அரசமரத்தின் கிளையோடு சங்கமித்தை என்பவள் பாடலிபுரத்திலிருந்து மரக்கலமூலம் வந்து இறங்கினாள். அவள் வருகையை அறிந்து எதிரேற்கும் வண்ணம் அநுராதபுரத்திலிருந்து அரசோச்சிய தேவநம்பிய தீசன் என்னும் அரசன் முன்னரேயே அங்கு சென்று பாடி போட்டிருந்தான். மகத்துவம் பொருந்திய அரச மரத்தின் கிளையை வாங்கி வைப்பதற்காகச் சமுத்திரக் கரையில் ஓர் அழகிய மண்டபம் எடுப்பித்து அதற்குச் 'சமுத்திர சாலை' என்ற பெயரையும் கொடுத்தான். சம்புகோளப் பட்டினத்திலிருந்து அநுராதபுரம் போகும் பெருந்தெரு எங்கணும் வெண்மணல் தூவி மலர் மாலைகளாலும் தோரணங்களாலும் அழகு செய்திருந்தான். வெள்ளரசுக்கிளை வந்து இறங்கியதும் அதைச் சமுத்திர சாலையில் சில நாட்கள் வைத்திருந்து பின்னர் பல ஆடம்பரங்களுடன் மார்கழி 10-ம் நாளில் தனது தேரில் ஏற்றிப் பாசீன விகாரம் என்னும் புத்த தவப்பள்ளி இருந்த இடத்தில் கொண்டு சேர்த்தான். பாசீனவிகாரம் இருந்த இடம் கந்தரோடை என்பர் இராசநாயக முதலியார். இவ்வாறு

www.padippakam.com



சங்கமித்தையால் கொண்டு வரப்பட்டு அநுராதபுரத்தில் நடப்பெற்ற வெள்ளரசுக் கிளையினின்று முதல் முதல் முளைத்தெழுந்த எட்டு இளங் கிளைகளில் ஒன்று சம்பு கோளப் பட்டினத் துறையில் நடப்பெற்றது. இத்துறை முகத்திற்கு அரைக்கட்டைத் தூரத்தில் உள்ள பறாளைக் கந்தசாமி கோயிலில் நிற்கும் அரச மரமே இக்கிளை என்று அவர் கருதுவர். அன்றி இத்துறைக்கு அண்மையில் வேறோர் அரச மரம் நின்று இன்று அழிந்துவிட்டதோ என்றும் தெரியவில்லை. தேவநம்பியதீசன் இத்துறையில் ஒரு புத்த விகாரமும் கட்டு வித்தான். அன்றியும் அவ்விடத் திற்கு அருகில் தீசமகாவிகாரம் என்னும் புத்த தவப்பள்ளியும் பாசீனவிகாரம் என்னும் வேறொரு புத்த தவப்பள்ளியும் கட்டுவித்தான். தாதுகோபம் ஒன்றும் புத்த தவப்பள்ளி ஒன்றும் இத்துறைக்கு அண்மையில் அழிந்த நிலையில் உள்ளன என்று இராசநாயக முதலியார் கூறுவர். பறாளைக் கந்தசாமி கோயிலுக்கு எதிரில் 100 அடி தூரத்தில் தீச மழுவம் என்னும் பெயருள்ள இடமொன்று உண்டு. இதுவே தீசமகாவிகாரம் இருந்த இடமாய் இருக்கலாம். பாசீன விகாரம் கந்தரோடையில் இருந்தது தேவநம்பிய தீசன் காலத்திற்குப் பின் சம்புகோளத் துறைமுகம் பெரிதும் பயன் படுத்தப்படவில்லை. அதனால் அதன் செல்வாக்குக் குறைந்தது. அத்துறைமுகம் இருந்த இடத்தை, யாழ்ப் பாணத்திலுள்ள திருவடி நிலைக்குச் சிறிது தூரத்தில் இன்றும் காணலாம். அது இருந்த இடத்தில் இன்று ஒரு பழைய பூவரசமரம் உள்ளது. அங்கு மீன்பிடிகாரரின் கட்டு மரங்களை மட்டுமே காணலாம். அவ்விடத்தை இப்பொழுது சம்பிலித்துறை என அழைப்பர். அத்துறைமுகத்தின் பின் மன்னாரில் உள்ள மகாதித்தம் அல்லது மாதோட்டத் துறை முகம் சிறப்பெய்தியது. சம்புகோளம் சிங்களத் தலை நகராகிய அநுராதபுரத்திலிருந்து மிக தூரத்திலிருந்தபடியா லும் மாதோட்டம் அதற்கு மிக அண்மையில் இருந்தபடியா லும் மாதோட்டமே அங்குள்ள அரசரால் கையாளப்பட்டது. நெடுங்காலமாக இலங்கையில் உள்ள் புத்த யாத்திரிகர்களும்

www.padippakam.com



இந்தியாவிலிருந்து வரும் புத்த யாத்திரிகர்களும் சம்புகோனப் பட்டினத்துறையில் உள்ள விகாரத்தையும் தாது கோபத்தையும் தரிசிக்காது விடுவதில்லை.

மாதோட்டம் அல்லது மாந்தை என்னும் துறைமுகம் மன்னாருக்குச் சமீபத்தில் இருந்தது. மகாவம்சம் குளவம்சம் ஆகிய பாளி நூல்களில் அது மகாதித்தம் என்று அழைக்கப் பட்டது. கிறீத்த ஆண்டுகளின் முதற்பகுதியில் தென் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் நடந்த வியாபாரத் தொடர்பு முதலிய இத்துறைமுகத்தின் ஊடாகவே நடந்தது. மிகப் பழைய காலந்தொட்டு இத்துறைமுகம் தமிழர்களால் பாவிக்கப்பட்டு வந்தது. அன்றியும் வட இலங்கை நாகர் குடியிருப்பாய் இருந்த காலத்திலுங்கூட இது பயன்படுத்தப் பட்டதாக அறியக் கிடக்கின்றது. 'வளாகஸ்ஸ' சாதகக் கதையின்படி வடமேற்கு இலங்கையில் நாகரும் யக்கரும் குடியிருந்தனர். நாக கன்னியரும் இயக்கப் பெண்களும் பிற நாடுகளில் இருந்து கப்பல் மூலம் அங்கு வரும் பிரயாணிகளை மயக்கி அவரை வசப்படுத்திப் பின் கொன்று தின்றனர். விசயனைக்குவேனி என்னும் இயக்கப் பெண் மயக்கி மண முடித்த கதை இச்செய்தியை வலியுறுத்தும்போலும். வட இலங்கை நாகர் அக்கடலினூடாகச் செல்லும் வியாபாரக் கப்பல்களைக் கொள்ளையடித்து வந்தனர் எனத் தெரிகின்றது. அந்நகரில் ஒரு இருப்புக்கோட்டை இருந்தது என்பர். 7-வது நூற்றாண்டில் இலங்கை வந்த சீன யாத்திரிகனாகிய ''குவான் சியாங்'' என்பான் தனது யாத்திரைக் குறிப்புகளில் இவ் இருப்புக் கோட்டையைப்பற்றிக் கூறி, இதனால் கடல் வாணிகம் மிகவும் பாதிக்கப்பட்டதெனவும் இறுதியில் விசயனால் அழிக்கப்பட்டதெனவும் கூறுவன். அந்தக் காலத்தில் உலோகத்தினால் கட்டிய கோட்டைகள் பல இருந்தனபோலத் தெரிகின்றது. புறநானூற்றில் வரும் மேல் வரும் அடிகளை நோக்கு.

www.padippakam.com



''செம்பு புனைந்தியற்றிய சேணெடும் புரிசை
உலரா வீகைத்துவரை''

இவ்வடிகளினின்று துவாரகையில் செம்பினால் ஆக்கப்பட்ட கோட்டை ஒன்று இருந்தது என்பது புலனாகும். சங்க இலக்கியங்களைப் புரட்டிப் பார்க்கும்போது புறநானூற்றில்,

''ஒன்னாருட்கும் கடுந்திறற்
தூங்கெயிலெறிந்த நின்னூங்கணோர் நினைப்பின்''

என்றும், சிறுபாணாற்றும்படையில்

''தூங்கெயிலெறிந்த செம்பியன்''

என்றும் அடிகள் வருகின்றன. இவை, சோழரின் முன்னோடியாகிய அரசன் அவ்வகையான உலோகக் கோட்டைகளை அழித்தாகக் கூறுகின்றன. சோழன் கரிகாற் பெருவளத்தான் முதலாம் நூற்றாண்டில் இலங்கைமேல் படையெடுத்து வந்தான் எனச் சிங்கள சரித்திர நூலாகிய இராசாவளியினின்று அறிகின்றோம். அவன் வந்தபொழுது மாந்தையில் உள்ள கோட்டையையும் அழித்திருத்தல் கூடும். விசயன் அதனால் இக்கோட்டையை அழித்தான் என்று சீன யாத்திரிகர்கள் கூறுவது பொருந்தாது. தூங்கையிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் பட்டம் இவனுக்கே முதன் முதல் வந்திருத்தல் கூடும் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கருதுவர். அதனோடு செம்பியன் என்னும் பட்டம் சோழருக்கு வழங்குகின்றது. அதனையும் சிறிது ஆராய்வாம். அக்காலத்தில் இலங்கைக்குப் பெயர் தாம்ரவர்ணி. இவ்வடமொழிச் சொல்லை செப்பு நிறம் என தமிழிலே மொழிபெயர்த்துக் கொள்ளலாம். கரிகாற் பெருவளத்தான் தாம்ரவர்ணியான இலங்கையைக் கைப்பற்றியபின்னரே அவனுக்குச் செம்பியர் என்னும் பட்டம் வந்திருத்தல் வேண்டும் எனச் சரித்திர ஆசிரியர் கூறுவர். குறுந்தொகை என்னும் சங்க நூலில் குட்டுவன் மாந்தை என்னும் தொடர் வருகின்றது. குட்டுவன் என்னும் சொல் சேரனின் பெயர்களில் ஒன்று. சேரன் செங்குட்டுவன் பெரிய கடற்படையை வைத்திருந்

www.padippakam.com



தான். அவன் காலத்தில் மாந்தைக் கரையில் வாழ்ந்துவந்த கப்பற் கொள்ளைக்காரரான நாகர் சேரநாட்டுக் கரையையும் அடைந்து அங்கும் சூறையாடி வந்திருத்தல் வேண்டும். அதனால் அவன் அவரை அடக்கும்பொருட்டு மாந்தையையும் கைப்பற்றினான்போலும். அதனாலேயே இச்சொற்றொடர் எழுந்தது. இதினின்று மாந்தை சங்ககாலத்தின் ஒரு பகுதியில் சேரனாட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது போதரும்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலே இருந்த தொலமி என்னும் கிரேக்க ஆசிரியர் இதனை 'மூடுற்று' என அழைப்பர். தமது நூலில் இதனை ஒரு வணிகத்தலம் எனக் கூறுவர்.

இம்மாந்தை நகரத்திலேயே விசயகுமாரனுக்கும் அவன் கூட்டத்தாருக்கும் மண முடித்து வைப்பதற்காகப் பாண்டிய நாட்டிலிருந்து வரவழைத்த பெண்கள் கப்பல் மூலமாக வந்து இறங்கினர் என மகாவமிசம் கூறும். மாந்தையிலுள்ள திருக்கேதீச்சரம் என்னும் சிவத்தலம் இதனை மிகப்பண்டைய பட்டினத்துறை என வலியுறுத்தும். இத்தலத்தின் தோற்றத்தையும் தொன்மையையும் எடுத்துக் கூறும் நூல்களோ சாசனமோ இப்பொழுது காணக்கூடியதாக இல்லை. மாந்தை இப்பொழுது மண்ணால் மூடப்பெற்றுள்ளது. துறைமுகம் இருந்த இடத்தில் மண்றகும்பிகள் உள்ளன. அங்கு பழைய மணிகளும் நாணயங்களும் இன்னும் கண்டெடுக்கப்படுகின்றன. இப்பட்டினம் 300 ஏக்கர் நிலமளவில் பரந்திருந்தது எனத் தெரிகின்றது. அப்படினத்தினூடே சென்ற தெரு ஒன்று இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் அகலம் 40 அடி.

உரோம நாட்டுச் சட்டி பானைகளின் துண்டுகளும் பிற நாட்டுப் பொருட்களின் துண்டுகளும் இன்னும் அங்கே பொறுக்கப்படுகின்றன. காலஞ் சென்ற திரு. எஸ். சண்முகநாதன் அவர்கள் திருக்கேதீச்சர ஆலயத்திற்கு நிலத்தைக் கிண்டி ஆராய்ந்தபொழுது பல பழங் கட்டிடங்களையும் பழங்

www.padippakam.com



கிணறுகளையும் கண்டுபிடித்ததுமல்லாமல் பல புதுப்புது விநோதப் பொருட்களையும் எடுத்தார். இப்பகுதி மிகப் பழைய நாகரிகத்தை உடையதாய் இருந்திருக்க வேண்டும்.

இலங்கையின் பழைய சரித்திரத்தில் இத்துறை மிக முக்கியமானது. இலங்கையைக் கைப்பற்ற வந்த ஒவ்வொரு தமிழ்ச்சேனையும் இத்துறையிலே வந்திறங்கியது. இப்பகுதி தமிழ்க் குடியிருப்பாய் இருந்த காரணத்தால் இச்சேனைகள் இங்குள்ளாரிடமிருந்து பல உதவியும் பெற்றன.

மாதோட்டத் துறைமுகம் தென்னிந்தியாவோடு தொடர்பு வைத்துக்கொள்ள மட்டும் பாவிக்கப்படவில்லை. தெற்கு, வட இந்தியாவோடும் தொடர்பு இருந்ததாகத் தெரிகின்றது. வட இந்தியாவினின்றும் பல யாத்திரிகர்கள் இங்கு வந்திறங்கினர். கி. பி. நாலாம் நூற்றாண்டில் கலிங்க நாட்டு அரசகுமாரன் ஒருவன் புத்தரின் தந்தாதுவை இத்துறையிலேயே கொண்டுவந்து இறக்கினான்.

படிப்பகம்

# ஈழத்து ஊர்ப் பேர்கள்

ஈழத்து ஊர்ப்பேர்களை நாம் நோக்குமிடத்து வடபகுதியானது பண்டைக் காலந்தொட்டு நாகரிகம் படைத்துச் சிறந்த பகுதியாக விளங்கியதெனத் தெரிகின்றது. இலங்கைக்குத் தமிழரோ, ஆரியரோ வருமுன்னர் அங்கு நாகர் என்போர் இருந்தனர். இவர் திராவிட குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கூட்ட மக்கள் என ஆராய்ச்சியாளர்கருதுவர். பண்டைக் காலத்திலே வடஇலங்கை நாகர் குடியிருப்பாக இருந்தது. அக்காலத்திலே புகழ்பெற்றுத் திகழ்ந்து விளங்கிய ஊர்ப் பெயர்கள் பலவற்றை இன்றும் வழக்கிற் காண்கிறோம். அது போலவே புத்த சமயம் பரவியிருந்த காலத்தில் பல ஊர்கள் சிறப்பெய்தின. அவ்வூர்ப் பெயர்கள் சிறுச்சிறு மாற்றமடைந்த உருவங்களோடு இன்றும் உள்ளன. அதன்பின்னர் பல்லவ சோழ பாண்டிய நாயக்க அரசுகள் தென்னகத்தில் சிறப்படைந்திருந்த காலங்களில் அவ்வரசுகளின் தொடர்பு காரணமாக இங்கு சில ஊர்களுக்குப் பெயர்கள் எழுந்தன. அவற்றோடு வேறு பல ஊர்களும் புகழ்பெற்று விளங்கின. அவற்றையும் மற்றும் நிலத்தின் இயற்கை அமைப்பினால் எழுந்த ஊர்ப் பெயர்களையும் ஒரு சிறிது நோக்குவாம்.

## நாகர் காலம்

பழங்காலத்தில் இலங்கையைத் தாமிரவருணி என்னும் பெயராலும் அழைத்தனர். கி.மு. நாலாம் நூற்றாண்டில்

www.padippakam.com



சந்திரகுப்த மோரியனுடைய அவைக்களத்தில் விளங்கிய கிரேக்க நாட்டுத் தூதுவனாய மெகத்தினி என்பான் தான் இந்தியாவைப் பற்றி எழுதிய நூலில் இலங்கையைத் தாப்பிர பாணம் என்று குறித்துப் போவன். அந்தக் காலத்தில் வட இலங்கை நாகதீபம் எனக் குறிப்பிடப்பட்டதுபோலத் தெரிகின்றது.

பூர்வகாலத்தில் நாகர் குடியிருப்புகள் இந்தியா எங்கணும் பரந்திருந்தன. இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் தக்கசீலம் என்னும் நகரை அடுத்துள்ள இடங்களில் நாகர் வாழ்ந்து வந்தனர். வடகிழக்குப் பகுதியில் இன்றும் வாழுகின்றனர். அவரின் கீர்த்திவாய்ந்த இருப்பிடமாகிய பாதாளம் தக்கசீலத்திற்குச் சிறிது தூரத்தில் இருந்தது. அதனை இக்காலத்தில் மூல்த்தான் என அழைப்பர். நாகர் தென்னிந்தியாவிலும் பெருந்தொகையினராக வாழ்ந்தனர். நாகபட்டினம், நாகூர், நாகர்கோயில் முதலிய ஊர்கள் இருக்கும் பகுதிகள் அவரின் பூர்வகுடியிருப்புகள் போலும். மலையாளப் பகுதி அவரின் சிறப்பு வாய்ந்த குடியிருப்பாகத் திகழ்ந்தது. அதற்குச் சான்று அங்கு வாழும் மக்களுள் ஒரு சாராரின் குலப் பெயர் நாயர் என ,அமைந்திருப்பதாகும். நாகர் என்ற சொல் நாயர் என மருவியதென்று ஆராய்ச்சியாளர் கருதுவர். அதனோடு நாகவழிபாடு இன்றும் அங்கு சிறப்புடன் விளங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலும் சில பகுதிகளில் நாகர் வாழ்ந்து வந்தனர். மகாவமிசம் என்னும் பாளி நூலினின்று, அவர் தெற்கே களனிப்பகுதியிலும் வடஇலங்கையிலும் குடியிருந்தனர் என அறிகிறோம். இவ்விரண்டு இடங்களிலும் அவர் இராச்சியம் அமைத்து வலியோடு வாழ்ந்தனர். வடஇலங்கைக்கு நாகதீபம் என்ற பேர் வழங்கியது. இதனை மகாவமிசம் மூலமாகவும் சாசனம் மூலமாகவும் அறிகின்றோம். நாகதீபம் என்பது வடஇலங்கைக்குப் பொதுப் பெயராய் இருந்தது மட்டுமன்றி; யாழ்ப்பாணக்குடா நாட்டுக்கு அடுத்துள்ள ஒரு தீவிற்கும்

www.padippakam.com



பெயராய் அமைந்திருந்தது. இதனை இப்பொழுது நயினா தீவு என அழைப்பர். நாகதீவு என்பது நயினா தீவு என மருவியது. அங்கு இப்பொழுது நாகபூஷணி அம்மன் கோயில் இருக்கின்றது. இக்கோயிலில் நாகரின் இனக்குறியான பாம்புகளுக்கு வழிபாடாற்றுகின்றனர். இதனைத்தவிர வடஇலங்கையில் நாகர்கோயில் என்ற ஊரும் இருக்கின்றது. இவ்வூரும் நாகர் குடியிருந்த காலத்தில் மிகுந்த செல்வாக்குள்ள இடமாயிருந்திருக்கலாம். கோயில் என்பது அரசன் இல்லம் என்னும் பொருள்படும். ஆகையால், நாகர்கோயில் என்னும் சொற்றொடர் நாக அரசனின் இல்லம் என்னும் பொருளைக் குறிக்கும். இவ்வூர் நாகதீபத்தின் அரசன் வாழ்ந்த தலை நகராய் இருந்ததுபோலும். இவ்விடப்பகுதி பண்டைக் காலத்தில் மிகச் சிறப்பு வாய்ந்ததாய் இருந்தது என்பதற்கு கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வசபன் என்பான் கொடுத்த பொன்னேட்டுச் சாசனம் சான்று பகரும். அதனோடு இப்பகுதியிலேயே யாழ்ப்பாணத்தின் பிற்காலத் தலைநகரான சிங்கைநகரும் இருந்ததென இராசநாயக முதலியார் கருதுவர். வடஇலங்கையிலுள்ள நாகபொக்கணை என்னும் ஊர்ப்பெயரும் இங்கு நோக்கற்பாலது. பொக்கணை என்பது குளத்தைக் குறிக்கும் சொல்.

## பௌத்த சமய காலம்

மகாவமிசத்திலே கூறியபடி விசயனும் அவன் தோழர்களும் இலங்கைக்கு வந்தபொழுது அருவியாறு கடலிற்பாயும் இடத்திற்குத் தெற்கேயிருந்த தம்பபண்ணி என்னுந் துறையிலே இறங்கினர். அவன் தோழர்கள் நாட்டிலே பலப்பல இடங்களிற் சென்று குடியேறினர். உறுவேல என்ற ஊரிலே அவருள் ஒருவன் குடியேறினான். உறுவேல என்னும் ஊர் இப்பொழுது மன்னார்ப் பகுதியிலுள்ள மறிச்சுக்கட்டி ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com



அவன் தோழர்கள் விசயனை இலங்கைக்கு அரசனாக்க விரும்பியபொழுது அவனுக்கு பட்டத்துத்தேவி வேண்டுமென எண்ணிப் பாண்டிய மன்னனுக்குத் தூது அனுப்பி மதுரையி லிருந்து அரசகுமாரி ஒருத்தியை வரவழைத்தனர். அவளும் அவள் பரிவாரமும் மகாதித்தம் அல்லது மாதோட்டம் என் னும் மன்னாருக்கடுத்துள்ள துறையில்வந்து இறங்கினர் என மகாவமிசம் கூறும்.

மாதோட்டம் பண்டைக் காலந்தொட்டுக் கீர்த்தி வாய்ந்த இடமாக இருந்தது. இப்பொழுது இதனை மாந்தை அல்லது மாதோட்டம் என அழைப்பர். தமிழ்த்தொகை நூல் களிலும் மாந்தை என்னும் இடத்தின் பெயர் வருகின்றது. குறுந்தொகையில் ஓரிடத்தில்,

''முனாஅ தியானை யின்குருகின் கானலாம்
பெருந்தோட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉம்
குட்டுவன் மாந்தை யன்ன''

என்னும் அடிகள் வருகின்றன.

இங்கு குட்டுவன் மாந்தை என்றிருப்பதால் மாந்தை ஒரு காலத்தில் குட்டுவனின் ஆணைக்குள் இருந்திருத்தல் கூடும். அதனோடு இங்கு காணப்படும் பெருந்தோட்டம் என்னும் சொற்றொடர் மாதொட என்னும் பாளிச் சொல்லின் திரிபு போலும். சங்கதத்தில் மகாதீர்த்த என்னும் சொல் பாளி மொழியில் மகாதித்த என வந்தது. அன்றியும், தீர்த்த என்னும் சங்கதச் சொல் துத்த எனத் திரிந்து பாகத்தில் தொட என மாறியது. அதனால்; இத்துறையைப் பண்டைய நூல்கள் மகாதித்தம் எனவும், மாதெட்ட எனவும் வழங்கின. மாதொட்ட என்பது மாதோட்டம் எனவும் பெருந்தோட்டம் எனவும் வந்தது. இச்சொற்றொடரின் பொருள் பெருந்துறை என்பதே.

அசோகச் சக்கரவர்த்தி இந்தியாவில் இருந்து அரசு புரிந்த காலத்தில் இலங்கையில் அநுராதபுரியிலிருந்து அர

www.padippakam.com



சாண்டவன் தேவனம்பிய தீசன் என்பவன் ஆவன். அசோக மன்னன் அவனுக்குப் புத்தகாயாவிலுள்ள புனித வெள்ளரசுக் கிளையொன்றை சங்கமித்தை என்னும் தவத்திமூலம் அனுப்பினான். அவளும், அவளைச் சேர்ந்தோரும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் வடகரையிலுள்ள சம்புகோளமென்னும் துறையில் வந்திறங்கினர். இதனை இப்பொழுது சம்பிலித் துறையென வழங்குவர். சம்புத்துறை எனவும் இதற்கு மறு பெயருண்டு.

வடஇலங்கையிலுள்ள சில ஊர்ப்பெயர்கள் புத்தசாதகக் கதைகளிலும் காணப்படுகின்றன. அபித்தசாதகம் என்பதில் காரைதீபம் என்றொரு தீவு குறிக்கப்படுகின்றது. இது எமது காரைதீவைக் குறித்ததுபோலும். அங்கு அகித்தனென்னும் பார்ப்பன முனிவனொருவன் தவத்திற்குத் தகுந்த தனியிடத் தேடி வாரணவாசியினின்றும் காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சென்று அங்கிருந்து வான்வழியாகப் பறந்து காரைதீவிற்கு வந்தான். அங்கொரு தவக்குடிலமைத்து அதிலிருந்து தவஞ் செய்தான். அவன் காரைச்செடியின் இலைகளை உறைப்பு முப்புமின்றி அவித்து உண்டு உயிர் வாழ்ந்தான். அவன் அவ்வாறு காரை இலைக்ளைப் புசித்து உயிர் வாழ்ந்ததினால் அவ்வூர் காரைதீவு என்று பெயர் பெற்றதென சாதகக்கதை கூறும். காவிரிப்பூம்பட்டினம் கி.பி. இரண்டாவது நூற்றாண்டிற்குப் பின் அழிந்தொழிந்தது. ஆனால், இக்கதையில் இதன் பெயர் காரை தீவுடன் இணைந்து அருகின்றமையால் இப்பெயர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னரேயே பிரபலமாய் இருந்திருத்தல் வேண்டும். இப்பழம் பெயரை இப்பொழுது காரை நகரென மாற்றிவிட்டனர்.

இலங்கை மன்னன் துட்டகைமுனுவின் மைந்தன் சாலீகும்ரையன் என்பவன் சண்டாளக் கன்னி ஒருத்தியைக் காதலித்து அரச பட்டத்தையும் நீத்து அவளை மணஞ்செய்து கொண்ட கதையை மகாவமிசம் கூறும் பகுதியில் அதன் உரைகாரர் மேல்வருமாறு விரிவுரை சொல்லுவர்.

www.padippakam.com



சாலி குமரையனும் அவன் காதலித்த சண்டாளக் கன்னி அழகுடைக் குமரி அசோக மாலையும் முன்னோர் பிறவியில் இருந்தனர். அப்பொழுது ஒருநாள் தாங்கள் சமைத்த பன்றிக் கறியைப் பகிர்ந்து எட்டுத் தேரர்களுக்கு உண்ணக் கொடுத்தாலோ எனத் தமக்குள் எண்ணி அங்கலாய்த்தனர். அப்பொழுது பியங்குதீவத்தில் வசித்த தருமதின்னர் என்னுந்தேரர் அதனைத் தமது ஞானதிருட்டியால் உணர்ந்தார். உடனே அவர் அவர்கள் இருவரும் வாழ்ந்த கிராமத்திற்குத்தேரர் சிலருடன் சென்று அவ்வுணவை அருந்தியருளினார்.

பியங்குதீவம் தூய்மையிற் சிறந்த தேரர்கள் வாழ்ந்த இடமென மகாவமிசத்திலிருந்து அறியக் கிடக்கின்றது. இதனைப்பற்றி அது கூறும் இன்னொரு செய்தியும் உருசிகரமானது. துட்டகைமுனு போரிலே ஏல்லாளனைக் கொன்ற பின் தன் மாளிகையிற் சென்று அங்கு போரில் நடந்த கொடுமைகள் யாவற்றையும் எண்ணியெண்ணி மனங்கவன்றான். இதனை பியங்குத்தீவத் தவப்பள்ளியிலிருந்த தேரர் எண்மர் தமது ஞானதிருட்டியினால் அறிந்து அரசனிடம் வான்வழியாய்ப் பறந்து சென்று, கொலை பாவமெனினும் அஞ்ஞானிகளைக் கொல்வது பாவமாகாது என்று அவனைத் தேற்றி ஆறுதலளித்தனர்.

பியங்குதீவம் என இங்கு கூறியது புங்குடுதீவு. நம்பொத்த என்ற சிங்கள நிகண்டில் இதனை புவங்குதீவு எனக் கூறப்பட்டிருக்கின்றது. புங்குடுதீவு என்னும் சொல்லே காலகதியில் பியங்குதீவம் என மாறியிருக்கலாம். அதனைப் புங்கு உடுதீவு எனப் பிரித்து, புங்கமரம் நிறைந்த தீவு எனப் பொருள் கூறலாம். புங்கமரம் நெய்தல் நிலத்துக் கருப் பொருள்களுள் ஒன்று.

இனி ஊராத்துறை என்ற பெயரினை ஆராய்வாம். இதற்குச் சிங்களநூல்கள் கூறும் வரலாறு கவர்ச்சிகரமானது. விசயனுடைய அந்திய காலத்தில் இறக்குந் தறுவாயில்

www.padippakam.com



இருக்கும்பொழுது தான் முயன்று எழுப்பிய இலங்கை இராச்சியத்துக்குத் தனக்குப் பின் பட்டத்துக்கு வர அரசகுமாரன் ஒருவனுமில்லையே எனக் கவலை கொண்டான். எனினும், தனது பிறப்பிடமாகியவடஇந்தியாவிலுள்ள சிங்கபுரத்திற்குச் செய்தி அனுப்பித் தன் மருமகன் பாண்டுவாசனை அழைப்பித்தான். அவன் வந்து விசிதபுரத்திலிருந்து அரசாண்டான். விசயன் குவேனியை ஏமாற்றிக் கைவிட்ட துரோகம் அவனை வந்து கருமநோயாகச் சூழ்ந்தது. அப்பொழுது தென்னிந்தியாவில் அரசாண்ட மலைராசன் என்பானைஇந்திரன் தந்திரமாக அழைப்பித்து அவன் நோயைத் தீர்த்தான். அது எவ்வாறெனின் மலைராசனது இராச்சியத்தில் இரகுவைப் பன்றியாக்கிவிட அது அவன் இராச்சியத்திலுள்ள குடிகளைத் துன்புறுத்தியது. அதனால் மலைராசன் பன்றியைக் கலைத்துச் சென்றபொழுது அது கடலூடாகச் சென்று இலங்கையை அடைந்தது. பன்றி இலங்கையிற் கரையேறிய இடம் ஊராத் தொட்ட எனப் பெயர் பெற்றது. ஊரா என்ற சொல் சிங்களத்தில் பன்றியாம். தொட்ட என்பது துறை ஆகையினால் ஊராத்தொட்ட என்பது பன்றித் துறை ஆகும். 13-ம் நூற்றாண்டில் மாகிந்தன் செயபாகு என்னும் தமிழரசர் இருவர் வடஇலங்கையைக் கைப்பற்றிப் பல இடங்களில் கோட்டை கொத்தளங்கள் அமைத்தனர். அவற்றுளொன்று சூகரதித்தம் என சூளவமிசம் கூறும். சூகரம் என்பது சங்கதம் பாளி மொழிகளில் பன்றியைக் குறிக்கும். தித்தம் என்பது துறை. ஆகையினால் ஊராத்துறை என்பதின் பாளி மொழி பெயர்ப்பே இது. காஞ்சிபுரத்தருகிலுள்ள மாமல்லபுரம் என்பதை மகாவலிபுரம் என மாற்றிப் பௌராணிகர் புராணத்தை கூறியதுபோல, ஊர்காவற்றுறை என்பது ஊராத்துறை என வழக்குமொழியில் மாறி நிற்க, அதனைப் பீடிகையாகக் கொண்டு சிங்கள நூலாசிரியர் இவ்விசித்திரமான கதையைத் திரித்தனர் போலும்.

இதுகாறும் புத்தசமயத்தோடு தொடர்புள்ள ஊர்களைப் பற்றியும் அவற்றிற்குச் சாதகக் கதைகள் மகாவமிசம் முதலியவை கூறும் வரலாற்றுத் தொடர்புகளையும் எடுத்துப்

www.padippakam.com



பேசினோம். இந்நூல்கள் கி.பி. 6-வது நூற்றாண்டுக்கு முன்னே எழுந்தவை. ஆகையினால் இந்த ஊர்கள் 6-வது நூற்றாண்டுக்கு முன்னரே கீர்த்தி வாய்ந்தவையாக இருந்தன என்பது போதரும்.

கி.பி. 5-ம் நூற்றாண்டு வரையும் தென்னிந்தியாவும் இலங்கையும் புத்த சமண சமய ஆதிக்கத்தில் இருந்து வந்தன. ஆனால் 5-ம் நூற்றாண்டளவில் வைதிக சமயங்கள் மறுமலர்ச்சி அடைகின்றன. வட இந்தியாவில் கி.பி. 3-ம் நூற்றாண்டில் எழுந்த குப்தப் பேரரசின் சமயத்தாக்கத்தி னால் இந்நிலை எழுந்தது. ஆனால் இவ்வியக்கம் கி.பி. 5-ம் நூற்றாண்டளவிலேதான் தென்னிந்தியாவை வந்தடைந்தது. அதன் காரணமாக வடஇலங்கையிலும் இச்சமய மறுமலர்ச்சி திகழ்ந்தது. சில நூற்றாண்டுகளாக மங்கிக் கிடந்த சைவ வைணவ விளக்குகள் திரும்பவும் சுடர்விட்டெரியத் தொடங் கின. பண்டை நகராகிய மாந்தையில் திருக்கேதீச்சரம் என்ற சைவத்தலம் மீண்டும் உயர்நிலை அடைந்தது. இது போலவே திருக்கோணாமலையிலுள்ள கோணேசர் கோயி லும் சிறந்த நிலையை எய்தியது. தென்னிந்தியத் தமிழகத் திலே சைவம் வைணவம் ஓங்கி வளர்ந்த காலையில் அங்குள்ள தலங்கள்மீது நாயன்மார்களும் ஆழ்வார்களும் திருப்பதிகங்கள் பாடினர். 7-வது நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்த சுவாமிகள் திருக்கோணாமலையில் எழுந்தருளி யிருக்கும் கோணேசப்பெருமானைப் பாடியுள்ளார். அது போலவே 9-வது நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கேதீச்சரத்தமர்ந்த பெரு மானை, பதிகத்திலமைத்துப் பாடினார்.

திருக்கேதீச்சரம் என்பது திருகேது ஈச்சரம் என்னும் சொற்களால் ஆயது. திரு என்பது கண்டாரால் விரும்பப் படும் தன்மை நோக்கம் என்பார் பேராசிரியர். கேது என்பது நவக்கிரகங்களுள் ஒன்று. ஈச்சரம் என்பது ஈஸ்வரம் என்ப தின் திரிபு. இதன் பொருள் ஈசன் எழுந்தருளியிருக்கும் இடம். ஆகையினால் திருக்கேதீச்சரம் என்னுஞ் சொற்

படிப்பகம்

www.padippakam.com



றொடர் கேது இறைவனைப் பூசித்த அழகுவாய்ந்த திருத்தளி என்று பொருள்படும்.

இனி, திருக்கோணாமலை என்னுஞ் சொல்லை நோக்கு வாம். இது திருகோணமலை என்ற சொற்களால் ஆனது. தக்கிண கைலாய புராணத்தின்படி இமயமலையின் மூன்று சிகரங்களுள் ஒன்று திருக்கோணாமலை ஆகும். இன்னும் சிலர் கலிங்க நாட்டிற்கும் இலங்கைக்கும் பண்டைக் காலந் தொட்டுத் தொடர்பிருந்தமையினால், அங்குள்ள கோகர்ண சுவாமி மலைக்கும் திருக்கோணமலைக்கும் தொடர்பிருக்கக் கூடும் எனக் கருதுவர். கலிங்க நாட்டிலுள்ள துறையாகிய தாமிரலித்திலியிலிருந்து மரக்கலங்கள் புறப்படும்பொழுது அங்கு அணித்தாகத் தோன்றும் கோகர்ண சுவாமியைக் கும்பிட்டுக் கொண்டே மரக்கலத்தைத் தூக்கிவிடுவர். அம்மாலுமிகளுட் சிலர் திருக்கோணாமலைக்கு வந்தபொழுது அங்குள்ள சுவாமி மலையைக் கண்டு அது கோகர்ணமலை யின் சாயலோடு விளங்கியமையால் அதனையும் கோகர்ணம் என்று அழைத்தனர். கோகர்ணமலை என்பது குறுகிக் கோணாமலை என வந்தது என்பர். இன்னும் ஒருசாரார் கோணா என்பது கொணா என்னும் பாகதச் சொல்லின் திரிபு என்பர். கொணா என்பது எருது என்னும் பொருள்படும். இதன்படி கோணாமலை என்றால் எருதுமலை என்னும் பொருளைத் தரும். இவ்வாறாகத் திருக்கோணமலையின் பெயர் வரலாறு, பலதிறப்பட்டு நிற்கின்றது. இதன் சரியான முடிபை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

## பல்லவர் காலம்

நிற்க, பல்லவராயன் கட்டு என்னும் ஓர் இடம் பூநகரியி லிருந்து 16 கல் தெற்கே வட இலங்கையின் மேற்குப் பாகத் தில் உள்ளது. இப்பொழுது இது விலங்குகள் வதியும் வாட் டின் நடுவே ஒரு குக்கிராமமாய் இருக்கின்றது. காஞ்சிபுரத் தில் இருந்து அரசாண்ட பல்லவரோடு தொடர்பு இருந்த தனை இக்கிராமத்தின் பெயர் குறிக்கின்றது. பல்லவ நரசிம்ம

படிப்பகம்

www.padippakam.com



வர்மன் காலத்தில், அநுராதபுரத்திலிருந்து அரசுரிமை இழந்து உதவிகோரிக் காஞ்சிபுரம் சென்ற மானவர்மனுக்கு உதவி செய்ய, பல்லவப் படை ஒன்று இலங்கை வந்ததெனச் சரித்திரம் கூறும். அப்படையின் ஒருபகுதி இந்த ஊரில் வந்து பாடிவீடு கட்டி இருந்ததுபோலும். அதன் காரணமாக இதனைப் பல்லவராயன்கட்டு என மக்கள் அழைத்தனர்.

பல்லவராயன்கட்டு என்பது பல்லவன் ராயன் கட்டு என்னுஞ் சொற்களால் ஆயது. ராயன் என்பது ராஜன் என்னும் சொல்லின் திரிபு. ஆகையினால், இச்சொற்றொடர் பல்லவ அரசன் பாடிவீடு கட்டி இருந்த இடம் எனப்பொருள் படும். இங்கு பல்லவ அரசன்தானே வரவில்லை. அவன் படையே வந்தது.

## சோழர் காலம் :

பல்லவ அரசு தமிழ்நாட்டிலே வலி குன்றிய பின்னர் சோழப்பேரரசு எழுந்தது. தென்னிந்தியாவிலே உயர்நிலை எய்திய அரசு ஒவ்வொன்றினது எழுச்சியும் இலங்கையையும் பாதித்தது. நாலாம் மகிந்தன் அநுராதபுரத்திலிருந்து அரசு செலுத்திய பொழுது இரண்டாம் பராந்தகச் சோழன் இலங்கைமீது படையெடுத்து ஊர்காவற்றுறையில் வந்திறங்கினான். சோழர் படைக்கும் மகிந்தன் படைக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு போர் நிகழ்ந்தது. அதிலே சோழனுடைய தளபதி இறந்தனன். அவன் இறந்த இடத்தை இப்பொழுதும் வளவர்கோன் பள்ளம் என்னும் பெயரால் அழைப்பர். இது மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்கு மேற்கே சிறிதுதூரத்தில் உள்ளது. வளவன் என்பது சோழன் பெயருள் ஒன்று. ஆகையினால் வளவர் கோன் பள்ளம் என்பது சோழ அரசன் வீழ்ந்திறந்த பள்ளம் என்னும் பொருளைத் தரும். இங்கு படைத்தளபதியாய் வந்தவன் சோழ அரசன் அல்லன். அவன் தளபதியே. அவனும் சோழ அரசகுடும்பத்தில் ஒருவனாய் இருந்திருத்தல் கூடும்.

ஈ—8

www.padippakam.com



செம்பியன் பற்று யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் கரையோரமாக உள்ள ஓரிடம். ஒரு காலத்தில் இது துறைமுகமாய் இருந்திருந்த காரணத்தினால், சோழப் படை ஒன்று வந்திறங்கிய இடமாய் இருத்தல் கூடும். அதனால் இதைச் செம்பியன் பற்று என்பர். அக்காலத்திலே வட இலங்கையினின்று பொல்லனறுவைக்குச் செல்லும் பெருந்தெரு இவ்வூருக்கு அணித்தாய் அமைந்திருந்த காரணத்தினால் பொல்லநறுவைக்குச் செல்லும்படை இறங்கியது போலும். செம்பியன் என்பது சோழன் பெயர்களுள் ஒன்று. செம்பியன் பற்று என்பது சோழனுக்கு உரிய இடம் என்று பொருள்படும்.

தொண்டைமான் ஆறு என்பதும் சோழப் பெருமன்னர் காலத்தில் எழுந்ததுபோலத் தெரிகிறது. முதலாம் குலோத்துங்கன் காலத்திலே வடஇலங்கை சோழர் கையில் இருந்தது போலும். அங்கு அவன் தளபதியாகிய கருணாகரத் தொண்டைமான் சிலகாலம் தங்கியிருந்திருக்கலாம். அப்பொழுது வெள்ளைப்பரவை கரணவாய் முதலிய இடங்களிலிருந்து உப்புச் சேர்த்துக் கப்பலில் ஏற்றுவதற்காகத் துறைக்குக் கொண்டு செல்லும் பொருட்டு ஓர் ஆற்றை வெட்டினான். அவன் வெட்டிய ஆற்றை அவன் பெயரினாலேயே தொண்டைமான் ஆறு என அழைத்தனர் என்பர் சிலர். இக் கருணாகரத் தொண்டைமானே யாழ்ப்பாணத்தில் வதிந்த காலை இணுவிலில் பிள்ளையார் கோயில் ஒன்றைக் கட்டியெழுப்பினார் என யாழ்ப்பாண வரலாற்று நூலாசிரியர் கூறுவர். இக்கோயிலை இப்பொழுது கருணாகரப்பிள்ளையார் கோயில் என அழைப்பர். இவன் இலங்கைமேற் படை நடத்தி வந்தற்குச் சான்றாக இவன் வீரத்தையும் தண்டத் திறமையையும் எடுத்துப் புகழும் கலிங்கத்துப்பரணி என்னும் நூலில் மேல்வரும் இரண்டு தாழிசைகளைக் காட்டுவர்.

1. இலங்கை யெறிந்த கருணாகரன்ற
   னிகல்வெஞ் சிலையின் வலிகேட்பீர்
   கலிங்க மெறிந்த கருணாகரன்றன்
   களப்போர் பாடத் திறமினோ.

2. ஓதஞ்சூ ழிலிங்கைப் போர்க்
   கொட்டிரட்டி வலிங்கப் போர்.

இதுகாறும் பண்டைக்காலந்தொட்டுச் சோழர் காலம் ஈறாகச் சரித்திரத் தொடர்புள்ள ஒரு சில ஊர்ப்பெயர்களை ஆராய்ந்தோம்.

படிப்பகம்

www.padippakam.com

# விஞ்ஞானமும் அகராதியும்

ஐரோப்பியர் தமிழ்நாட்டுக்கு வந்ததன் பயனாய்த் தமிழ் மொழிக்குப் பல துறையிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. அவர் தமிழ்நாட்டிற் காலடி வைத்தது பதினைந்தாம்நூற்றாண்டில். இதுகாறும் தமிழ் மக்கள் இலக்கியத் துறையில்மட்டும் பெரும் பாலும் தமதுமொழிக்கு வேண்டிய ஆக்க வேலையைச் செய்து வந்தனர். வானநூல், சோதிடம், வைத்தியம் முதலிய துறைகளிலும் சங்கீதத்தில் இருந்த நூல்களைப் பின்பற்றி ஓர் அளவுக்கு நூல்கள் இருந்தன. ஆனால், மேனாட்டு முறையில் விஞ்ஞானக் கல்வி தமிழ்நாட்டில் எழுந்தது சென்ற நூற்றாண்டிலேதான். இத்துறையிலும் மேனாட்டாரின் உதவியினாலேதான் தமிழ்மொழியில் நூல்கள் ஓரளவுக்கு எழுந்தன.

முதன் முதல் தமிழ்மொழியில் விஞ்ஞானத்துறையில் நூல் எழுதப்பட்டது யாழ்ப்பாணத்திலேயே. சென்ற நூற்றாண்டு, தமிழ்மொழியின் மறுமலர்ச்சிக்கு ஒரு முக்கியமான காலம். தென்னகத்திலேயுள்ள தமிழ் மக்கள் தூங்கிக்கொண்டிருக்கத் தமிழ் மறுமலர்ச்சி ஈழத்திலிருந்தே வீறுபெற்றெழுந்தது. அதுமட்டுமன்றித் தென்னகத்திலுள்ளாரையும் தட்டி எழுப்பிற்று. இலக்கியம் சமயம் ஆகிய துறைகளில் ஆறுமுக நாவலர் தொண்டு செய்தார். பண்டைத் தமிழ் நூல்களைச் செல்லுக்கிரையாகி மாண்டு விடாது சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் அச்சுவாகனமேற்றி

படிப்பகம்

www.padippakam.com



தொடக்கத்தில் ஆங்கிலமொழி மூலமே தமது மாணவ ருக்கு மருத்துவக்கலை பயிற்றி வந்தார். சிறிது காலத்தின் பின் மாணவர் தமது மொழியில் பாடஞ் சொல்லி வந்தால் இலகுவில் பாடப்பொருளை அறிந்துகொள்வார் என எண்ணித் தமிழ்மூலம் கற்பிக்கத் தொடங்கினார். அப் பொழுதுதான் தமிழிலே மருத்துவ நூல்கள் இல்லாத குறையை அறிந்தார். இக்குறையை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அக்காலத்து மருத்துவக் கலையிலுள்ள சிறந்த நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கத் தொடங்கினார். முதன் முதல் 'கற்லர்' (Cutler) என்பவர் எழுதிய உடற் கூறும் உடல்நலமும் (Anatomy, Physiology and Hygiene.) என்னும் நூலை மொழிபெயர்த்தார். அந்த நூலை 1856-ம் ஆண்டு மொழிபெயர்த்து முடித்தார். அதை அச்சிட்டு வெளி யிடும் செலவைப் பொறுக்கும் வண்ணம் இலங்கை அரசின ரைக் கேட்டார். அதற்கு ஆங்கிலமல்லாத பிற மொழிகளில் எழுதும் நூல்களுக்குத் தாம் உதவிப்பணம் கொடுப்பது இல்லை என்று கூறி அரசாங்கம் அவர் மனுவை நிராகரித்து விட்டது. அரசினர் என்ன விடை கூறுவர் என்று இடாக் குத்தர் கிறீனுக்கு ஏற்கனவே தெரியும். ஆகையால், சென்னையிலுள்ள ஏ.எம்.சி. அச்சியந்திர சாலையில் அதை அச்சிட்டு அடுத்த ஆண்டே வெளியாக்கினார்.

கிறீன் இடாக்குத்தர் மட்டும் இந்நூல்களை மொழி பெயர்க்கும் வேலையில் ஈடுபட்டாரென எண்ணுதல் கூடாது. தனக்குக் கீழே கற்ற மாணவரையும் இவ்வேலையைச் செய்யு மாறு தூண்டினார். இம்மொழிபெயர்ப்பு வேலையை அவரோடு நடத்திய மாணவருள் சாப்மன் (Chapman) இடான்போர்த்து (Danforth) எவர்ட்சு (Evarts) என்போர் தலைசிறந்தவராவர். தமது மாணவரின் மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவருமுன் அவரே அவை யாவற்றையும் பார்த்து வேண்டிய திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்து கொடுப்பர்.

படிப்பகம்

www.padippakam.com



முன்னே காட்டிய நூல்களைவிட மேல்வரும் மருத்துவ நூல்களும் கிறீன் இடாக்குத்தராலும் அவர் மாணவராலும் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டன.

இரண வைத்தியம் : (Druitt's Surgery) இடான் போர்த்து மொழிபெயர்த்துக் கிறீன் இடாக்குத்தர் பதிப்பித்தது. வெளியீடு—அமெரிக்க அச்சியந்திர சாலை, மானிப்பாய் 1867, பக்கம் 504

அங்காதிபாதம் : (Gray's Anatomy) சாப்மன் மொழி பெயர்த்தது. 1872. பக்கம் 888.

வைத்தியாகரம் : (Hooper's Physicians Vedemecum) வில்லியம் போல் மொழி பெயர்த்தது. கிறீன் இடாக் குத்தர் பதிப்பித்தது. அச்சிட்டது இலண்டன் மிசன் அச்சியந்திரசாலை, நாகர்கோயில் 1872 பக்கம் 838.

கெமிஸ்தம் : (Well's Chemistry) எஸ் சாமிநாதன், டி. டபிள்யூ. சாப்மன் என்போர் உதவியுடன் கிறீன் இடாக்குத்தர் மொழிபெயர்த்தது. நாகர்கோயில் இலண்டன் மிசன் அச்சியந்திரசாலையில் அச்சிடப் பட்டது. 1875. பக்கப் 576.

மனுஷசுகரணம் : (Dalton's Physiology) 1883. பக்கம் 550.

இத்துபதார்த்த சாரம் : (Warring's Pharmacopoela of India) டபிள்யூ. டி. சாப்மன் மொழிபெயர்த்துக் கிறீன் இடாக்குத்தர் பதிப்பித்தது மானிப்பாய் இலங்கை அமெரிக்கன் அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்டது. 1884. பக்கம் 574.

இச்செமினரியிற் கற்றுத் தேறிய கறோல் விஸ்வநாத பிள்ளையென்பார் வீசகணிதம் (Algebra) என்னும் நூலை 1855-ம் ஆண்டு எழுதி வெளியிட்டனர். அன்றியும் வேறு பலரும் நிலக்கணக்கியல், அளவைநூல் முதலிய துறைகளில்

www.padippakam.com



நூல்களியற்றி வெளியிட்டனர். ஞானச் சகோதரர் பிலிப்பு 1905-ம் ஆண்டு அளவை நூலொன்றை வெளியிட்டனர். சின்னத்தம்பி என்பார் நில அளவைச் சாத்திரத்தைப் பழைய இலக்கண முறைப்படி சூத்திரங்களால் யாத்து ஒரு நூலை வெளியிட்டனர்.

தமிழ் ஆங்கிலம் ஆகியவற்றோடு பல பாடங்களையும் செமினரியிற் படிப்பித்தனர். பூதநூல், வேதிநூல் முதலிய அறிவியற்றுறையோடு தத்துவநூலையும் திறம்படப் போதித்து வந்தனர். அதனால், இத்துறைகளில் வல்ல கற்றறிந்தோர் பலர் இக் கலைப்பீடத்தினின்று வெளியேறினர். இங்கு படித்துத் தேறியவருள் நெவின்சு சிதம்பரப் பிள்ளையும் ஒருவர். கணித நூலில் மிக வல்லுநர். தருக்கம் நன்கு பயின்றவர். இத்துறையில் அவருக்கு இந்திய தருக்க முறையும், ஐரோப்பிய தருக்க முறையும் தெரியும். அதனால், நியா இலக்கணம் என்னும் நூலை இயற்றினார். இது 1850-ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

அமெரிக்க மிசனரிமார் யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு இதனோடு நிற்கவில்லை. கிறித்தவ சமயத்தைப் பரப்ப இங்கு வந்தாராகையின் இந் நாட்டு மக்கள் பேசும் மொழியாகிய தமிழை நன்கு கற்றாலன்றி மக்களோடு பேசவும் சமயப் பிரசாரம் செய்யவும் முடியாதெனக் கண்டனர். தமிழ் மக்களின் பழைய முறையில் நிகண்டு நெட்டுருப்பண்ணித் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ளுதல் இயன்றதல்லவென எண்ணினர். ஐரோப்பிய முறையில் தமிழ்மொழிக்கு அகராதி ஒன்றனை ஆக்கினாற் பெரும் பயனைத்தரும் என நினைத்தனர். எனவே, 1833-ம் ஆண்டு தமிழ் ஆங்கில அகராதி ஒன்றனையும் ஆக்கத் திட்டமிட்டனர். இத்திட்டத்தின்படி வண ஜீ. நைற்று என்பார் கபிரியேல் திசேரா, வண, பீற்றர் பெச்வல் ஆகியோருடைய உதவியோடு இந்நூல்களுக்குச் சொற்கள் சேர்க்கத் தொடங்கினர். இவ்வாறிருக்க வண. நைற்று அவர்கள் 1838—ம்

www.padippakam.com



ஆண்டு காத்திராத வண்ணம் உயிர் நீத்தார். அதனால், இவ்வேலை சிலகாலம் தடைப்பட்டிருந்தது.

அதன் பின்னர் பெரிய அகராதிக்கென்ச் சேர்த்த சொற்களைக் கொண்டு பண்டிதர் சந்திரசேகரம் என்பார் உதவியுடன் ஒரு கையகராதி வண. எஸ். ஸ்போல்டிங் (Rev. Levi Spaulding) என்பவரால் வெளியிடப்பட்டது. இதனை ''யாழ்ப்பாண அகராதி'' என்றும் ''மானிப்பாய் அகராதி'' என்றும் அழைத்தனர். சொற்கள் யாவும் பழைய நிகண்டுகளைப் போலல்லாது அகர வரிசைப்படுத்தி இருந்தன. இந்நூல் 58,500 சொற்கள் கொண்டன.

இஃது இவ்வாறிருக்க ஆங்கிலத் தமிழ் அகராதியில் சொற்றொகுதி வண. சாமுவேல் கச்சிங்ஸ் (Rev. Samuel Hutchings) என்பவர் கையில் ஒப்படைக்கப்பட்டது. அவர் அதனை வரிசைப்படுத்தி நூல் ஆக்கினார். அது 1842-ம் ஆண்டு வண. எம். வின்சிங்லோவால் Rev. M. Winslow) வெளியிடப்பட்டது. அதனை வண. எல். ஸ்போல்டிங் (Rev. L. Spaulding) 1852ம் ஆண்டு புதுக்கியமைத்து வெளியிட்டார். அது இன்றும் நின்று நிலவுகிறது.

சிறிது காலத்தின்பின் அமெரிக்க மிஷன், முன்னே நைற்றின் கீழ்த் தொடங்கிய தமிழ் ஆங்கில அகராதி வேலையைத் துரிதப்படுத்தியது. அதற்குப் புதிதாகக் கச்சிங்ஸ் என்பவரையும் ஸ்போல்டிங்ஸ் என்பவரையும் அகராதிக் குழுவிற் சேர்த்தது. ஈற்றில் வண. எம். வின்சிலோ அதனை ஒழுங்காக்கி 1862-ம் ஆண்டு சென்னையில் அச்சிட்டு வெளியிட்டார். யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழ்ப் பண்டிதர்களே, அவ்வகராதியிற் காணும் சொற்கள் யாவற்றையும் தேடி எடுத்துச் சேர்த்தவர். சென்னையில் அச்சிடும்போது அக்காலத்திலிருந்த தமிழ் வித்துவான்களாய இராமானுக் கவிராயர், விசாகப் பெருமாளையர், வீராசாமிச் செட்டியார் ஆகியோரும் உதவி புரிந்தனர்.

www.padippakam.com



இப்பெரிய தமிழ் ஆங்கில அகராதி தமிழ் மொழியிலுள்ள பேச்சு வழக்கு மொழிச் சொற்களையும் செய்யுள் வழக்கு மொழிச் சொற்களையும் தன்னகத்தே அடக்கியுள்ளது. அதனோடு வானநூல், சோதிடநூல், பயில்நூல், வேதிநூல், பூதநூல், விலங்கியல் நூல், புராணம் ஆகியவற்றில் வழங்கும் சொற்களையும் கொண்டது. நூலாசிரியர், புலவர், இலக்கியங்களில்வரும் கதாபாத்திரங்கள், தேவர், ஆகியோரின் பெயர் முதலியவையும் அங்கு சேர்க்கப்பட்டுள்ளன. இதுகாறும் வெளிவந்த அகராதிகளில் வெளிவராத பல முறைகள் அங்குள்ளன. தமிழரின் சமயம் சாத்திரம் பழக்கவழக்கம் ஆகியன பற்றியும் பல செய்திகளையும் அறிந்து கொள்ளலாம். இவ்வகராதியில் 67,000 சொற்கள் அடங்கியுள்ளன. தமிழில் வழங்கும் வடசொல் யாவற்றிற்கும் உடுக்குறி போடப்பட்டிருக்கும். இதனால், வடசொல் எது தமிழ்ச்சொல் எது என்று எளிதில் அறிந்து கொள்ளலாம்.

ஆகவே, கிறிஸ்து சமயத்தைப் பரப்புதற்கு ஒரு கருவி நூலாக எழுந்தபோதும் ஈற்றில் யாவருக்கும் பயன்படும் ஒரு பெருநூலாக அது முடிந்தது.

மானிப்பாய் அகராதியின் பின் தமிழ் அகராதி ஒன்றும் தமிழ் நாட்டில் வெளிவரவில்லை. பல குறைகள் இருந்த போதிலும் இவ்வகராதி சென்னையில் பலமுறை அச்சுவாகன மேறிற்று. ஏனெனில், ஆங்கிலம் அறியாத தமிழருக்கு அதுவே ஒரேயொரு அகராதியாய் இருந்தது. ஒவ்வொரு பதிப்பிலும் இதற்குச் சொற்களைச் சேர்த்துப் பெருக்கினர். சொற்களைக் கூட்டக் கூட்டக் கடைசியில் இருந்த அளவினின்றும் அது மிகப் பெரியதாய் வளர்ந்தது. அதனால் ஈற்றில் ''யாழ்ப்பாண அகராதி'' அல்லது ''மானிப்பாய் அகராதி'' என்று அதன் பெயர் மாறிப் ''பேரகராதி'' அல்லது ''விரிவகராதி'' என்று அழைக்கப்பட்டது. ஒவ்வொரு பதிப்பிலும் பிழைகள் மலிந்து மலிந்து ஏறின.

இத்தறுவாயில் இவ்வகராதியை அடிப்படையாகக் கொண்டு நா. கதிரைவேற் பிள்ளை என்பவர் தமது

www.padippakam.com



ஆராய்ச்சியினால் ஓர் அகராதியைத் தொடங்கினார். அவரும் வட்டுக்கோட்டைச் செமினிரியிற் கற்ற மாணாக்கருள் ஒருவர். சங்கத மொழியினின்று எடுத்துத் தமிழில் வழங்கிய சொற்களையெல்லாம் இதில் சேர்த்துள்ளார். அன்றியும் சங்கத மொழி நிகண்டுகளிலுள்ள, தமிழ்மொழியில் வழங்காத, சொற்களையும் எடுத்துள்ளார். மிகச் சிறந்த தமிழ் அகராதி எதுவும் தற்பவமாகவோ, தற்சமமாகவோ சங்கத மொழியிலுள்ள சொற்களை உள்ளடக்க வேண்டும் என்பதே அவரின் நோக்கம். இக்குறைபாட்டைத் தவிர அவர் அகராதி ஏனைய வகையில் மிகச்சிறந்து விளங்குமாறு மருத்துவம், சைவசித்தாந்தம், வேதாந்தம், தத்துவம் அளவை அலங்காரம், சோதிடம், வானநூல் வேதிநூல் ஆகியவற்றில் வரும் சொற்களை எல்லாம் அதிலே தொகுத்தார். சொற்களுக்கு உதாரணங்காட்டு முகமாக இலக்கியங்களினின்று அவைவரும் சொற்றொடர்களைக் காட்டியுள்ளார். சங்கத்தினின்றும் எடுத்து வழங்கும் சொற்களின் பொருளை அகரவரிசைப்படுத்தி வரையப்பட்டுள்ளது சிற்சில இடங்களில் சொற்களின் பிறப்பு வரலாறும் வந்துள்ளது.

இப்பெரியார் தான் பாடுபட்டுத் தொகுத்த அகராதி முழுவதையும் அச்சிட்டு வெளியிடுமுன்பே இறந்துவிட்டனர். இவர் உயிருடன் இருக்கையில் அகர வரிசை மட்டுமே வெளிவர ஆயத்தமானது. அவர் தொகுத்த நூல் மதுரைத் தமிழ்ச் சங்கத்திடம் ஒப்புவிக்கப்பட்டது. அதனால், அது சங்கத்தில் 18,600 சொற்களும், இரண்டாவதில் 18,100 சொற்களும் மூன்றாவதில் 28,200 சொற்களும் மொத்தம் 68,900 சொற்கள் உள்ளன.

இவ்வகராதி வெளிவந்துகொண்டிருக்கையில் கற்றறிந்தோருக்கென ஓர் அகராதியும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தது. அதன்பெயர் இலக்கியச் சொல்லகராதி. சுன்னாகம் அ. குமாரசுவாமி புலவர் செய்தது. நிகண்டுகளிலும், இராமாயணம், மகாபாரதம், கலித்தொகை, சிந்தாமணி முதலிய இலக்கியங்களிலும் வரும் பெயர்ச் சொற்களையே

www.padippakam.com



பெரும்பாலும் அடக்கியுள்ளது. இதுகாறும் வெளிவந்த அகராதிகளிற் காணாத 1500 புதுச்சொற்களைக் கொண்டது. இப்புதுச் சொற்கள் யாவும் உடுக்குறியினால் காட்டப்பட்டுள்ளன. இது வெளிவந்த காலம் 1914-ம் ஆண்டு.

இவ்வகராதிகளைவிட நாவலர் கோட்டம் முத்துத் தம்பிப் பிள்ளை அவர்கள் ஆங்கில, ஆங்கிலத் தமிழ் அகராதி ஒன்றனை 1911ம் ஆண்டு வெளியிட்டனர். யாழ்ப்பாணத்திலுள்ள நாவலர் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறையில் வாழ்ந்த சி. சுப்பிரமணிய சாத்திரியார் அவர்கள் சொற்பொருள் விளக்கம் என்னும் கையடக்கமான அகராதி ஒன்றனை 1924-ம் ஆண்டு வெளியிட்டார். இது சிறிய அகராதி எனினும் மாணவருக்கு மிகப் பயன்படக்கூடியது. யாழ்ப்பாணத்து நல்லூர் வண, சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் இதுகாறும் தமிழ் அகராதி ஆக்குவோர் கைக்கொள்ளாத முறையில் ஓர் தமிழ் ஆங்கில அகராதியை ஆக்க முயன்றார். பன்மொழிகளை ஆராய்ந்தறிந்த அறிவினைப் பயன்படுத்தித் தமிழுக்கு ஒரு சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை ஆராய்ந்து அகர வரிசைப் படுத்தினார். சில பாகங்களை 1935-ம் ஆண்டு அச்சிட்டும் வெளியாக்கினார். போதிய உதவியின்மையால் வேலை நிறுத்தப்பட்டது. சில ஆண்டுகளில் அவரும் காலமாகியதால் அவர் சேர்த்த சொற்றொகுதி வெளிவராது கிடக்கின்றது.

இங்கு ஆராய்ந்தவற்றிலிருந்து புத்தம் புதிய கலையாகிய விஞ்ஞானத் துறையில் தமிழகத்துக்கு வழிகாட்டியாய் நின்றது ஈழநாடு என்பது விளங்கும். அமெரிக்கரும் ஈழ நாட்டவரும் சேர்ந்து ஆற்றிய விஞ்ஞானப் பணியைப் பின் தொடர்ந்து தமிழ் நாடெங்கணும் இத்துறையில் பணியாற்றியிருந்தால் பாரதியார், ''புத்தம் புதிய கலைகள் மெத்த வளருது மேற்கே'' என்ற ஒலியை எழுப்பியிரார். தமிழ் நாடும் ஈழநாடும் இன்று பாடிவரும் கலைச் சொற்கள் சேர்க்கும் படலமும் எழுந்திராது. என்னே தமிழன் செய்த பாவம். வீணாக ஒரு நூற்றாண்டு கழிந்துவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்நாட்டில் நிகண்டுகள் எழுந்தன. ஐரோப்பியர் வந்ததன் பின் சதுர் அகராதி, மலபார் அகராதி ஆகிய இரண்டுமே முதன் முதல் எழுந்தவை. பின்னர் உறோற்லர் (Dr. P. Rottler) என்பார் ஒரு தமிழ் ஆங்கில அகராதியை ஆக்கினார். சென்னை அரசினரின் உதவியோடு அது பல திருத்தங்களுடன் 1841-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. எனினும், அதிற் காணப்படும் சொற்கள் பல துறையிலும் பயிலுவோர்க்குப் போதாதிருந்தன. ஆகையால், அது வேண்டிய தேவைகளுக்குப் போதாதெனக் கைவிடப்பட்டது. அதன் பின்னரே யாழ்ப்பாண அகராதியும் வின்சிலோ அகராதியும் தோன்றின. அவற்றின்பின் வெளிவந்த அகராதி யாவும் யாழ்ப்பாணத்திலிருந்தே வெளிவந்தன.

ஆகையால் விஞ்ஞானத் துறையிலும், அகராதித் துறையிலும் ஈழநாடே தமிழ்நாட்டுக்கு வழிகாட்டியாய் நின்றதென்பது சொல்லாமலே அமையும்.

www.padippakam.com

# வன்னிநாட்டை அரசுபுரிந்த வனிதையர்

யாழ்ப்பாணத்தில் நடைமுறையிலிருந்து வரும் வழிபாடுகளுள் நாய்ச்சிமார் வழிபாடுமொன்று. அங்கு பலப்பல ஊர்களிலும் நாய்ச்சிமார் கோயில் உண்டு. அக்கோயில்களில் மங்கலமான நாட்களில் மக்கள் பொங்கல் பொங்கியும் விளக்கு வைத்தும் வழிபாடாற்றுவார்கள். இவ்வழிபாடு யாழ்ப்பாணத்திற்கு எந்தக் காலம் வந்தது என்பது ஆராயத்தக்கது. அதனோடு நாய்ச்சிமார் என்ற கடவுள் வைதிக சைவ சமயத்தில் இல்லை. ஆகவே, இது தமிழ் மக்களுக்குள் வைதிக சமயத்திற்குப் புறம்பே எழுந்த வழிபாடாகும். எனவே, இவ்வழிபாட்டு முறையை ஆராயு முன்னர் நாய்ச்சிமார் என்னும் சொல்லைச் சிறிது ஆராய்வோம். நாச்சி என்னும் பெயர்ச் சொல்லுக்கு மார் என்னும் உயர்திணைப் பன்மை விகுதியைச் சேர்த்து வந்ததே நாய்ச்சிமார் என்னும் சொல்லாகும்.

நாச்சி என்னும் சொல்லை எடுத்துக்கொள்வோம். நாச்சி என்னும் சொல் எட்டாவது நூற்றாண்டுவரையில் தமிழ் மக்கள் வழக்கிலிருந்தது. பெரியாழ்வாருடைய மகள் ஆண்டாளைச் சூடிக் கொடுத்த நாச்சிவார் என்று அழைத்தல் இதற்கு எடுத்துக்காட்டாகும். நாச்சி என்னும் சொல் ''நீ'' என்னும் சங்கத வினைப்டிசாகப் (சமஸ்கிருதம்) பிறந்த உயர்திணைப் பெயர். ''நீ'' என்பதற்கு வழிகாட்டு

www.padippakam.com



தல் என்பது பொருள். எனவே, நாச்சி என்பதற்கு வழிகாட்டு பவள் அல்லது தலைவி என்பது பொருள். நாச்சி என்பதற்கு ஆண்பால் நாயன். ஆனால், இலங்கை வன்னி நாட்டிலே வன்னியர் ஆதிக்கஞ் செறிந்திருந்தபோது, வன்னியர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை நாச்சிமார் என அழைத்தல் மரபுபோலத் தோன்றுகின்றது.

வன்னிநாட்டிற் கண்டெடுக்கப்பட்ட பழைய ஏட்டுப் பிரதியொன்றில் பின்வரும் வரலாறு காணப்படுகின்றது :— ''அறுபது வன்னியமார் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து 'அரசு' புரிந்து கொண்டிருந்தனர். அவர்கள் இங்கு வரும்போது தம்முடைய மனைவிமாரை மதுரையில் விட்டு விட்டு வந்தனர். அக்காலத்திலே வடஇலங்கையின் பல பாகங்களைப் பறங்கிக்காரர் கைப்பற்றத் தொடங்கினர். அப்பொழுது அந்த வன்னியமார் அறுபது பேரும் பறங்கிக் காரரோடு போர் புரிந்தனர். அவருள் 54 பேர் போரில் மாண்டனர்.'' (மேல் வரும் பகுதி நேரடியாக ஏட்டுப் பிரதியிலிருந்து எடுக்கப்பட்டதாகும்). ஆனால், அக்கூட்டத்தில் ஐவர் பரங்கிக்காரரோடு பெரும் போர் நிகழ்த்தி தாம் இருக்கும் வன்னி நாட்டைக் கைப்பற்ற விடாது அவரை முறியடித்து, முள்ளியவளை முனையாக அந்த நாடுகளையும் அரசு பண்ணினர். ஒருவன் கண்டி இராசனுக்குத் திசை (திசாவா) யாகப் போய்விட்டான். அதன்பின்னர் எஞ்சிய ஐந்து வன்னியமார்கள் மதுராபுரிக்குப் போய்த் தமது மனைவிமாரை இட்டு வரும்படி ஓடமேறிச் சென்றனர். அவர் போகும்போது அவர் போன ஓடம் கடலில் ஆழ்ந்துவிட்டது. அதனால், அவர் மாண்டனர்.''

''இது இவ்வாறிருக்க அந்த வன்னியமார் அறுபது பேருடைய பெண்சாதிமார் மதுரையிலே இருக்கும்போது ஒரு நாள் அந்த நாட்டரசன் அவர்களிருக்கும் தெருவீதியிலே குதிரை மீதேறி, பெண்கள் இருக்கும் தெரு என்றும் கவனம் பாராது தன் குதிரையை ஓட்டி வந்தான். அவ்வாறு அவன் வந்தபடியினால் அவர், ''இனிமேல் நாங்கள் இங்கிருந்தால்

www.padippakam.com



எங்களுடைய மானம் கெட்டுப் போகும். எங்கள் முதலாளி மார் இலங்கை நாட்டிற்குப் போய் இராசாக்களாக இருப்ப தால் நாங்களும் அவ்விடம் போக வேண்டும்' என எண்ணி னர். தமது பயணத்திற்குவேண்டிய ஆயத்தங்களைச் செய்து கொண்டு தங்கள் பணியாட்களுடன் ஓடமேறி வட இலங் கைக்கு வந்தார்கள். பின்னர் வன்னிய நாட்டுக்கு வரும் போது வன்னியமார் இறந்த சேதிகொண்டு தூதன் பின்வரு மாறு சொல்லுவான்: ''எங்கள் முதலாளிமார்கள் 60 பேரிலே 54 பேர் பறங்கிக்காரருடன் பொருதுபட்டுப் போனார்கள். ஒருவர் கண்டியில் இராசாவுக்குத் திசையாக நிற்கின்றார். மற்ற 5 பேரும் பறங்கிக்காரரையும் வென்று வன்னியை ஐந்து பற்றாகப் பிரித்து அரசு பண்ணினார்கள். அப்படி அரசு பண்ணிவிட்டு அந்தந்தப் பற்றுக்கு அந்தந்த வேளாளரை முதன்மையாக்கிப் போட்டு முள்ளியவளையிலே இளஞ்சிங்க மாப்பாணனை முதன்மையாக்கிப் போட்டு மதுரைக்கு வந்தார். அதன் பின்பு அவர்கதை யாதொன்றுங் தெரியாது'' என்றனர்.

''இவ்வாறு தூதன் சொல்ல அது கேட்டு முன்னமே இறந்த 54 வன்னியமார்களுடைய பெண்சாதிமார்களும் தெல்லிச்சி வாய்க்காலிலே தீயிலே வீழ்ந்து மரணமடைந்து போனார்கள். அப்போது அவர்களுக்கு நாச்சிமார் என்று பெயராயிற்று. அவர்களுக்குக் குதிரை விட்டு வந்த மள்ளரும் அறுபது பேரும் வீரக் குடும்பன் முதல் ஆரிய குடும்பன் முத லாகத் தீயின் விழுந்துவிட்டார்கள். அன்றுமுதல் அவர் களுக்கு அண்ணமாரென்னும் பெயராயிற்று. ஒரு வன்னிச்சி மாரும் வன்னி ஐந்து பற்றிலுமிருந்து அரசு புரிந்தார்கள். அதன் காரணத்தால் பெண்களுக்கு வன்னிமை என்றும் ஆண் பிள்ளைகளுக்கு, ''ஐதாந்தி'' என்றும் பெயராயிற்று.''

இவ்வன்னிநாட்டு வரலாறு ஒருபுறமிருக்க யாழ்ப் பாணத்தில் நாச்சிமார் வழிபாடிருக்கும் சில பகுதிகளில் வழங்கும் வரலாற்றை இங்கு தருவாம். அது பின்வருமாறு: ''ஆறு வன்னிமைப் பெண்கள் வன்னி நாட்டிலிருந்து ஆட்சி

படிப்பகம்

www.padippakam.com



புரிந்து வந்தனர். பறங்கிக்காரர் வடஇலங்கையின் ஒரு பகுதியை கைப்பற்றிய பின்னர் வன்னியையும் கைப்பற்ற முயன்றனர். ஒவ்வொரு முறையும் அவர் முயற்சி பலிக்காமல் போரில் தோல்வியுற்று வன்னிநாட்டினின்றும் திரும்ப வேண்டியவரானார். ஏதோ ஒரு வகையாகத் தாம் வெற்றி பெற வேண்டுமெனப் பெரும் ஊக்கத்துடன் தமது படையை அணிவகுத்துப் பின்னரும் சென்றனர்.

அங்கு போய் வன்னிநாட்டுப் படைகளுடன் பெரும் போராற்றினர். இம்முறை வன்னிநாட்டவர் படை சிறிது தளர்வுற்றனர். அதைக் கண்ட அந்த நாட்டினை ஆளும் வன்னிமைப் பெண்கள் அறுவரும் அவரது பணிப்பெண் ஒருத்தியும் ஆண்களைப்போல், அம்பு, வில்லு, வாள், சதங்கை முதலிய படைதாங்கித் தமது சேனையை நடாத்திப் பறங்கியர் முன்னர் வந்தனர். இருபடையினர்க்கிடையிலும் இதுகாறும் நடந்த போர்களைக் காட்டிலும் பெரியதோர் போர் மூண்டது. இப்பெண்கள் பறங்கியர் படை எதிரில் நின்று மிகுந்த வீரத்தோடு போர் செய்தனர். அதனால், பறங்கியர் முதுகு காட்டி ஓட வேண்டிய நிலையும் வந்தது. எனினும் ஏதோ சூழ்ச்சியால் பறங்கியர் தலைவன் போரை வென்றனன். அதனால், வன்னிப்படையினர் மனமுடைந்தனர். அப்பெண்கள் ஏழு பேரும் பறங்கியரின் கைகளில் அகப்பட்டால் மானபங்கம் அடைய நேரிடும் என உள்ளம் பதைத்தனர். மானமிழந்து வாழ்வதைக் காட்டிலும் உயிர் நீத்தலே சாலச்சிறப்புடைத்து என உறுதி கொண்டனர். உடனே அப்பெண்கள் எழுவரும் நஞ்சுண்டிறந்தனர். அதைக்கண்ட வன்னிநாட்டவர் அவரைத் தெய்வமாக்கினர். கற்பினிற் சிறந்து விளங்கிய கண்ணகியைக் கடவுளாக்கி வழிபடும் தமிழ் மக்களாகிய வன்னிநாட்டவரிடை வீரத்திற் சிறந்து திகழ்ந்த இவ்வெழு பெண்களையும் வழிபடும் வழக்கம் எளிதிற் பரவியது, நாளடைவில் இவ்வழிபாடு வன்னிநாட்டில் மட்டுமின்றி ஏனைய இடங்களுக்கும் பரவியது. யாழ்ப்பாணத்திலே வடமாட்சி கிழக்குப்

ஈ—9

www.padippakam.com



பகுதியைச் சேர்ந்த நாகர்கோயில் என்னும் ஊரிலும் மருத்தித்துறை, ''சாளம்பை'' வட்டாரத்திலும் காங்கேசன் துறை வன்னியனார் வளவிலும் அராலியிலும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியிலும் இவ்வழிபாடு இன்றும் நடை பெறுகிறது.

இக்கோயில்களில் நடக்கும் வழிபாட்டு முறைகளை எடுத்துக் கொள்வோம். பொதுவாக ஏனைய கோயில்களில் நடக்கும் வழிபாடு போலவே இங்கும் வழிபாடு நடக்கும். ஆனால், இக்கோயில்களில் ஒரு தனிச்சிறப்பான வழிபாட்டு முறையுண்டு. எடுத்துக்காட்டாக, பருத்தித்துறைச் சாளம்பை வட்டாரத்து நாச்சிமார் கோயிலில் பறைமுழங்கும் போது விட்டுவிட்டு, வேறு வேறு தாளத்துடன் ஏழு முறை முழங்குதல் மரபு. இது பண்டை நாள் தொட்டு வந்த வழக்கம் என்பர். தைப் பொங்கல், சித்திரைப் புத்தாண்டு முதலிய பெருநாட்களில் அங்கு மக்கள் போய்ப் பொங்குவர்.

காங்கேயன் துறை வன்னியனார் வளவுக் கோயிலிலும் உள்ள வழிபாட்டு முறையும் கவனிக்கத்தக்கது. இங்கும், தைப் பொங்கல் முதலிய பெருநாட்களில் மக்கள் பொங்கிப் படைப்பர். இதைவிட ஆண்டுக் கொருமுறை அங்குச் சிறப்பான வழிபாடென்று நடைபெறும். அவ்வழிபாட்டு நாளன்று பருவமாகாத பெண்களுக்குள்ள ஏழு விட்டிலிருந்து ஏழு தாம்பாளம் நிறையப் பொருட்கள் வைத்து தூய வெண் சீலையினால் மூடி அவ்வீடுகளிலுள்ள ஏழு பருவமாகாத சிறுமிகள் அக்கோயிலுக்கு எடுத்துச் செல்வர். இத்தாம் பாளங்களுக்குள்ளே மிளகு, இஞ்சி, மஞ்சள், எள்ளு, சீரகம், பனங்கட்டி, செங்கல்லு, குன்றிமணி ஆகியவற்றைச் சேர்த்து இடித்த பாகு, அம்பு, வில்லு, சதங்கை ஆகிய பொருட்களை வைப்பர். இத்தாம்பாளங்களைக் கோயிலுக் குச் கொண்டு சென்றதும் அங்கு நிற்கும் கோயில் மரங் களுக்குக் கீழ் ஒவ்வொன்றாக வைப்பர். ஆறு மரங்களும் கிட்டக் கிட்ட உள்ளன. ஆனால், ஏழாவது மரம் அவற்

www.padippakam.com



திற்குச் சிறிது தூரத்தேயுள்ளது. கிட்டக் கிட்ட உள்ள ஆறு மரங்களுக்கும் கீழ் ஒவ்வொன்றாக வைக்கப்படும் ஆறு தாம் பாளங்களும் ஆறு கன்னிமைப் பெண்களுக்கும் தூரத்தே யுள்ள மரத்தின் கீழ் வைக்கப்படும் ஒரு தாம்பாளம் பணிப் பெண்ணுக்கும் ஆகும். அம்பு, வில்லு அவர் போர் செய்ததை யும், குன்றிமணி செங்கல்லு அவர் நஞ்சுண்டிறந்ததையும் குறிக்கும்.

தாம் கொண்டு சென்ற தாம்பாளங்களை வைத்த பின்னர் ஏழு சிறுமியரும், ஏழு வளந்துப் பசனையை அடுப் பிலேற்றுவர். இதன் பின்னரேயே அங்கு வழிபாடாற்ற வந் திருக்கும் ஏனைய மக்கள் பொங்கல் செய்யத் தொடங்குவர். பொங்கி முடித்த பின்னர் யாவரும் தாம் பொங்கிய பானை களிலிருந்து பொங்கற் சோற்றை எடுத்து ஏழு மரத்தின் கீழும் வாழையிலையிற் படைப்பர். வயதில் முதிர்ந்த ஒருவர் இளநீர் உடைத்துச் சாம்பிராணி, கற்பூரம் கொளுத்துவர். யாவரும் கும்பிட்டு வழிபட்ட பின்னர் இச்சிறுமியர் எழுவரும் தாம் கொண்டு வந்த தட்டங்களைக் கையில் ஏந்தி நிற்பர். அப்பொழுது அங்கே பொங்கியுள்ளோர் ஒவ்வொருவரும் தமது பானைகளிலிருந்து சிறிது சிறிது சோற்றை எடுத்து அத்தாம்பாளங்களிற் பேர்டுவர். அதன் பின்னர் அச்சிறுமியர் அக்கோயிலுக்குப் பக்கத்தேயுள்ள கேணிக்குள் ஏழு குண்டுக் குள் தாம் கொண்டு வந்த தாம்பாளத்திலுள்ள பொருட் களைக் கொட்டுவர். இத்துடன் வழிபாடு முடிவடையும். தீராத வருத்தமுள்ளோர் யாரும் அங்கிருப்பின் அவருக்கு அச்சிறுமியர் பொங்கிய பானைகளிலிருந்து பொங்கற் சோற்றை எடுத்துக் கொடுப்பர். இது அவர் நோய்க்கு மருந்தாகும் என்பது இவர் நம்பிக்கை.

இங்கு முதலாவதாகக் கூறிய வன்னிநாட்டு வரலாற் றிற்கும் இரண்டாவதாகக் கூறிய யாழ்ப்பாண வரலாற் றிற்கும் சிறிது வேறுபாடிருப்பதைக் காணலாம். வன்னி நாட்டுக் கதையில் வன்னிமைப் பெண்கள் ஐவர் தமது

www.padippakam.com



கணவன்மார் இருந்து ஆட்சி செய்த இடத்திலிருந்து ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால், காங்கேயன்துறை வரலாற்றுப்படி ஆறு வன்னிமைப் பெண்களும் அவரின் பணிப்பெண் ஒருத்தியும் பறங்கிக்காரருடன் போராற்றித் தோல்வியடைந்த பின்னர் நஞ்சுண்டு மாண்டனர், எனத் தெரியக்கிடக்கின்றது. அன்றியும் பருத்தித்துறைக் கோயில் வரலாற்றின்படி நாச்சியர் எழுவர் என்பது வெளிப்படை அன்றியும் வன்னிநாட்டு வரலாற்றின்படி பாண்டி நாட்டி லிருந்து வன்னிமைப் பெண்கள் வந்தனர். அவருள் 5½ பேர்கள் தமது கணவன்மார் போரில் மாண்டதைக் கேட்டுத் தீயில் விழ்ந்திறந்தனர். ஒரு கன்னிமைப் பெண் தனது திசா வைக் கணவரிடம் சென்றார். மற்ற ஐவரும் வன்னியில் ஆட்சி புரிந்து வந்தனர். ஆனால், காங்கேயன்துறைக் கோயில் வழிபாட்டு வரலாற்று முறைப்படி ஆறு வன்னிமைப் பெண்கள் ஆண்டதாகவும் அவ்வாறு பெண்களும்அவருடைய பணிப்பெண் ஒருத்தியும் பறங்கியருடன் போர் புரிந்து தோல்வியடைந்தமையால் நஞ்சுண்டிறந்ததாகவும் தெரிய வருகின்றது. இக்காரணம் பற்றியே காங்கேயன்துறை விழாவில் எடுக்கும் ஏழு தாம்பாளத்தில் வில்லு, அம்பு, சதங்கை ஆகியவற்றை வைப்பர். அவர்கள் நஞ்சுண்டிறந் ததைக் குறிப்பதற்காகச் செங்கல்லையும் குன்றிமணியையும் பாகிற் சேர்த்துக் கொள்வர்.

போரில் இறந்த வீரரை வழிபடும் வழக்கம் பண்டைக் காலம் தொடக்கம் தமிழ் மக்களிடையே நிலவி வருகின்றது. இப்பண்டைய முறையைப் பின்பற்றியே எழுந்தது நாய்ச்சி மார் வழிபாடு. ஒவ்வோரிடமும் இவ்வழிபாடு மரங்களுக்குக் கீழேயே நடைபெறுகின்றது. வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோயிலில் தாழை மரத்தினடியிலும் பருத்தித் துறையில் ''சாவம்பை'' மரத்தினடியிலும், காங்கேயன் துறையில் வேம்பு, அரசு முதலிய மரத்தினடியிலும் அரா லியில் ஆலமரத்தினடியிலும் இவ்வழிபாடு நடைபெறும். இவ்வழிபாட்டு முறையும் ''மொகஞ்சதாரோ''க் காலம்

www.padippakam.com



தொடக்கம் திராவிடருக்குள்ளிருந்து வந்த மரவழிபாட்டு முறையாகுமெனக் கூறலாம்.

பண்டைத் திராவிட வழிபாட்டு முறை இங்ஙனமிருக்க, வைதிக சமயக் கூட்டத்தார் இக்கோயில்களை எல்லாம் மாற்றிமர வழிபாடிருந்த இடங்களிற் கட்டடங்கள் எழுப்பி அதற்குள்ளே உருவச்சிலைகளைத் திணித்து, இல்லாத பத்ததி முறைகளையெல்லாம் கொண்டுவந்து சேர்த்தனர். அதுமட்டுமன்றிப் பார்ப்பனரைக் கொண்டுவந்து சேர்த்தனர். அதுமட்டுமன்றிப் பார்ப்பனரைக்கொண்டு இல்லாத முறைகளைச் சங்கதத்தில் சுலோகங்களாக ஆற்றி இக் கோயில்களில் பூசைகள், விழாக்கள் நடத்திவருகின்றனர். இவர் செய்கை, பண்டைக்காலத் தமிழர் வழக்குக்கும் அவர் வழிபாட்டு முறைக்கும் மாறானது.

நாச்சிமார் வழிபாட்டின் வரலாற்றையும், அவ்வழி பாட்டு முறையையும் ஒராற்றான் எடுத்துரைத்தனம். இதன் உண்மை முழுவதும் சரியாகக் கிடைக்கவில்லை. வன்னி நாட்டிலும் யாழ்ப்பாணத்து வேறு பகுதிகளிலும் இவ்வழி பாடு நடைமுறையிலிருத்தல் கூடும். அவற்றைத் திரட்ட முடியாமலிருக்கின்றது. அவற்றைத் திரட்டிச் சரித்திர முறைப்படி ஆராய்தல் அறிஞர் கடன்.

www.padippakam.com

# கற்பகதரு

பனைமரம் சூடான தேசங்களில் வளரும்; அது கொட்டையிலிருந்து முளையுருவிக் கிழங்காகி முளைக்கும். அது நட்டு இருபதுக்கு மேற்பட்ட ஆண்டுகளிற் பலன் தரும். அதற்கு ஏனைய மரங்களைப்போலத் தண்ணீர் விடுவதில்லை. ஆனால், விதையை நடுகின்ற அன்றுமட்டுமே தண்ணீர் விடுவர். அதன் பின்னர் அதுதானே வளரும், இதைக் கண்ணுற்ற புலவர் ஒருவர்மேல் வருமாறு கூறுவர்:—

''கடையாயார் நட்பிற் கமுகனையர் ஏனை
இடையாயார் தெங்கின் அனையர்—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு.''

இப்பாட்டிற் புலவர் பனைமரத்தைத் தலையாய மாந்தருக்குச் சமனாக்கி, அது மக்களுக்குக் கொடுக்கும் பயனையும் சிறப்பித்துக் கூறினார். இவ்வகையான சிறப்புள்ள மரம் தென்னிந்தியாவில் வளரும். அன்றியும், வட இந்தியாவில் சிந்து தேசத்திலும் உண்டு. அதனோடு, ஈழமண்டலத்தின் வடபகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் வளரும்.

அது மனிதனுக்கு மிகுந்த பயனைத் தரும் மரங்களில் ஒன்று. சகாரா அராபியா முதலிய தேசங்களிலே பேரீந்து இன்று அந்நாட்டு மக்களைப் பல வகையாலும் ஊன் கொடுத்துக் காப்பாற்றி வருவது போலவே பனை மரமும் தென்

www.padippakam.com



னிந்திய மக்களுக்கு மிகுந்த பயனைக் கொடுத்து உதவு கின்றது. சிறப்பாக யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் இம் மரத்தின் பயனை நன்கறிவர்.

பண்டைய தமிழ் இலக்கியங்களில் இம்மரத்தைப் பற்றிய செய்தி பல வருகின்றன. பழைய தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலே மரபியலில் தாவரத்தைப் புல்லெனவும் மரமெனவும் இரு கூறாகப் பிரித்திருப்பதை மேல்வரும் சூத்தி ரத்தால் அறியலாம்.

''புறக்கா ழனவே புல்லென மொழிப
அகக்கா ழனவே மரமென மொழிப.''

''இதற்கு, புறத்துக் காழ்ப்புடையனவற்றை (வைரம்)" புல்லெனவும், அகத்துக் காழ்ப்புடையனவற்றை மரமெனவும் சொல்லும்'' என்று பேராசிரியர் உரை கூறுவர். அன்றியும் ''புறக்காழன எனவே அவ்வழி வெளியென்பது அறியப் படும். அவை பனையும் தெங்கும் கமுகும் முதலாயின புல் லெனப்படும். இருப்பையும் புளியும் ஆச்சாவும் முதலாயின மரமெனப்படும்'' என்று உரை எழுதுவர். குறுந்தொகையில் வரும், ''இருப்பனம் புல்லின் பசுந் தோட்டுக் குடம்பை'' என்னும் அடியினால் பனையைப் புல்லென ஆன்றோர் கருதினர் என்பது புலப்படும்.

பாரத வீரர்களுள் ஒருவரும் கண்ணபிரானின் அண்ணரு மாகிய பலராமரது கொடியில் பனை பொறிக்கப்பட்டிருந் தது. தமிழ் முடியுடை மூவேந்தருள் ஒருவனாகிய சேரனுக்குப் பனைவிற்கொடி இருந்தது. அன்றியும் அவன் அணியும் மாலை பனம்மாலை. அதனால் அவனைப் பனந்தாரான் எனவுங் கூறுவர்.

அதனோடு அகப்பொருளில் மடற்றிறம் என்றொரு பகுதி அமையும். இதிலே தலைவன் களவொழுக்கத்தில் தலைவி உடன்படாவிடின் அவளைத் தன் ஒழுக்கத்திற்கு வயப்படுத்துவதற்காக மடலேறத் துணிவன். மடலேறுதல்

படிப்பகம்

www.padippakam.com



பெருந்திணைப்பாற்படும். இதற்கு மேல்வரும் கலித்தொகைப்பாட்டுப் பகுதியை மேற்கோளாகக் காட்டலாம்.

''சான்றவிர் வாழியோ சான்றவி ரென்றும்
பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி யறனறிதல்
சான்றவர்க் கெல்லாங் கடனானா லிவ்விருந்த
சான்றீர் நுமக்கொன் றறிவுறுப்பேன் மான்ற
துளியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி
ஒளியோ டுருவென்னைக் காட்டி யளியளென்
னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டு துஞ்சேன்
அணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்
பிணையலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப
ஓங்கிரும் பெண்ணை மடலூர்ந்தெ னெவ்வநோய்
தாங்குத றேற்றா விடம்பைக் குளிப்பாக
வீங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
பாடுவேன் பாய்மா நிறுத்து''

என அழைத்தனர். வாக்குவன்மை பெறவேண்டுமெனின் கள்ளுண்டால் அதுதானே வரும் என்பது ஆன்றோர் கருத்து. மேனாட்டார் வாளியரிசி முதலியவற்றிலிருந்து உண்டாக்கப் படும் பியர் என்னும் குடிவகையை நாள்தோறும் அருந்தும் ஒரு பானமாகப் பாவித்து வருவதுபோலவே, தமிழ்நாட்டு மக்களும் பனங்கள்ளைப் பெரிதும் பயன்படுத்தி வருவர். பண்டை நாட்களிலே நெல்விளைந்த வயலிடையுளதாய புள்ளை ஓட்டுவார். வீழ்ந்த பனங்கருக்காகிய விறகால் கழிக்கண் மீனைச் சுட்டு அதனுடனே வெய்ய மதுவை யுண்டு தொலைத்தும் அமையாராய், தெங்கினது இளநீரை உதிர்க்கும் செல்வமிக்க நல்ல நாடு என்று பொருள்படச் சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுக்கண்ணன் சாத்தனார் புறநானூற்றில் மேல் வருமாறு பாடியுள்ளார்.

''நெல்விழை கழனிப் படுபுள் ளோப்புநர்
ஒளிமடல் விறகிற் கழிமீன் சுட்டு

www.padippakam.com



வெங்கட் டொலைச்சியு மமையார் தெங்கின்
இளநீ ருதிர்க்கும் வளமிகு நன்னாடு.''

அதிசயமான் நெடுமானஞ்சி இறந்துபட ஔவையா ரென்னும் பெரும்புலவர் அவன் ஈகையையும் பெருந்தன்மை யையும் குறித்துப் பாடும்போது கொஞ்சக் கள்ளைப் பெற் றால் யாம் குடிக்கும்படி அவன் எமக்கு ஈவான். அன்றிப் பெரிய கள்ளைப் பெற்றுவிட்டாலோ யாம் அங்கிருந்து பாடத் தான் மகிழ்ச்சியோடு அக்கள்ளை உண்ணுவான் என மேல்வரும் பாட்டைக் கூறிப் புலம்புகின்றனர்.

''சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந்த துண்ணு மன்னே.''

கடல்பிறக்கோட்டிய சேரன் செங்குட்டுவனைக் கரண மமைந்த காசறு பரணர் என்னும் புலவர் பெருமான் தாம் பாடிய ''தசும்புதுளங்கிருக்கை'' என்னும் பாட்டிலே அக் காலத்திலே அரசனுடைய அவைக்களத்தில் பாணர்விறலியர் முதலிய அரசனது சுற்றத்தார் அவனோடிருந்து கட்குடித்துக் கொண்டாடிய முறையினை அறிந்துகொள்ளலாம். கள்ளை ஒரு குடத்தில் நிறைத்து வைத்து அக்குடத்துக்கு இஞ்சியும் பூவும் சேர்த்துக் கட்டிய மாலையை அணிவர். மதுநுகர்வுழி இடையிடைக் கறித்து இன்புறுதற் பொருட்டு இஞ்சியும், மோந்து இன்புறுதற் பொருட்டுப் பூவுமாக இவ்வாறு மாலை யினை விரவித் தொடுப்பர். அம்மட்டோ, அவ்வாறே பயன் கோடற்குச் சந்தனமும் அக்குடம் கள்ளின் வீறினால் துளங்கிக் கொண்டிருக்கும். அதனைப் புலவர், ''தன்களிப்பு மிகுதியால் தன்னை உண்டார் உடல்போலக் குடத்துள்ளே இருந்து அதனை ஆட்டிக்கொண்டே இருக்கும்'' என்பர். இப்பொருள்படப் பாடிய மேல் வரும் பாட்டினை நோக்குக.

''இஞ்சிவீ விராய பைந்தார் பூட்டிச்
சாந்து புறத்தெறிந்த தசும்பு துளங்கிருக்கைத்

www.padippakam.com



தீச்சேறு விளைந்த மணிநிற மட்டம்
ஓம்பா வீகையின் வண்மகிழ் சுரந்து
கோடியர் பெருங்கிளை வாழ ஆடியல்
உளையவிர் கலிமாப் பொழிந்தவை யெண்ணின்''

இவற்றிலிருந்து பண்டைக் காலந்தொட்டே பனங் கள்ளைத் தமிழர் அருந்தி மகிழ்ந்து வந்தனர் எனத் தெரி கின்றது.

எல்லார் மனத்திலும் பனங்கள்ளு ஒப்ப ஊன்றி இருந்த மையால் அதைப் பற்றிப் பலப்பல நொடிகளும் எழுந் துள்ளன. அவற்றிலொன்று மேல்வருவது:—

''அறியாது குடிசைதனிற் கர்ப்பமானாள்
அந்தரத்துப் புலையனுக்குப் பாங்கியானாள்
தொலையாத வழிநடந்து தூரப் போனாள்
நெஞ்சடைத்தே வயிறுளைந்து பிள்ளைப்பெற்றாள்
அறியாத புலையனவன் அவள்முலையை அரியச்
சொன்னான்
அறியாத புலையனவன் அரிந்தே விட்டான்
நிலையான சம்பன்ன காரன் கண்டு
யார்மேலே குற்றமென்றான், அறியச் சொல்லும்.''

அக்காலத்திலே தமிழ் நாட்டு மக்கள் கள்ளின் நற்குணங் களை நன்கு அறிந்திருந்தனர் போலும். இந்நாட்களிலும் அவர் அதை உடல் நலத்துக்குப் பெரிதும் பயன்படும் உணவாகக் கொள்ளுகின்றனர். மருத்துவர் கொள்கையின் படி காலையிற் சீவிய புளிக்காத கள்ளை வெள்ளாப்பிலருந்தி னால் மிகுந்த பயன் தரும் கள்ளுப் புளித்தால் பசியை உண்டாக்கும் என்பர். காமாளை முதலிய நோய்களுக்கு வரகு வைக்கலால் சுட்ட முட்டிக்குள் கீச்சுக் கிட்டம் இட்டுப் பாளையிற் கட்டி எடுத்த கள்ளைக் கொடுப்பர். இக்கள்ளினை ஏராக்கள்ளு என அழைப்பர். அன்றியும் காட்டுக் காய்ச்சல் முதலிய நோய்களுக்குப் பனங்கள்ளுச் சிறந்ததென மருத்துவர் கூறுவர். அம்மை சின்னமுத்து முதலிய அம்மாள்

www.padippakam.com



நோய்கள் வந்தால் புதுக்கள்ளுக்குள் வெண்காயத்தைப் பிழிந்து மருந்தாகக் கொடுப்பர். மனிதருக்கு வேண்டிய சீவசத்துக்கள் கள்ளிலே இருப்பதாக மேல்நாட்டு வைத்தியர் கூறுவர். சரியான முறையிற் பயன்படுத்தினால் கள்ளின் நன்மைகளோ மிகப் பல.

சிற்சில இடங்களில் பனங்கள்ளுக்குள் சில சரக்குகள் இட்டு அதனைத் திராவகமாக வடித்தெடுப்பர். இத்திராவகத்தைப் பானைக்குள்ளிட்டுக் காற்றுப் போகாது நன்றாய் அடைத்து நிலத்துக்குள்ளே புதைத்து வைப்பர். பல ஆண்டுகள் சென்றபின் அதனை எடுத்துப் புட்டிகளில் அடைத்து வைப்பர். அதுதான் பனஞ் சாராயம். சாராயம் மூன்று பொருட்களினின்று வடித்தெடுக்கலாம். பறங்கிப் பட்டையினின்றும், தென்னங்கள்ளினின்றும் பனங்கள்ளினின்றும் அதனை வடிப்பார்கள். இவை யாவற்றுள்ளும் பனங்கள்ளினின்று வடிக்கும் சாராயமே மிகத் திறமானது. மிகுந்த குணத்தைக் கொடுப்பதோடு திறமான வெறியையும் கொடுக்கும்.

முட்டிக்குள்ளே சுண்ணத்தைத் தடவிப் பாளையிற் கட்டினால் அதற்குள் வடியும் பாளைநீர் கருப்பணி எனப் படும் என முன்னே கூறினோம். குடிக்கும்பொழுது அது தித்திப்பான சுவையைக் கொடுக்கும். இதற்குள் மாங்காயைச் சிறுச்சிறு துண்டுகளாய் வெட்டிப் போட்டுக் குடிப்பர். முதனாள் அவித்த ஒடியற் பிட்டோடு குடிக்க மிகுந்த உவப்பாய் இருக்கும்.

ஒவ்வோராண்டும் ஒரு பனங்காணிக்குள்ளே சீவும் சீவற்காரன் கருப்பணியைக் காணிக்காரருக்குக் கொடுக்கும்போது நல்லநாட் பார்த்து முறையாகக் கொண்டு போய்க் கொடுப்பான். அப்பொழுது அக்காணிக்காரருள் முதியோர் ஒருவர் கருப்பணி நிறைந்த முட்டியைக் கடவுளை வழிபட்டு வாங்கி வெற்றிலை பாக்கோடு தட்சணையும் அச்சீவற்காரனுக்குக் கொடுப்பர். பின்னர் கருப்பணி தொகையாகப்பெருகியவுடன் பெரிய மிடாக்களில் ஊற்றிப் பெரிய அடுப்புக்கள் மூட்டிக்

படிப்பகம்

www.padippakam.com



காய்ச்சுவர். அது தடித்துப் பாணியாகும். பாணிமிடாக்களை இறக்கிப் பின்னர் சிறுச்சிறு சட்டிகளில் ஊற்றிப் பின்பும் காய்ச்சிக் கீழே இறக்கி அதற்கென அமைத்த அகப்பையால் சூடாய் இருக்கும்போதே அப்பாணியை மசிப்பர். அப்பொழுது அது கட்டியாய் இறுகும். உடனே அதனைச் சிறுச் சிறு அடையாகச் சுளகிலே அமைப்பர். அன்றியும், பனையோலையால் இழைத்த சிறு குட்டான்களிலோ அன்றிப் பெருங்குட்டான்களிலோ அதனைப் போடுவர். இதுவே பனங்கட்டி. சிறு குட்டானைத் தாயைத் தின்னிக் குட்டான் என்றும், பெருங்குட்டானைத் தாவளக்குட்டான் என்றுங் கூறுவர். இவ்வாறு ஆக்கிய குட்டான் பனங்கட்டிகளைப் பனஞ் சலாகையாற் கொட்டுக்கள் செய்து அவற்றுட் கொட்டி வைப்பர். அவை ஆயிரக்கணக்கிற் சேர்ந்தவுடனே, அவற்றைக் கூடைகளில் கட்டிப் பிற ஊர்களுக்கு அனுப்புவர்.

கருப்பணிக் காலத்திலேயே பனைமரங்களில் உள்ள பாளைகள் படிப்படியாய் முற்றத் தொடங்கும். அப்பொழுது அவற்றிலே குரும்பைகள் பிடிக்கும். இக்குரும்பைகள் முற்றும் போது சில பழுதடைந்து கீழே விழும். அவற்றை மக்கள் பொறுக்கி ஆடுமாடுகளுக்கு வெட்டி வைப்பர். யாழ்ப்பாணத்திலேயுள்ள காணிகள் துண்டு துண்டாய் அடைபடாது வெளியாய் இருந்த நாட்களிலே இளைஞரும் சிறுவரும் வெள்ளாப் போடு எழுந்து கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து பலவிடங்களுக்கும் சென்று குரும்பை பொறுக்குவர். பின்னர் விடிந்ததும், அவற்றைப் பிரித்தெடுத்துக்கொண்டு தத்தம் வீடுகளுக்கு ஏகுவர். சில ஊர்களில் அவர் யாவரும் தாம் பொறுக்கிய குரும்பைகளை ஓரிடத்தில் சேர்த்து, இரண்டு கன்னையாகப் பிரிந்து பந்தயம் கட்டி ஆடுவர் இவ்விளையாட்டிலே தோற்ற கன்னையின் குரும்பைகளை வென்ற கன்னை எடுத்துக் கொள்ளும். இவ்வாறு குரும்பை கட்டி ஆடிய இடங்கள் இன்றும் பல உள. யாழ்ப்பாணத்திலேயுள்ள குரும்பை கட்டி என்னும் ஊரின் பெயரினை நோக்குக.

அன்றி, இக்குரும்பைகள் முற்றி நுங்காகும்பொழுது பனைகளில் வாழும் அணில் கொத்துவதினாலே அவற்றுட்சில

படிப்பகம்

www.padippakam.com



கீழே விழும். இவற்றையும் விடியற் புறங்களிலே இளைஞர் சென்று பொறுக்கிப் போவர். நுங்கை அரிந்து அவற்றுட் கொந்தாது எஞ்சியிருக்கும் கண்களைக் குடித்துவிட்டு மேற் றோலைச் சீவி ஆடுமாடுகளுக்கு உணவாய் வைப்பர். இவ் வுணவைச் சேர்வை என்பர். பருவமான நுங்கைக் குலையாய் இறக்கிச் சிறுவரும் பெரியரும் கத்தியால் அரிந்து ஒவ்வொரு காயினுள்ளும் இருக்கும் நுங்கைக் கைவிரலினாலே தோண்டிக் குடித்து இன்புறுவர்.

நுங்கு முற்றிச் சீக்காய் ஆகும். அதன் பின்னர் அது பழுத்துப் பனங்காயாய் விழும். ஆனி, ஆடி மாதங்களே பெரும்பாலும் பனங்காய்க் காலமாக இருக்கும். அக்காலத் திலே காணிகள்தோறும் கொட்டில் கட்டி மக்கள் பனங் காய்க்குக் காவல் புரிவர். அவ்வாறு இருந்து பனங்காய் விழ விழ ஓடிச் சென்று அவற்றைப் பொறுக்கி ஓரிடத்திலே குவிப்பர். பருவமாகப் பழுத்த பனங்காயைக் காலையிலே உண்பர்.

இவ்வாறு ஓடிப் பனங்காய் எடுப்பதைக் குறித்து மேல் வரும் நொடி மக்களுக்குள்ளே வழங்கும்:—

காட்டு மல்லிகை பூத்த பூ
கருமணலிலே விழுந்த பூ
வேடரோடி எடுத்த பூ
விரும்புராசா மணந்த பூ
என்ன பூ?

இதற்கு விடை பனங்காய்.

உண்ணும் பொருட்டு எடுக்கும் பனங்காய் உண்ணச் சுவையுள்ளதோ என்று அறிவதற்கு மோந்து பார்ப்பர். அன்றியும் உண்ணுவதற்குச் சில குறிப்பிட்ட மரத்துப் பனங் காய்களையே எடுப்பர். அப்படியான பனைகளுக்குப் பெயர் வைத்திருப்பர். பனங்கட்டி வடலி, கருப்பை, தோரை, கட்டைச்சி, முடத்தி, கொட்டாங்காய்ச்சி முதலிய பெயருள்ள பனைமரங்களை இன்றும் யாழ்ப்பாணத்திலே காணலாம்.

www.padippakam.com



பனங்காயைத் தேர்ந்தெடுத்து அதனை நெருப்பிலே சுடுவர் பின் அதனை ஆறவைத்துக் கொட்டையாகப் பிரித்து அதன் மேற்றோலை இழுத்தெறிவர். பின்பு ஒரு கொட்டையை எடுத்துத் தண்ணீர் விட்டுக் குழைத்துக் கையிலே பிடித்துக் கொண்டு அதன் கழியை உறிஞ்சி உறிஞ்சிப் பருகுவர். பெரும்பாலும் சுடாமலே பனங்காயை உண்பர். இருக்காழிப் பனங்காயிலுள்ள செத்தோம்பி முதலியவற்றை நீர்விட்டு ஒரு பானையிற் கரைத்து இரண்டு மூன்று நாளாகப் புளிக்க வைப்பர். இதனைப் ''பனங்காடி'' என்பர். பழுத்த பனங்காய்க் கொட்டையைத் தோல் நீக்கி இக்காடியிலே தோய்த்துச் சிறிதுநேரம் ஊற வைத்துப் பின் எடுத்துப் பிசைந்து உண்பார். சில வேளைகளில் புளியும் பூவையும் தண்ணீரில் ஊறவைத்து அத்தண்ணீரோடும் பனங்காயைக் குழைத்து உண்பார்.

பனங்காய் தொகையாகச் சேரும்பொழுது அப்பனங்காய்களைப் பினைந்து பனாட்டுப் போடுவர். நீளமானவையாய் இரண்டு மூன்று பந்தரிட்டு ஒவ்வொரு பந்தரின் மேலும் ஒவ்வொரு நீளமான பாயினைப் பரப்புவர். பின்னர், அப்பந்தரின் கீழ்ப் பெண்கள் இருந்து பனங்காயை உரித்துப் பெரிய கடகங்களிலிட்டுப் பனங்காடி விட்டுக் கடகத்துக்கு இவ்விரண்டு பேராய் இருந்து பினைவர். பினைந்து முடிந்ததும் கொட்டைகளை அப்புறப்படுத்திக் கடகங்களிலுள்ளகழியைச் சீலைத்துண்டினால் வடிப்பர். இவ்வாறு தும்பு இல்லாது சுத்தமாக வடித்த பின்பு, அக்கழியைப் பந்தரிலுள்ள பாயிலே பரப்பி வெய்யிலிற் காய விடுவர். அடுத்த நாளும் முதனாளூற்றிய கழியின்மேலே கழியை ஊற்றிப் பரப்பிக் காய விடுவர். படைபடையாகக் கழியை ஊற்றிப் பலநாள் காய விட்டபின்; அதனைச் சத்தகத்தால் நீள் சதுரமாகக் கீறித் துண்டாடி, ஒவ்வொரு துண்டையும் அச்சத்தகத்தினாலே பாயினின்று கவனமாகக் கிளப்பி எடுப்பார். இவ்வாறு எடுத்த பின்பு ஒவ்வொரு துண்டையும் இரண்டாய் மடிப்பார். அத்துண்டுகளைச் சிலநாள் வெய்யிலிற் காயவைத்து விட்டுப்

www.padippakam.com



பனை ஓலையால் இழைத்த தொக்கடி, கூடை முதலியவற்றுள் வைத்து மூடி அடுப்புக்களுக்கு மேற் கட்டப்பட்ட பரண்களில் அடுக்குவர். அடுப்பிலிருந்து எழும் சூட்டினால் பனாட்டு இழகிப் பழுதுபடாது நெடுநாள்இருக்கும். இரண்டு மூன்று முறை மட்டும் கழிவார்த்துக் காய விட்டுப் பனாட்டு எடுப்பதும் உண்டு. முன்னே கூறிய பனாட்டுத் தட்டுப் போல இத்தட்டுக்கள் தடிப்பாய் இரா. இப்பனாட்டைத் தோற்பனாட்டு என்று அழைப்பர். முதற்கூறிய பனாட்டுத் தட்டுக்களைச் சதுர வடிவமான சிறுச்சிறு துண்டுகளாய் வெட்டி அவற்றினை மட்குடங்களில் இட்டுப் பனம்பாணி ஊற்றி அக்குடங்களின் வாயை நல்லாய் அடைத்து வைப்பர். அப்பாணிக்குள்ளே பொரித்த அரிசி, எள்ளு, சீரகத்தூள், மிளகுத்தூள் ஆகியவற்றைப் போடுவர். பல மாதங்கள் சென்றபின்னே அப்பானைகளைத் திறந்து பனாட்டினை எடுப்பார். இதனைப் பாணிப் பனாட்டு என்பர்.

இவ்வாறு பனங்காய் பினைந்து பனாட்டுப் போடுதல் பனைகளிற் பனங்காய் குறைய முடிந்துவிடும். அப்பொழுது புதிதாகப் போட்ட பனாட்டும் தின்னக்கூடிய நிலைக்குவந்து விடும். புதுப்பனாட்டு உடலுக்கு அவ்வளவு நல்லாயில்லை என்று பெரும்பாலும் தின்பதில்லை. இந்நிலையிலே அப்பனாட்டு பினைந்த இடத்திலே நல்ல நாட் பார்த்து ஒரு நாளிலே பனாட்டுப் படையல் வைப்பர். அன்று உறவினர், நண்பர் முதலியோரை அழைத்து அப்படையலிற் பங்கு பற்றச் செய்வர். பனாட்டுப் படையல் வைப்பது பொழுது படும் நேரமே. இது பெரும்பாலும் ஆவணி புரட்டாதி மாதங்களில் வரும் நிலவுக் காலங்களில் நடைபெறும். அன்று பெண்கள் ஒன்றுகூடிச் சாமைமாவுடன் பனங்காய்க் களியைச் சேர்த்துப் பனங்காய்ப் பணியாரம் சுட்டுத் தட்டுத் தட்டாய்ச் சுளகிலே அடுக்குவர். வடை முறுக்கு முதலிய பனங்காயோடு தொடர்பில்லாத வேறு பணியாரங்களைச் சுடுதலும் உண்டு. ஆண்கள், ஒன்று சேர்ந்து நிலத்தில் குழியடுப்புத் தோண்டி அண்டா முதலியவற்றுள் சோறாக்கிக் கறிகளும்

www.padippakam.com



சமைப்பர். கறிவகைகளுள் மரக்கறி வகைகளைவிட மீன், இறைச்சி முதலியவற்றையும் சமைப்பர். ஒவ்வொரு காணிக்கும் ஒவ்வொரு சீவற்காரன் இருப்பான். அவனைப் ''பத்தாளன்'' என்றழைப்பார். அவனே, அக்காணிக்குள் வரும் வருமானம் யாவற்றையும் எடுக்க அக்காணிக்காரனுக்கு உதவி செய்பவன். காணிக்காரனுக்கு இருக்கும் உரித்துப் போல அவனுக்கும் அக்காணியில் உண்டு. ஆகையால் அப்பத்தாளன் இன்றிப் பனாட்டுப் படையலோ பனைப் பிரயோசனத்தைப் பற்றிய வேறேதும் கொண்டாட்டமோ நடத்த முடியாது. பனாட்டுப் படையலினின்று அக்காணிக்குள் இருக்கும் பனையொன்றிற் சீவியிறக்கிய ஒரு முட்டிக் கள்ளுக் கொண்டு வருவான். அன்றியும் அங்கு வந்தோர் யாவரும் சோறிட்டு உண்ணுவதற்குப் போதியளவு தட்டுவங்களையும் பனையொன்றிலேறி வெட்டிய ஓலைகளாற் பிடித்து வைப்பான். அப்புறம் படையல் தொடங்கும். பந்தருக்குக் கீழே, குத்து விளக்குகளேற்றி நிறைகுடம் வைத்து வெற்றிலை பாக்குப் பழம் முதலியவை பரப்பி, பிள்ளையார் பூசை பண்ணியபின், மூன்று வாழையிலை விரித்து சோறு கறி முதலியவற்றைப் படைப்பர். மச்சமாமிசப் பொருட்களை இப்படையலில் வைப்பதில்லை. பனாட்டுத் தட்டுகளும் படைத்திருக்கும். ஆனால், பனங்கொட்டைக் குவியலுக்கருகில் பந்தங்கொளுத்தி தட்டுவங்களில் சோறு கறி முதலியவற்றைப் படைப்பர். இப்படையலுக்கே மீன் கறி முதலியவற்றை வைப்பதுடன் கருவாடும் சுட்டுப் படைப்பர். அதனொடு கள்ளும் வைப்பர். அங்கு பனாட்டு ஒரு தட்டுவத்தில் வைக்கப்பட்டிருக்கும். உணவுப் பொருள் யாவும் படைத்தபின்னர், சாம்பிராணித் தூபங்காட்டி, கற்பூரங் கொளுத்துவான் காணிக்காரன். அப்பொழுது சீனவெடி எறிவெடி முதலியவை ஒலிக்கும். யாவரும் பயபக்தியோடு வணங்கி நிற்பர். அதன்பின் சிறிது நேரஞ் சென்றதும் காணிக்காரன் பத்தாளனைக் கூப்பிட்டுப் பனங்கொட்டைக் குவியலுக்கருகிலிருக்கும் கள்ளினை எடுத்து அவனுக்குக் கொடுப்பான். அவன் அதைக் குடித்து முடித்

படிப்பகம்

www.padippakam.com



ததும் கொட்டைக் குவியலிலிருக்கும் ஒரு தட்டுவத்தை எடுத்து அவனுக்கு வழங்குவான். அங்கிருந்து அவன் அதனை உண்ணுவான். அவன் உண்டு கால்கை அலம்பி யதும், ஏனையோருக்குச் சோறு தட்டுவங்களில் வழங்கப் படும். காணிக்காரனின் உறவினரும் பத்தாளனின் உறவி னரும் ஒருங்கிருந்து சோறு பனாட்டு முதலியவற்றை அருந்தியின்புறுவர்,

அதன் பின்பு குவியலில் உள்ள பனங்கொட்டைகளை எடுத்துப் பாத்தி போடுவர். முளைத்த கொட்டைகளைப் பிறம்பான பாத்தியாய்ப் போடுவர். இப்பாத்தி முளைத்துக் கார்த்திகை மாதமளவில் பருவமான கிழங்காய் விடும். கார்த்திகை விளக்கீட்டன்று அதனைக் கிண்டிக் கிழங்குகளை எடுத்து அவித்து ஓரிடத்தில் வைத்துப் படைப்பர். அன்றே அக்காணியிலுள்ளார் முதன்முதல் பனங்கிழங்கு உண்ணுவது. இப்படையல் சிறு பிள்ளைகளுக்கு மிகுந்த களியாட்டாக இருக்கும். எஞ்சிய கிழங்குகளைக் காய வைத்து ஒடியலாக்கு வர். மார்கழி மாதத்தில் வரும் பெருங்கதையிலன்று அவ்வொடியலை இடித்து மாவாக்கிக் கீரை வகை, காய்கறி வகை, மாங்காய் முதலியவை சேர்த்துப் பனையோலையா லிழைத்த நீத்துப் பெட்டியில் வைத்து அவிப்பர். அன்று பொழுதுபட அவ்வீட்டின் ஓரறையில் அப்பிட்டுகளை வைத்துப் படைப்பர். அது முடிந்ததும் கதவினைச் சாத்தி விட்டு யாவரும் வெளியே வந்து நிற்பர். அதன் பின் படைப் புவர் உள்ளே சென்று நீர் தெளித்து மடைமாற்றி, அப் பிட்டிற் கொஞ்சம் எடுத்துச் சென்று வெளியே ஓரிடத்திற் போட்டுக் கொண்டு சென்ற நீரை வெளியே ஊற்றி விடுவர். பின் யாவருக்கும் ஒடியற் பிட்டு வழங்கப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்தமிழர் உணவு

பழைய காலத்தில் வாழ்ந்த எம் மூதாதையரின் வாழ்க்கை முறையினை அவர் எமக்கு அளித்த அருஞ் செல்வங்களாகிய இலக்கியம், ஓவியம், சிற்பம், சாசனம் முதலியவற்றால் அறிகின்றோம். ஆனால், எமக்குச் சிறிது காலத்துக்கு முன்னே வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்களை இலக்கியம் முதலியவற்றாலன்றி, எமது தாய் தந்தையர் முதலியோர் எமக்கு ஓய்வு நேரங்களில் பொழுது போக்கிற்காகக் கூறியவற்றிலிருந்தும் அறிகின்றோம். கடந்த ஐம்பது ஆண்டுக்காலம் உலகம் முழுவதற்கும் ஒரு புதிய நிலையை உண்டாக்கி இருக்கின்றது. ஆறுதலாக ஒரு குறித்த வேகத்திற் சுழன்று கொண்டு வந்த காலச் சக்கரம், இக்காலவெல்லையில் கண்டு பிடித்த வானூர்திபோல, முன்னொரு போதுமில்லாத வேகத்தோடு ஓடிக்கொண்டிருக்கின்றது. அதனால், உலகத்தினர் வாழ்க்கை முறைகளுள்ளும் பலப்பல மாற்றங்கள் உண்டுபட்டுள்ளன. எமது இலங்கையில் வாழும் தமிழ்க் கூட்டத்தாருள்ளும் இக்காலவெல்லை எவ்வகையான மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றது என்று சிறிது நோக்குவாம்.

மனிதனுடைய வாழ்க்கையில் மிக இன்றியமையாதன ஊணும் உடையும், இவ்விரண்டையும் சிறிது கவனிப்பாம். பண்டைக் காலத்திலே எமது பெரியோர், 'உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்' என்று கூறிப் போயினர். எமது மக்கள் ஊணைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

படிப்பகம்

www.padippakam.com



பழங்காலம் தொடக்கம் தமிழ் மக்கள் அரிசிச் சோற்றையே பெரும்பாலும் உண்டுவருவர். நெல்லையன்றி நாட்டில் அங்கங்கே வளரும் சாமை, தினை, குரக்கன், சோளம் முதலிய சிறு தானியங்களையும் அவர் உண்டு வந்தனர். கிழங்கு வகைகளையும் சேர்த்துக் கொள்ளுவர்.

சென்ற ஐம்பது ஆண்டுகளாக இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் உண்டு வந்த உணவு வகைகளைச் சிறிது ஆராய்வாம். அரிசிச் சோறு முதன்மையான உணவாய் இருந்த போதும் இக்காலத்தில் உண்பது போல அதனை ஒவ்வொரு நேரமும் உண்டு வரவில்லை. பெரும்பாலும் தினைச் சோறு, வரகுச் சோறு முதலியவற்றையே நாள் தோறும் உண்பர். இவற்றைவிட பனை ஒடியற்பிட்டு, பனை ஒடியற்கூழ், பனங்காய், பனாட்டு, குரக்கன் பிட்டு ஆகியவற்றை பெரும்பாலும் தமது உணவாகக் கொள்வர். அமாவாசை, பறுவம் முதலிய விரத நாட்களிலேதான் அவர் பொதுவாக அரிசிச் சோறு தின்பர். அதனால் அந்நாளையில் நாட்டு வயல்களிலே உண்டாகிய நெல்லு இங்கு வாழும் மக்களுக்குப் போதியதாய் இருந்தது.

சுழன்றது காலச் சக்கரம். சிறிது சிறிதாக நாகரீகச் சுழலில் மக்கள் அகப்பட்டனர். அதனால், தாம் இதுகாறும் உண்டு வந்த சிறுதானிய வகைகளையும், கிழங்கு வகைகளையும் பனம் பண்டம் முதலியவற்றையும் வெறுத்து நெல்லுச் சோற்றுக்கு அடிமையாயினர். முன்னரிலும் நெல்லு அதிகம் தேவையாயிற்று. அதனால் பாய்க்கப்பல், தோணி முதலியவற்றால் தென்னிந்தியாவிலிருந்து நெல்லைக் கொண்டு வந்தனர். சிறிது காலத்தில் நெல்லின் தேவை மேலுங் கூடியது. அப்பொழுது பர்மா தேசத்தில் ஏராளமாகயிருப்பதை வியாபாரிகள் அறிந்து அங்கிருந்து அதனை இந்நாட்டுக்கு கொண்டுவரத் தொடங்கினர்.

ஆண்டுதோறும் பாய்க்கப்பலில் புரட்டாதி மாதம் பர்மாவிலுள்ள அரக்கன் என்னும் ஊருக்குப் பாய் எடுத்துச்

www.padippakam.com



செல்லும். ஒரு மாதம்வரை ஓடிய பின்னர் அவ்வூரை அடையும். வங்காளக்குடாக் கடலில் அம்மாதங்களிலே அடிக்கும் பருவக் காற்றாகிய வாடைக் காற்று ஓரளவுக்கு ஓய்ந்த பின்னர் மார்கழி மாதம் மட்டில் நெல்லை ஏற்றிக் கொண்டு இலங்கைக்குப் புறப்பட்டு தை மாதம் அளவில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேயன்துறை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணப் பட்டினம் முதலிய இடங்களை அடைந்து அக்கப்பல்கள் தாம் ஏற்றிவந்த நெல்லைப் பறிக்கும். இவ்வாறு இலங்கைத் தமிழர்களுக்குள் நெல் முக்கியமான உணவாக அமைந்ததும் மக்கள் யாவரும் அதை நாடோறும் உண்ணத் தொடங்கினர். அது மட்டுமின்றிப் பணம் படைத்தவர்கள் சம்பா முதலிய உயர்ந்த சாதி நெல்லரிசிச் சோற்றை அருந்தும் வழக்கத்தை மேற்கொண்டனர். ஏழைகள், தரம் குறைந்த நெல்லை உண்டு வந்தனர். இதற்குமுன் மக்களுக்குள் பெருவழக்காயிருந்த ஒடியற் பிட்டு, குரக்கன் பிட்டு முதலியன யாவும் புறக்கணிக்கப்பட்டன. உலகப் போர் முதலிய நெருக்கடிகள் வந்து நெல்லு நாட்டில் வராது குறைந்தாலொழிய இப்பொருட்களை எட்டியும் பாரார்.

முக்கியமான உணவு நெல்லுச் சோறாக அமைந்ததும் நெல்லிலிருந்து சிற்றுண்டிப் பொருட்களையும் தேடினர். அரிசிப் பிட்டு, இடியாப்பம் முதலியவை முற்றிலும்நெல்லரிசி மாவினால் அமைந்தவை. தோசை, இட்டலி முதலியவை நெல்லரிசியோடு உழுத்தமாவும் சேர்ந்தவை. இச்சிற்றுண்டிகள் யாவும் பொதுமக்கள் உணவாகவும் அமைந்தவை, ஆனால், பணம் படைத்த உயர் மக்கள் இவற்றை விட அரிசி மாவோடு உழுத்தம் மா, சருக்கரையும் சேர்த்து ஆலங்காய் பிட்டு, எண்ணெய்ப் பிட்டு, உழுத்தங்களி முதலியவற்றைத் தேடி தமது காலை உணவாக அமைத்துக் கொண்டனர். காலை உணவுப் பொருட்களை உண்ட பின்னர் பால் அல்லது மோர் குடிப்பர். தேநீர், கோப்பி முதலியவை பிற்காலத்திலேயே

படிப்பகம்

www.padippakam.com



வந்து அரங்கில் ஏறியவை. ஆனால், பொதுமக்கள் காலை உண ..ன் பின் தண்ணீரையே குடித்தனர். எனினும், பொது மக்களுக்குள் காலை உணவாகப் பெருவழக்கில் இருந்தது பழஞ்சோறு. இராவிலே தண்ணீர்விட்டு வைத்த சோற்றைப் பிழிந்து தண்ணீரை நீக்கி, இராவிலே எஞ்சிய கறிகள் யாவற்றையும் ஒன்று சேர்த்துக் கவளமாகத் திரட்டிக் கையிலே ஏந்தி வைத்துண்பர். பல கறிகளும் ஒன்று சேர்ந்தமையால் அச்சோறு மிகச்சுவையாக இருக்கும். அதன்பின் தண்ணீரையோ அன்றிப் பழஞ்சோற்றுத் தண்ணீரையோ வயிறாரக் குடிப்பர். அவ்வாறு இராவிலே வைத்த கறி இல்லாவிட்டால், சோற்றைப் பிழிந்து மோர் ஊற்றி ஊறுகாயும் சேர்த்து வெண்காயம் மிளகாயோடு அருந்துவர். மோர் கிடையாதுவிடின் வெறுமனே சோற்றுத் தண்ணீரோடு வெண்காயமும், மிளகாயும் சேர்த்து உண்ணுவர். அச்சோற்றுக்குள் சிறிது எலுமிச்சம் புளியையும் பிழிந்துவிட்டால் அவ்வுணவின் சுவை பேசத் தேவையில்லை.

அந்த நாளையிலே மக்கள் பொதுவாக மரக்கறியையே உண்ணுவர். ஒரு சிறிது மீனும் சேர்த்துக் கொள்ளுவர். வசதி கிட்டின் வந்தால் இடையிடையே ஆட்டிறைச்சி, கோழி இறைச்சியும் அருந்துவர். இவ்வுணவுகள் பழங்காலந் தொட்டுத் தமிழ் மக்கள் உண்டு வந்தவை. ஆறுமுக நாவலரவர்கள் காலத்திலே சைவ சமயமும், ஆகமங்களிற் கூறியுள்ள அதன் ஆசாரங்களும் சைவ வினாவிடை முதலிய சிறுச்சிறு நூல்கள் மூலம் மக்களுக்குப் போதிக்கப்பட்ட பொழுது ஒரு தொகையான மக்கள் புலாலுணவை விட்டொழித்தனர். கடுஞ் சைவ ஒழுக்கத்திலே நிற்க விரும்பினோர் கண்காணா மற் சாப்பிடும் முறையையும் கைக்கொண்டனர். ஆனால், பெரும்பாலான மக்கள் வெள்ளி, செவ்வாய் விரத தினங்கள் முதலிய நாட்களிலே புலாலுணவை ஒறுத்துச் சமய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர்.

காலம் மாறியது. ஆங்கிலக் கல்வி மூலம் ஆங்கிலநாட்டு வழக்கங்கள் வந்து புகுந்தன. அதனால், மக்களின் ஆசாரங்

படிப்பகம்

www.padippakam.com



களும் ஒருவகையில் மாற்றமடைந்தன. அதனோடு ஊண் வகைகளும் மாறின. ஆங்கிலம் கற்று அரச உத்தியோகம் பார்க்கும் மக்கள் நாட்டிலே பலப்பல பாகங்களுக்கும் போக வேண்டி நேர்ந்தது. அதனால் அவர் சமய ஆசாரப்படி முற்றாக நடந்து கொள்ள முடியவில்லை. அதனாலே தம் பழக்கவழக்கங்களை ஒருவகையாய் மாற்றினர். அதனோடு ஊண்வகையும் மாற்றமடைந்தது.

சைவ சமயப்படி தள்ளப்பட்ட மாமிச போசனம் மேல் நிலைக்கு வந்தது. அதனோடு அடியோடு நீக்கப்பட்டிருந்த மதுபானமும் மேற்படியில் உயர்ந்தது. முதன் முதல் ஆங்கிலக் குடிவகையான விசுக்கி, பிராந்தி முதலியவற்றைக் குடித்தல் பெருமையென மதிக்கப்பட்டது. அதன் பின்னர் உலகப் போரின் காரணமாக இக்குடிவகைகள் அகப்படாது விலை யேறியபோது வடிச் சாராயம் அவற்றின் நிலையை எடுத்தது. கள்ளும் சுகத்துக்காகக் குடிக்கலாம் என்ற நிலையும் வந்து விட்டது.

இவற்றைவிடச் சிறுபான வகைகளில் கோப்பி, தேநீர், பண்டைய மோர், பழந்தண்ணீர் முதலியவற்றின் இடத்தைப் பிடித்துக் கொண்டன. இக்காலத்தில் காலையில் நித்திரை விட்டு எழுந்ததும் வறிய இல்லங்களிலேகூடக் கோப்பி அல்லது தேநீரையே அருந்துவர். அதன் பின்னரே பல் துலக்கல் முதலிய யாவதும், இக்காலத்தை ஒரு வகையில் கோப்பி, தேநீர்க் காலம் என அழைக்கலாம்.

www.padippakam.com

# யாழ்ப்பாணத்துப் பழக்க வழக்கங்கள்

யாழ்ப்பாணத்தில் வழக்கில் இருக்கும் பழக்கவழக்கங்கள் காலத்திற்குக் காலம் மாறி வருகின்றன. ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்குமுன் அங்கு நிலவிய பழக்கவழக்கங்கள் இன்று மிக அருகியே வழங்கி வருகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள பழக்கவழக்கங்கள், பொதுவாகத் தமிழ்நாட்டிலுள்ள பழக்க வழக்கங்களுடன் ஒற்றுமையுடையனவாயிருந்த போதிலும், இந்நாட்டிற்கே சிறப்பான பழக்கவழக்கங்களும் உள்ளன.

ஏறக்குறைய நாற்பது ஐம்பது ஆண்டுகட்குமுன் ஆண்கள் கன்னக்குடுமி முடிந்து வந்தனர். இவ்வழக்கம் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பிலும் வழங்கி வந்தது. இப்பொழுதும் மட்டக்களப்பின் நாட்டுப் பகுதிகளிலே சிறு பிள்ளைகள் இவ்வாறு கன்னத்தில் கூந்தலை முடிந்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் இவ்வாறு கன்னக்குடுமி முடிபவரை "கன்னக்குடுமியர்" என அழைத்தனர். இவ்வாறு குடுமி முடியும் வழக்கம் இன்றும் மலையாளத்திலே வழக்கில் இருக்கிறது. மிகப்பழைய காலத்திலே மலையாளப் பகுதியிலிருந்து மக்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து குடியேறியிருக்க வேண்டும். அவருக்குப் பின்னரே ஏனைய தமிழ்ப் பாகங்களில் இருந்து மக்கள் வந்திருத்தல் வேண்டும். ஆனெனில், யாழ்ப்பாணத்தில், வழக்கில் இருக்கும் பேச்சு

www.padippakam.com



மொழியில், மலையாள மொழியின் அம்சங்கள் பலவற்றை இன்றும் காணலாம். 'அவரட்ட,' 'இருக்கைக்க', 'என்ரை' என்பன இங்கு நோக்கற்பாலன. யாழ்ப்பாணத்திற்கென வழக்கில் இருக்கும் ''தேச வழமை'' என்னும் சட்ட முறையை ஆராயும்போது அதற்கும், மலையாளத்திலுள்ள ''மருமக்கள் தாயச் சட்டத்திற்கும்'' நெருங்கிய தொடர்பு இருக்கின்றதெனச் சட்டநூல் வல்லார் கூறுவர். தேச வழமை சொத்துக்களைப் பிரித்துக் கொடுத்தலினையே பாதிக்கும். யாழ்ப்பாணத்திலே ஒருவன் மணம் முடிக்கும்போது, சீதனம் வாங்குதல் வழக்கம். பெண் பகுதியாரிடம் சீதனம் வாங்கி மணம் முடித்த பின், மனைவி சந்ததியின்றி இறக்க நேரிடின், தான் அவன் தாய் தந்தையரிடமிருந்து வாங்கிய சொத்து முழுவதையும் திருப்பி மனைவி வீட்டிற்குக் கொடுத்துவிட்டு வெளியேறவேண்டும். ஆனால், பிள்ளைகள் இருப்பின் அச்சீதனப் பொருளைக் கொடுக்காது தானே வைத்துப் பிள்ளைகளைப் பாதுகாத்து வளர்த்து, அம் பொருட்களை அவர்களிடம் ஒப்புவித்தல் வேண்டும். இலங்கையின் ஏனைய பகுதிகளில் ''ரோமன் டச்சுச் சட்டம்'' என்னும் சட்டமுறை வழக்கில் இருக்கிறது. ஆதனத்தைப் பொறுத்தமட்டில் இச்சட்டம், யாழ்ப்பாணத்தில் செல்லுபடியாகாது. தேசவழமை முறையே செல்லுபடியாகும். ஆனால், மட்டக்களப்பிலே ''முக்குவச் சட்டம்'' என்னும் சட்டமுறை நடைமுறையில் உள்ளது. அங்கும் இச்சட்டம் ஆதனத்தைப் பற்றியே வழக்கிலுள்ளது. அங்கு ஒருவன் ஒரு பெண்ணை மணஞ் செய்யும்போது, அவனுக்குப் பெண்வீட்டார் யாழ்ப்பாணத்தில் கொடுப்பது போலவே சீதனம் கொடுப்பார். ஆனால், அதன் வழக்குமுறை யாழ்ப்பாணத்து முறைக்கு வேறாயது. இங்கு மணம் முடித்தவன் மனைவி சந்ததியின்றி இறக்க நேரிடின், அவனுக்குச் சீதனமாய் வழங்கிய சொத்து முழுவதையும் தானே அடைகிறான்.

நிற்க, யாழ்ப்பாணத்திலே, சில காலத்திற்கு முன் வழக்கில் இருந்த பழக்கவழக்கங்களிற் சில வினோதமானவை.

www.padippakam.com



யாக இருக்கின்றன. அவற்றுள் ஒரு குடும்பத்திலே பிள்ளை பிறத்தலை இங்கு நோக்குவோம். ஒரு பெண் கர்ப்பிணியாகி, பத்து மாதமும் சென்று, பிள்ளை பிறக்கும் நாட்களில் அவர்களுக்குள் வழக்கில் இருந்த பழக்கவழக்கங் களில் சில வற்றை இங்கு நோக்குவோம்.

பெண்சாதி கர்ப்பமுற்றால், கணவன் கடைப் பிடித்து ஒழுக வேண்டிய முறைகளுட் சில மேல் வருமாறு. மயிர் களைதல் ஆகாது; மனை கோலல் ஆகாது, சாவீட்டிற்குப் போக நேர்ந்தால் சுடலை செல்லல் ஆகாது; ஈமச்சடங்கு களிற் பங்குபற்றலாகாது; தூரப் பிரயாணம் செய்தல் ஆகாது: கடல்கடத்தல் முற்றுமாகக் கூடாது. ஏழாம், ஒன்பதாம் மாதங்களில் நல்ல நாட் பார்த்துப் பிள்ளைப் பெறுவிற்கு வேண்டிய நாட்சரக்கு வாங்குதல் வேண்டும், இந்தச் சரக்குகள் ஆவன; உள்ளி, சுக்கு, திப்பிலி, மிளகு, மல்லி ஆகியனவாம். இங்கு வாங்கி வந்த மிளகினை எண்ணிப் பார்த்து, பிறக்கப்போவது ஆண் குழந்தையோ, பெண்குழந்தையோ வெனச் சாத்திரம் பார்ப்பதுண்டு. மிளகை எண்ணிப் பார்க்கையில், ஒற்றையானால் ஆண் குழந்தை, இரட்டையானால் பெண்குழந்தை, என மதிப் பிடுவர். இச் சரக்குகளை வாங்கி ஓர் புதுப்பானையில் இட்டு வீட்டிற்குக் கொண்டுவரல் வேண்டும். இச் சரக்குகளை அவித்து, பின்பு அரைத்து, அதனைப் பிள்ளை பிறந்த பின்பு தாய்க்கு உண்ணக் கொடுப்பார். இதனைக் காயம் எனக் கூறுவர்.

வயிற்றுநோக்காடு தொடங்கியவுடன் கணவனே மருத்து வச்சியிடம் சென்று அவளை அழைத்து வருதல் வேண்டும். பின்பு குடிமகனான வண்ணானுக்கு அறிவித்தல் வேண்டும். வண்ணான் தனது மனைவியிடம் வேண்டிய சேலைகளைக் கொடுத்து அனுப்புவான். வீட்டிலே பிள்ளை பெறுவதற்காக ஓர் அறையை ஒழுங்குபடுத்தி வைப்பர். பெரும்பாலும் பிள்ளைப்பேறு நடக்குமிடம், அடுப்படியாகும். வயிற்று நோ

www.padippakam.com


தொடங்கியவுடன் பெண்ணுக்கு நெருங்கிய தொடர்புடைய சுமங்கலி ஒருத்தி பிள்ளைப் பேறு நடக்கும் அறையில் நிறை அறையில் நிறைநாழி வைப்பர். நிறைநாழி என்பது, நாழி அளவுள்ள ஒரு கொத்தில் நெல் நிரப்பி அந்நெல்லில் காம்புச் சத்தம் ஒன்றினைக் காம்பானது மேலே நிற்க நாட்டி வைப்ப தாகும். இங்கே குறிப்பிட்ட நிறைநாழி பிரசவ வீட்டினன்றிச் சுமங்கலியொருத்தி காலமாகிய பொழுது, அவள் ஈமக் கிரியைகள் நடைபெறும்வரை, வீட்டில் வைப்பதும் வழக்கம். பிரசவம் முடிந்து சிலநாளையின் பின், பக்திபூர்வமாய், முதற்குடி மகனாய அம்பட்டனுக்கு நிறைநாழியை வழங் குவர். அவ்வாறு வழங்கும்போது, வண்ணான் பாவாடை விரிக்க, அதன்மேல் அம்பட்டன் தன் ஒற்றுடைத் துண்டைப் போடுவான். அதிலே குழந்தை பிறந்த வீட்டிற்குரிய முதாட்டி ஒருத்தி நிறைநாழியைக் கொண்டு வந்து வழங்கு வள். பிரசவ வீட்டில் வேப்பெண்ணெய் விளக்கு எரியும். உற்றார் உறவினரும், அயலிலுள்ள பெண்களும் வந்து அருகிருப்பர். அவர் யாவர்க்கும் வெற்றிலை வழங்கப்பட் கும். மருத்துவிச்சியே அங்கு முதன்மையிடத்தை வகித்தாள். யாவரும் அவள் கட்டளைப்படியே ஒழுகுதல் வேண்டும். பிள்ளை பிறந்தவுடன் மருத்துவிச்சி மேல்வருமாறும், பிற வாறும் கூறி வாழ்த்துவாள்.

1. நெல்லுப் பொதியோடும் வந்தீரோ—தம்பி
நெல்லு மலைநாடும் கண்டீரோ—தம்பி

2. உள்ளிப் பொதியோடும் வந்தீரோ—தம்பி
உள்ளி மலைநாடுங் கண்டீரோ—தம்பி

3. அரிசிப் பொதியோடும் வந்தீரோ—தம்பி
அரிசி மலைநாடுங் கண்டீரோ—தம்பி

4. வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ—தம்பி
வேந்தர் தம் மணிமுடியும் கண்டீரோ—தம்பி

வெளியில் இருக்கும் ஆண்கள் வாழ்த்துக் குறிப்பால் குழந்தை பிறந்தமையை அறிந்து ஆண்குழந்தையெனின்

www.padippakam.com



ஒரு தடியைக் கையில் எடுத்து வீட்டுக் கூரையில் அடிப்பர். இவ்வாறு செய்வது, அந்த வீட்டில் ஆண் குழந்தையொன்று பிறந்திருக்கிறது என்று உலகிற்கு அறிவிப்பதற்கேயாம். பெண் குழந்தை பிறந்ததாயின், அதனை அறிவிக்க வேறு வகையான வாழ்த்து மருத்துவிச்சி பாடுவாள். கூரையில் தட்டுதலும் நடைபெற மாட்டாது. பிள்ளைக்குக் குறிப்பு எழுதுவதற்காக, பிறந்ததை அறிந்தவுடன், அடியளந்து நேரங் கணக்கிடுவர். இரவாயின் வானத்தே வெள்ளியின் நிலை கண்டு கணித்தனர். பிள்ளை பிறந்தவுடன் ஆண் குழந்தையெனின் கற்கண்டும், பெண் குழந்தையெனிற் சருக்கரையும் வழங்கப்படும்.

பிள்ளை பிறந்த நாள் முதல், நொச்சி, பருத்தி, பாவட்டை, ஆமணக்கு, வேம்பு ஆகியவற்றின் குழைகளை அவித்து தாய்க்குக் குழைவெந்நீர் வார்ப்பர். குழைவெந்நீர் வார்ப்பதற்கு முன் ஒரு கரண்டி வேப்பெண்ணெயைக் குடிக்கக் கொடுப்பர்.

ஐந்தாம் நாள் ''கொத்தி'' என்னும் பேயை அகற்றுமுகமாகச் சில சடங்குகள் செய்யப்படும். அன்று சோறு சமைத்துப் பலவகைக் கறிகளுமாக்கி மாலை நேரத்தில் மருத்துவிச்சியைக் கொண்டு பிரசவ அறையில் படைப்பிப்பர். அவள் உணவுப் பொருட்களை அப்பேய்க்குப் பரப்பி வைத்த பின் தென்னம்பாளையைக் கீறிக்கட்டிய சூள் ஒன்றைக் கையில் எடுத்து அங்கு எரியும் விளக்கில் கொளுத்தி தாயையும் பிள்ளையையும் சுற்றி ''தாயும் பிள்ளையும் சுகம், சுகம்'' என்று முடியும் பாட்டைக் கூறி வாழ்த்திவிட்டு, அறையின் மூலை முடுக்கு எங்கணும், சூளை மினுக்கி, ''செத்தைக்க பத்தைக்க நில்லாதை கொத்தியாத்தை'' என்னும் பாட்டைப் பாடிக் கொத்திப்பேயை அழைத்துக் கொண்டு போவாள். அவள் போகும்போது பிரசவம் நடந்த பாய், தலையணை, சேலை முதலியவற்றைச் சுருட்டிக் கொண்டு, கொத்தியின் படையலை ஒரு பழம் பெட்டியில்

படிப்பகம்

www.padippakam.com



இட்டு, தனது உணவையும் நல்ல பெட்டியில் இட்டுச் சூளை மினுக்கிய வண்ணம் கொத்திக்குப் பிரியமான பாட்டுக் களைப் பாடிக்கொண்டு ஒரு பாழடைந்த தனிமையான இடத்தில் பாய் முதலியவற்றை எறிந்து அங்கு கொத்தியின் உணவையும் வைத்து, சூளை நிலத்தில் உரஞ்சி நூர்ப்பாள். அவள் அதனை அவ்வாறு நூர்க்காது எரியும் படி அவ்விடத்தில் எறிந்துவிட்டுப் போனால், கொத்திப் பேய் திரும்பவும் பிள்ளை பிறந்த அறைக்கு வழி கண்டுபிடித்து வந்து பிள்ளையைத் தூக்கிக்கொண்டு போய் விடுமென நம்பினர். சூளை நூர்த்தபின் மருத்துவச்சி தனது உணவையும் கொண்டு வீடு செல்வாள். அவளுக்குக் காவ லாக யாராவது செல்லநேரிடின், அவர் திரும்பி வரும்போது கிணற்றடிக்குப் போய் கால் முகம் கழுவிச் சுத்தம் செய்து கொண்டே வீட்டிற்குள் வரவேண்டும்.

பதினோராம் நாள், தாய்க்கு எண்ணெய் தேய்த்து முழுக வார்த்துச் சிறந்த உணவுகள் கொடுப்பர். பிள்ளை பிறந்து இருபத்திஓராம் நாள்வரை தாயை வெயில் முகம் காணாது அறையிலோ, புறத்திண்ணையிலோ இருக்க விடுவர். ஆனால், குழந்தையோ நாடொறும் காலையில் உடம்பெங்கணும், நல்லெண்ணெய் தேய்த்து அங்கங்கள் அழகாய் அமையும்படி ஒவ்வொரு அங்கத்தையும் கையாற் பிடித்து இளம் வெய்யிலிற் கிடத்தி விடுவர். முகத்திற்கு எண்ணெய் தேய்த்து மூக்கு, காது, தலை முதலிய உறுப்புக் களை மூதாட்டி ஒருத்தி பிடித்து விடுவாள். அவ்வாறு ஒவ்வொரு அங்கத்தையும் பிடித்துவிடும்போது ஒவ்வொரு பாட்டுப் பாடுதல் வழக்கம். உதாரணமாக மூக்கைப் பிடிக்கும் போது,

''நாய்க்கு மூக்குண்டு — நரிக்கு மூக்குண்டு
நான் பெத்த மோனைக்கு, மூக்குவா,
மூக்குவா, மூக்குவா''

என்று பாடுவாள்.

www.padippakam.com



இருபத்தோராம் நாள் ஆனவுடன் தாய், வீட்டில் எங்கணும் உலாவுவாள். முப்பத்தோராம் நாள் துடக்குக் கழிப்பர். அன்று வீடு, கொல்லைப்புறம் யாவற்றையும் ஆமாறு கழுவி மெழுகிச் சுத்தம் செய்து கிணறு இறைத்து, யாவரும் முழுகித் தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து குடும்பப் புரோகிதரை அழைத்து வந்து புண்ணியானம் செய்விப்பர். அன்று ஐந்து குடி மக்களும் உற்றார், உறவினர், அயலவர், நண்பர் யாவரும் ஒருங்கு கூடுவர். பெரு விருந்து நடைபெறும். அற்றை நாள் குழந்தையைத் தொட்டிலில் இடும் மங்களம் நடைபெறும். தொட்டிலைத் தந்தை செய்வித்துக் கொடுப்பர். மாமன்மார் அரைஞாண் கயிறு கைகள் காலுகட்குக் காப்புகள் பஞ்சாயுதம் முதலிய அணிகலன்களைச் செய்வித்துக்கொடுப்பர். புண்ணியானம் முடிந்தவுடன் தாயிடத்தில் இருந்து தந்தை பிள்ளையை வாங்குவர். அவர், மாமனார் கையிற் கொடுப்பர். மாமனார் தாம் கொண்டு வந்த நகைகளை அணிந்து பிள்ளையைத் தொட்டிலிற்கிடத்துவர். இதற்கிடையில் நாமகரணஞ் சூட்டுதல் நடைபெற்றுவிடும். பின்பு அங்கு குழுவி இருக்கும் சிறிய தாய், பெரிய தாய் முதலிய பெண்கள் தாலாட்டி ஓராட்டுவர்.

1. ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
சீரார் பசுங் கிளியே தெவிட்டாத செந்தேனே
பேரார் குலக்கொழுந்தே பெருமானே ஆராரோ......

2. பச்சை இலுப்பைவெட்டிப் பால்வடியத் தொட்டில்கட்டி
தொட்டிலுமோ பொன்னாலை தொடுகயிறு முத்தாலே

3. முத்தென்ற முத்தோ, முதுகடலின் ஆணிமுத்தோ,
சங்கீன்ற முத்தோ, சமுத்திரத்தின் ஆணிமுத்தோ,
ஆராரோ ஆராரோ, ஆரிவரோ ஆராரோ
ஆர்டிச்சு நீரழுதீர் அஞ்சாதே கண்மணியே
அம்மான் அடிச்சாரோ, ஆமணக்கம் கம்புவெட்டி
பேத்தியடிச்சாளோ, பிரப்பந்தடியாலே
ஆச்சி அடிச்சாளோ, ஆவரசந்தண்டுவெட்டி

www.padippakam.com



உமக்கு,

முத்தளப்பான் செட்டி; முடிதரிப்பான் ஆசாரி
பட்டுவிற்பான் செட்டி; பட்டைவிலைமதிப்பான்
பட்டாணி
பூவாலை பாயிழைப்போம்; பொன்னாலே
காப்பிடுவோம்
சாவாமருந்தும் தந்திடுவோம் கண்ணுறங்கு.

தாலாட்டுப் பாடும்போது, தாம் நினைத்தவாறும், நேரத்திற்கு நேரம் மனதில் எழுந்தவாறும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறும் பாடுவர். மாமன் முதலியோர் குழந்தைக்குக் கொடுத்தது திருப்தியில்லாவிட்டால் தாய், அத்தாலாட்டில் அவர்களை வைதலும் உண்டு. திருப்தியாகக் கொடுத்தால் புகழ்தலுமுண்டு.

தாற்பத்தோராம் நாளில் குழந்தையைக் கோயிலுக்குக் கொண்டு போய் அங்கு, அக்கோயிலுள்ள கடவுளர்க்கு, விசேடமான பூசை நடப்பித்து வழிபாடு செய்தலும் வழக்கமாக இருந்து வந்தது.

★

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியரின் பிற நூல்கள்

## நாடகம்

நாணுடகம்
இரு நாடகம்
சங்கிலி
மாணிக்கமாலை

## நவீனம்

பூஞ்சோலை
வாழ்க்கையின் விநோதங்கள்
நீரர மகளிர்

## கவிதை

காதலியாற்றுப் படை
தூவுதும் மலரே

படிப்பகம்